# இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள்



# இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள்

*இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்*

*மற்றும்*

*இகுவிடாஸ் - மனித உரிமைக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்*

*2018*

இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள்

கொழும்பு, 2018

Ⓒ 2018 இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் மற்றும இகுவிடாஸ்,

இல. 2, கின்ஸி டெரேஸ்,

கொழும்பு 8, இலங்கை

மின்னஞ்சல்: admin@ices.lk

இணையத்தளம்: www.ices.lk : www.equitas.org

ISBN 978-955-580-230-7

இந்த பிரசுரத்திற்கான பதிப்புரிமையானது இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ICES) மற்றும் Equitas ஆகியன கொண்டுள்ளன. இந்த புத்தகத்தின் எந்த பகுதியும், ஆசிரியருக்கும் வெளியீட்டாளர்களுக்கும் சரியான ஒப்புதலுடன் மீண்டும் உருவாக்கப்படலாம். ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விளக்கங்களும் முடிவுகளும், ஆசிரியர்களின் கோரிக்கைகள் மற்றும் ICES, Equitas அல்லது நன்கொடையாளரின் காட்சிகள் மற்றும் கொள்கைகளை அவசியம் பிரதிபலிக்காது.
கனடா உலகளாவிய விவகார பிரிவின் மூலம் வழங்கப்பட்ட கனடா அரசாங்கத்தின் நிதியுதவி மூலம் இந்த வெளியீடு சாத்தியமானது.

Canada This activity is made possible with the financial support of the Government of Canada provided through Global Affairs Canada.

பதிப்பகம் : Horizon Printing (Pvt.) Ltd.

1616/6, ஹதராமன் சந்தி,
மாலபே வீதி, கொட்டாவ,
பன்னிப்பிடிய.

அட்டைப்பட வடிவமைப்பு : நடாசா கரூனாறட்ன

# இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள்

*நடீன் வன்னியசிங்கம*

*கசுன் பதிராஜ*

*மொஹமட் பஸ்லான்*

*டினுஷ்கா ஜயவிக்ரம* [1]

*இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்*

*மற்றும்*

*இகுவிடாஸ் - மனித உரிமைக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்*

***2018***

---

[1] *நடீன் வன்னியசிங்கம் இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் ஆய்வாளர் ஆவார். கசுன் பதிராஜ இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் சிரேஸ்ட நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆவார். மொஹமட் பஸ்லான் கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பிரிவினைச் சேர்ந்த விரிவுரையாளர் ஆவார். டினுஷ்கா ஜயவிக்ரம இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தராக கடமை புரிந்ததுடன் தற்போது சுயாதீன தொழில் புரிகின்றார்.*

***நன்றியுரை***

*இந்த ஆய்வு இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் மற்றும் ஈகியுடாஸ் - மனித உரிமைக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட முரண்பாட்டை தரைப்படமாக்கல் செயற்பாட்டிலிருந்து உருவாவதாகும். அச் செயற்பாடானது முரண்பாட்டை குறைப்பதற்கு மனித உரிமைகள் அடிப்படையிலான அனுகுமுறையை கொண்ட ஒரு பயிற்சி நெறியொன்றை வடிவமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வறிக்கை நடீன் வன்னியசிங்கம் அவர்களால் எழுதப்பட்டதுடன் இந்த ஆய்வானது நடீன் வன்னியசிங்கம், மொஹமட் பஸ்லான், கசுன் பத்திராஜ, டினுஷ்கா ஜயவிக்ரம ஆகியவர்கள் உள்ளடங்கிய ஆய்வுக் குழுவினரால் வடிவமைக்கப்பட்டு பண்பினத் தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.*

*தங்களது அபிப்பிராயங்களை, அனுபவங்களை பகிர்ந்த நேர்காணல்களில் பங்குபற்றிய அனைவருக்கும் நான்கு மாவட்டங்களிலும் கூட்டங்களை ஒழுங்கமைத்த சக ஊழியர்களுக்கும் முன்னட்டையை வடிவமைத்த நடாசா கருணாரட்னவிற்கும் ஆய்வுக் குழுவின் சார்பில் எங்களது நன்றியை தெரிவிக்கின்றோம். மேலும் இவ் ஆய்வறிக்கையினை திருத்தியதுடன் மீளாய்வு செய்த ஷர்னி ஜயவர்த்தனவிற்கும் ஆக்கப்பூர்வமான பின்னூட்டத்திற்காகவும் தங்களது பெறுமதியான நேரத்தை ஒதுக்கியமைக்காகவும் கலாநிதி மரியோ கோமஸ், செல்வி மிலாகுரோஸ் ஆர்குவெல்ஸ், கலாநிதி நிரேகா வீரதுங்க, கலாநிதி பெஞ்சமின் ஷோன்தால், கலாநிதி நீல் டீவொடா, கசுன் பத்திராஜ, மொஹமட் பஸ்லான் ஆகியோரிற்கும் எங்களது நன்றிகளை தெரிவிக்கின்றோம்.*

## உள்ளடக்கம்


அறிமுகம் .......... 1

ஆய்வின் எல்லைகள் .......... 7

1. அமைவிடம் - நான்கு மாவட்டங்கள் தொடர்பான ஓர் கண்ணோட்டம்.......... 8

2. மதங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் போட்டிப் பரப்புக்கள், முகவர்கள், இயல்பாக்கும் நிலைமைகள் .......... 16

2.1. புனித இடங்கள் மற்றும் சின்னங்கள் மீதான போட்டிகள்.......... 17

2.1.1. தமிழ் இந்து இடங்களை பௌத்தமயமாக்கல்: போருக்கு பின்னரான புதிய முக்கியத்துவம் .......... 17

2.1.2. அடையாளமும் அதிகரித்த புலப்படும் தன்மை ஊடான ஆதிக்கமும்: மதச்சிலைகளை போட்டியாகவும் இடுகுறியாகவும் நிறுவுதல .......... 21

2.2. தீவிரவாதத்தின் வளர்ச்சி, வெறுப்பு பேச்சு, நம்பிக்கையின்மை ஆகியவையும் சமூக ஊடகத்தின் பங்கும .......... 24

2.3. கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம், கலப்புத் திருமணம், “நெறிமுறையற்ற” மதமாற்றங்கள் .......... 29

2.4. சாதியப் பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை .......... 33

2.5. ஆட்புலத்தை விஸ்தரித்தல்: இன-மத ஆதிக்கத்தின் குறியீடாக காணி.......... 35

2.6. காணி மற்றும் உரிமைத் தகுதி: போருக்கு பின்னரான பரிசீலனைகள்.......... 39

2.7. தொழில், அரச பயன்களுக்கான பெறுவழி: சமத்துவத்திற்கான கோரிக்கை.. 43

2.8. நிறுவனமயப்படுத்தப்பட இனவாதமும் சிறுபான்மையினருக்கு சொந்தமான நிறுவனங்களை கைப்பற்றுதலும் .......... 47

2.9. பொருளாதாரம் மற்றும் வியாபார போட்டி.......... 48

3. மதங்களுக்கிடையிலான மோதல்: மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வு .......... 51

3.1. மன்னார் .......... 51

3.2. யாழ்ப்பாணம்.......... 52

3.3. அம்பாறை.......... 53

3.4. மாத்தறை .......... 54

4. மதங்களுக்கிடையிலான மோதலில் கவனிக்கப்பட வேண்டிய மோதல்தீர்வு உத்திகள் மற்றும் மதங்களுக்கிடை யிலான குழுக்களின் வகிபாகம்.......... 58

4.1. மன்னார் .......... 58

4.2. யாழ்ப்பாணம்.......... 60

4.3. அம்பாறை.......... 61

4.4. மாத்தறை .......... 62

5. பெண்களும் மதங்களுக்கிடையிலான மோதலும்: பங்கேற்றல் மற்றும் வகிபாகங்கள் ........ 64

5.1. மன்னார் ........ 65

5.2. யாழ்ப்பாணம ........ 66

5.3. அம்பாறை ........ 67

5.4. மாத்தறை ........ 68

6. முடிவுரை ........ 71

*அறிமுகம்*

*இலங்கை மக்களின் "சுய" பிரபலமான மற்றும் அரசியல் கற்பனைகளிலிருந்தும், தேசத்தின் தேசியவாத கருத்தாடல்கள், சுயநிர்ணயம், இறைமை மற்றும் சிறப்புரிமை ஆகியவற்றிலிருந்து மதம் மற்றும் இனத்துவம் ஆகிய இரண்டையும் பிரக்க முடியாது. சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை தேசிய அரசு உருவாக்கத்தின் மையப்பொருளாக மதமும் இனத்துவமும் மையப்பொருளாகக் காணப்படுவதுடன், சிங்கள பௌத்தத்தை தேசிய அடையாளமாக உருவாக்குதல் மற்றும் நாட்டில் ஒரு தேசியமாக சிங்கள பௌத்த அரசியலமைப்பினுடாக பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் சான்றுபகர்கின்றன. இந்து, கிறித்துவம், இஸ்லாமியம் ஆகியவற்றைப் பின்பற்றும் தமிழர்கள், முஸ்லிம்கள், மற்றும் மலைநாட்டு தமிழர்கள் ஆகிய மூன்று இனத்துவ மத சிறுபான்மையினரை உள்ளடக்கிய ஒரு நாட்டில், இன மற்றும் மத அடிப்படையிலான ஒன்றுதிரட்டல்கள் மற்றும் மோதல்கள் ஏற்படுவது ஆச்சரியமல்ல.*

*தேசிய ரீதியில், சிங்கள பெருபான்தையினருக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்துவ மத சிறுபான்மையினருக்கும் இடையிலான பிரிவினையானது 1950 ஆண்டுக்கு பின்னர் கொண்டுவரப்பட்ட சிங்களம் மாத்திரம் எனும் சிங்கள மொழியியல் தேசியவாத்தினால் மேலும் விரிசலடைந்ததுடன், 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலிலான இனரீதியான யுத்தத்துக்கு வித்திட்டது எனலாம். அரச அனுசரனையில் இடம்பெற்ற மதத் தேசியவாதம் மற்றும் கடும்போக்குவாத பௌத்த குழுக்களின் உருவாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட வெறுப்பேற்றும் பேச்சுக்களும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளும் கிறிஸ்தவ மற்றும் இந்துக்களின் வழிபாட்டுதளங்கள் மீதான வன்முறைகள, 2009 ம் ஆண்டிற்கு பின்னர் மதங்களுக்கிடையிலான விரிசலடையக் காரணமாயிற்று. இது போரிற்கு முன்னர் இனத்துவ மதங்களுக்கிடையிலான வன்முறைகள் இடம்பெறவில்லை என்று அர்த்தமில்லை. மதம் என்பது காலணித்துவக் காலத்தில் மற்றும் சுதந்திரத்திற்கு பின்னரான காலத்திலும் மோதல் மற்றும் வன்முறைக்கும் அடிப்படையாக காணப்பட்டது எனக் கூறலாம். 16ம் நூற்றாண்டில் 4ம் சங்கிலி மன்னனினால் மன்னாரில் இடம்பெற்ற தமிழ் கத்தோலிக்கர்களுக்கு எதிரான இனப்படுகொலை தொடக்கம் 1883 ம் ஆண்டு இடம்பெற்ற கத்தோலிக்கவர்களுக்கு எதிரான கலவரம், 1915ம் ஆண்டு இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம், சுதந்திரத்திற்கு பின்னரான மற்றும் போரிற்கு பின்னரான இன, மத ரீதியான வன்முறைகள் குறிப்பாக 1983ம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான கலவரம் மற்றும் முஸ்லிம்களுக்கு*

*எதிரான அண்மையில் இடம்பெற்ற அதிகரித்த வன்முறைகள்*[2] *என்பன மதம் மற்றும் மத ரீதியான அடையாளம் என்பன தொடர்ச்சியாக (ஒரு தொழிலாக) மோதலைத் தூண்டுகின்ற (அடிப்படையாக) காணப்படுவதுடன் மேலாதிக்க (அரசியல்) உந்து சக்கியாகவும் காணப்பட்டு வருகின்றன.*

*உயர்மடமத்திலுள்ள அரசியல்வாதிகளினால், மொழி ரீதியாக அல்லது இனத்துவ ரீதியாக அல்லது மத்ததை சுயநலனுக்காக அல்லது கட்சியினுடைய நலனுக்காக கையாண்டு மற்றவருக்கு எதிராக பேரம்பேசுதல் இன மதரீதியான வன்முறைகளுக்கு காரணமாக அமைந்துள்ளதென அரசியல் விஞ்ஞானிகள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர் (டி வொட்டா 2004 மற்றும் 2018; தேவசிரி 2017). இலங்கையில் உள்ள மத வன்முறை தொடர்பாக இனம், மதம், அடையாளம் மற்றும் அரசியலுக்கும் இடையே உள்ள தொடர்பை பல ஆய்வுகள் ஒப்புக்கொண்டுள்ளன அல்லது பரீட்சித்துள்ளன. (திலகரத்ன 2015, குணதிலக 2015 மற்றும் 2018, ஹேரத் மற்றும் ரம்புக்வெல்ல 2015, தேவசிரி 2017, டி வோட்டா, 2018). மேலும் இத்தகைய ஆய்வுகளில்*[3] *பெரும்பான்மையானவை (சரியாக) அதிக்ஷ்டவசமாக பௌத்த-முஸ்லிம் உறவுமுறையானது 2009 ஆம் ஆண்டின் யுத்தம் முடிவிற்கு வந்ததன் பின்னர் அரச அங்கீகாரத்துடன் முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிராக அதிகமான பிரச்சாரங்கள், வெறுப்புணர்வு, வன்முறை மற்றும் கலவரங்கள் காரணமாக,ஏற்பட்ட பாதிப்புக்களை ஆராய்வதாக காணப்படுகின்றன. உண்மையில் 2018 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், தனிப்பட்ட பிணக்குகளால் உருவான பின்னர் அரசியல் லாபத்திற்காக பாரிய மோதலாகக் கையாளப்பட்ட அம்பாறை மற்றும் கண்டி ஆகியவற்றில் அண்மையில் இடம்பெற்ற முஸ்லீம்-விரோத கலவரங்களின் பின்னணியில் பௌத்த-முஸ்லீம் உறவுகள் பற்றிய ஆய்வு தொடர்ச்சியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இலங்கையில் வன்முறை மற்றும் மோதல்களைத் தூண்டுவதற்கான கருத்தியல் தளங்கள் இன, மத வேறுபாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதை இந்த சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.*

*எவ்வாறெனினும், இலங்கையில் இன மற்றும் மத உறவுகள் மற்றும் மோதல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான இத்தகைய பேரினமட்ட அணுகுமுறைகள், அரசியல் உயர்குலமினரின் (அணிதிரளிகள்) கண்ணோட்டம் மற்றும் போக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஆராய்கின்றதன் தேவையை வலியுறுத்துகின்றதுடன், இது மத உறவுகளுக்கான மக்களுடைய் பங்கையும் (அணிதிரட்டல்) எடுத்துக்காட்டுகின்றது.*

---

[2] *ராஸிக் மற்றும் ஏனையோர் எழுதிய* 'Hate Campaign and Attacks against the Muslims in Recent Sri Lanka' (2018) *பார்க்க*

[3] *பௌத்த மற்றும் தமிழ்/ கத்தோலிக்க உறவுகள் பற்றிய பல இனத்துவ மத ஆய்வுகள் 1983 - 2009 வரையான யுத்தகாலங்களில் கனனாத் ஒபேசேகர, ஹஸ்புல்லாஹ், தம்பையா, ஜொனதன் இஸபென்சர் மற்றும் பெட்ரிக் பீபல்ஸ் ஆகியோரினால் எழுதப்பட்டுள்ளது*

*சிங்கள-தமிழ் மற்றும் பௌத்த-முஸ்லீம் என இருகூறாக்கப்பட்ட உறவுகளுடன் மாத்திரம் இனவாத-மத உறவுகள் பார்க்கப்பட்டுள்ளதுடன் இலங்கையிலுள்ள இனக் குழுக்களுகிடையிலான உறவுகளை தீரமானிக்கும் ஏனைய விடயங்கள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. மேலும், மதம் மற்றும் மதச் சித்தாந்தங்களால் கூறப்படுகின்ற அல்லது அறிவிக்கப்படுகின்ற பேரினகதையாடல்களினால் (ஹோல்ட் 2015), பாரிய அரசியல் விளையாட்டின் ஒரு பகுதியாக இலங்கையின் அரசியலில் பேரினவாத தேசிய உள்ளுணர்வுடனான உந்துதல் அளிக்கப்பட்டதாகவும், தொடர்புடையதாகவும் காணப்படுவதுடன், அரசியல் விளையாட்டில் சிறுபான்மை பெரும்பான்மை என்பதாக சித்தரிக்கட்டு இலங்கையை ஒரே விதமான போக்கையுடையதாக எடுத்துக்காட்டடுவது புரிந்துகொள்ளலை வரையறுக்கின்றது.*

*இந்த ஆய்வானது, இலங்கையில் இன-மத உறவுமுறை நாட்டின் பல பிராந்தியங்களினால் வரையறுக்கப்படுகின்றது (ஹஸ்புல்லா மற்றும் கோர்/ப் 2012, மேயர் 2013, ஷெபர்ட்சன் 2014, ஸ்பென்சர் மற்றும் பலர் 2015) என்பதை ஏற்றுக்கொள்கின்றதுடன், இது வரலாற்றுரீதியாக, குடியியல் ரீதியாக, அரசியல் ரீதியாக, சமூக, கலாச்சார ரீதியாகவும், புவியியல்ரீதியாகவும் வடக்கு-தெற்குப் பிளவுகளின் அடிப்படையில் மாத்திரம் அல்ல, மாறாக வடக்கிலும் தெற்கிலும் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்குள்ளும் இந்த வேறுபாடுகளினடிப்படையில் வேறுபடுகின்றது. இந்த வாதத்திற்கு ஆதாரமாக, அப்பாத்துரை (1998) குறிப்பிடுகின்றபோது, "இனவாத வன்முறையைச் சித்தரிக்கும் நுண்ணிய நிகழ்வுகளுக்கு பேரினமட்ட செயன்முறைகளைத் தொடர்புபடுத்துவது கடிணமாகும்" (பக்கம் 3). இதனை உறுதிப்படுத்தும் வகையில், நாகராஜ் மற்றும் ஹனீபா (2017) ஆகியவர்கள், இனத்துவ மற்றும் மத உறவுகள் பற்றி ஆராய்கின்றபோது, இனத்துவம் மற்றும் தேசிய அடையாளம் ஆகியவறிறை முற்கோளாகக்கொண்டு ஆராய்வதற்கு அப்பால் சென்று, நுண்ணிய மட்ட "அரசியல் மற்றும் பொருளாதார புவியியல்" ஆகியவையும் இனத்துவ மத உறவுகளை வடிவமைக்கின்றது (பக்கம் 41) என கீறுகின்றனர். குணதிலக (2018) மேலும், "குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவுகள் மற்றும் இயக்கவியல் நிகழ்வுகள் மற்றும் மதசார்பு வன்முறை அதிகரிப்பிற்கு பெரும் பங்களிப்பு செய்கின்றன" (பக். 39) என்று கூறுகின்றார். ஆகையால், சமூக, கலாச்சார, பொருளாதார, மத மற்றும் அரசியல் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட வெற்றிடம் மற்றும் சூழமைவு ஆகியன மதங்கிடையிலான உறவுகள் மற்றும் மோதல்களை விளங்கிக் கொள்ள உதவுகின்றன.*

*ஏற்கனவே மேலே குறிப்பிட்டபடி, பல ஆய்வுகளானது மதங்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் மோதல்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்வதற்கான இனம், அடையாளம் மற்றும் அரசியல் மேலாதிக்கம் எனும் கோணங்களில் அணுகி உள்ளன. வேறு சிலர் ஸ்டார்க் மற்றும் பின்க் (2000) போன்றவர்கள், மத ரீதியான*

பொருளாதாரத்தை கேள்வி மற்றும் நிரம்பல் இடம்பெறுகின்ற சந்தையொன்றுக்குள் இடம்பெறுகின்ற மதப் பொருளாதாரத்தின் பொருளாதார வாசிப்பு என திடமாகக் கூறியுள்ளனர். பைபிள் ஆய்வுகள் குறித்த கனேடிய சமூகத்தால் நடத்திய மதப் போட்டிகள் கருத்தரங்குகள், மேலும் சகவாழ்வு, ஒத்துழைப்பு, போட்டி மற்றும் மோதல் தொடர்பாக மதங்களுக்கிடையிலான உறவுமுறை குறிப்பிட்ட சந்தைச் சுழலில் பார்க்கப்படுகின்ற புதிய மாதிரிகளை முன்வைத்துள்ளது (மேயர் 2013). இருப்பினும், கூட்டுறவு, போட்டி, மற்றும் மோதல் ஆகியவற்றுக்கிடையிலான வரைவிளக்கணங்களின் ஒன்றையொன்று மேவல்கள மற்றும் தெளிவற்ற வரையறைகள் ஆகியவற்றால் மதங்களுக்கிடையிலான உறவுகள் தெளிவற்றதாகவும் நேர்த்தியற்றதாகவும் காணப்படுகின்றன (பஸ்லான் மற்றும் வன்னியசிங்கம், 2015). மேயர் (2013), இந்த ஆய்வில் பிரேரிக்கப்பட்டுள்ள விதமாக, மதங்களுக்கிடையிலான மோதல்களை பகுப்பாய்வு செய்வதற்கு, முழுமையான மற்றும் திறந்த சட்டகம் அவசியமாகின்றது" பின்வரும் நிலைமைகள் திருப்தி அடைந்தால் மத மோதல் ஏற்படலாம் என அவர் கூறுகிறார்.

(1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டு முகவர்கள் ஈடுபட்டிருத்தல் மற்றும் முகவர்களைக் கொண்டிருத்தல், உதாரணமாக, வேறுபட்ட மதங்கள், ஒரே மதத்தின் வேறுபட்ட பிரிவினர், ஒரே மதத்தின் ஒரே பிரிவினரிருக்கு இடையில் மற்றும் அல்லது மதச்சார்பற்ற அதிகாரங்கள்

(2) ஒரு களம் - உதாரணமாக கருத்தியல்/ஒழுக்கம், அதிகாரம், ஆளுமை, இடம் /வெற்றிடம், குழு அடையாளம் என்பன தனியாகவோ இணைந்தோ போட்டியிடல்

(3) ஆதரவளிக்கும் நிபந்தனைகள் - உதாரணம் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார மற்றும் உளவியல் காரணிகள் மற்றும்

(4) மதமானது ஈடுபடுத்தப்பட்டிருத்தல் ( எந்தளவு ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பது பொருத்தமற்றதாக கருதப்படுகின்றது)

உள்ளூரில் காணப்படுகின்ற மதங்களுக்கிடையிலான உறவுமுறைகள், மாற்றீடுகள் மற்றும் மேல்மட்ட கதையாடல்களுக்கான நிரப்புதல் ஆகிய உள்ளூர் புரிதல்களை மனதில் வைத்துக்கொண்டு, இந்த ஆய்வானது இலங்கையிலுள்ள நான்கு மாவட்டங்களான, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் வடக்கு மாகாணத்திலும், அம்பாறை கிழக்கு மாகாணத்திலும் மற்றும் மாத்தறை தென் மாகாணத்திலுமுள்ள முகவர்கள், களங்கள் மற்றும் ஆதரவளிக்கும் நிபந்தனைகள் தொடர்பான பரீட்சிப்பு மற்றும் ஒப்பீடு ஆகியவற்றை மேற்கொள்கின்றது. இந்த மாவட்டங்களானது சூழ்நிலையைப் பொருத்தவரையில் தனித்துமானதாகவும் வேறுபட்ட இன பெரும்பான்மையையும் கொண்டுள்ளன (மன்னாரில் கத்தோலிக்க மதத்தவர்களும், இந்துக்கள்

யாழ்ப்பாணத்திலும், முஸ்லிம்கள் அம்பாறையிலும் மற்றும் சிங்களவர்கள் மாத்தறையிலும் காணப்படுகின்றார்கள்). எனவே இந்த ஆய்வானது வெறுமனே அண்மையில் இடம்பெற்ற முஸ்லிம்-சிங்கள உறவுமுறைகளை மாத்திரம் பகுப்பாய்வு செய்வதிலிருந்து விலகிச் சென்று, இலங்கையிலுள்ள நான்கு பிரதான மத சமுகங்களுக்கிடையிலான (பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையிலான) உறவுமுறை பற்றி புரிந்துகொள்வதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதன் மூலமாக இலங்கையில் இன-மத உறவுமுறை மற்றும் மோதல்கள் எவ்வாறு வித்தியாசமான சமூக-பொருளாதார அரசியல் மற்றும் கலாச்சார அமைப்புக்குள் ஏற்படுகின்றது என்பதனை மிக ஆழமாக அறிந்து கொள்வதற்காக வழிவகுக்கின்றது.

இது ஒருபுறமிருக்க மற்றொரு அம்சம் யாதெனில், முந்தைய மதங்களுக்கிடையிலான ஆய்வுகளில் இருந்து வேறுபட்டு, ஆராய்ச்சி மாதிரியில் பெண்களை வேண்டுமென்றே மற்றும் திட்டமிட்ட முறையில் உள்வாங்கியமையாகும். போர் மற்றும் மோதல்கள் பற்றிய கருத்தாடல்களில் பெண்கள், ஒடுக்கப்பட்டு பாதிப்புற்றவர்களாக அல்லது ஆண்மைய முகவர்களின் இயங்கும் பொருட்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன. எனவே, மோதல், மத வன்முறை, மோதல் தணிப்பு மற்றும் மோதல் உருமாற்றம் பற்றிய ஆய்வுகளில் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. இந்த ஆய்வில், சகவாழ்வு மற்றும் மேதால்களை ஊக்குவிப்புதலில் தெளிவாகவும் கருத்தியல் ரீதியாகவும் பங்களிப்புச் செய்யும் முகவராக பெண்களும் கருதப்பட்டுள்ளனர். எனவே, பதிலளித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் ஆவார்கள்.

இந்த ஆய்வானது பின்வரும் ஆய்வு வினாக்கள் மூலம் வழிநடாத்தப்பட்டது.

1. ஒவ்வொரு மாவட்டத்திலும் என்ன வகையான மதங்களுக்கிடையிலான பிரச்சினைகள் காணப்பட்டன? அவை எவ்வாறு சமூகத்தில் தாக்கம் செலுத்தியது? (ஆதரவளிக்கும் நிபந்தனைகள் மற்றும் களம்)
2. இந்த பிரச்சினைகளுக்கு என்ன அல்லது யார் காரணமாக பார்க்கப்படுகின்றார்கள் (முகவர், களம் மற்றும் ஆதரவளிக்கும் நிபந்தனைகள்)
3. என்ன மோதல் தீர்வு முறைமை அணுசரிக்கபட்டது, யாரால், மோதல்களை தவிர்ப்பதில் இந்த முறைமை எந்தளவு வினைத்திறனாக செயற்பட்டது. (முகவர் மற்றும் களம்)
4. மதங்களுக்கிடையிலான உறவுமுறை தொடர்பான பெண்களின் கரிசணைகள் என்ன? இது ஆண்களின் கரிசனையிலிருந்து வேறுபட்டதா? மதங்களுக்கிடையிலான மோதல்களை ஊக்குவிப்பதில் அல்லது கட்டுப்படுத்துவதில் பெண்களின் ஈடுபாடு எந்தளவிற்கு காணப்பட்டது? (முகவர் மற்றும் களம்)

ஆண் மற்றும் பெண் மதத் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், மத அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் தனிப்பட்ட முக்கிய தகவல் நேர்காணல்கள் நடைபெற்றன. பெண்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் (WRDSs)[4], முஸ்லிம் மகளிர் சங்கங்கள், கிராமப்புற அபிவிருத்தி சங்கங்கள் (RDSs), மாவட்ட சர்வமதக் குழுக்கள்[5], மதங்களுக்கிடையிலான சங்கம், தேவாலய சங்கங்கள், இந்து சமூகங்கள் மற்றும் பொதுமக்களின் உறுப்பினர்கள் ஆகியோருடன் மைய குழுக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. நான்கு மாவட்டங்களில் பொதுமக்களின் சமூக செயலூக்க உறுப்பினர்கள் மற்றும் சாதாரண பொதுமக்கள் இருவரும் எவ்வாறு மத-உறவுகளை எவ்வாறு புரிந்து கொண்டுள்ளார்கள் என்பது பற்றி புரிந்து கொள்ளுதல் அடிப்படையிலேயே இது நடாத்தப்பட்டது. எனவே, தேவைக்கேற்ற மாதிரித் தெரிவானது, பாலினம் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்களின் அனுபவத்தில் மட்டுமல்லாமல், அவர்களின் புவியியல் நிலைப்பாட்டின் அடிப்படையில், பல மத அல்லது எல்லை பிரதேசங்களில் வசிக்கும் பதிலளிப்பவர்கள், இரண்டு வெவ்வேறு சமய சமூகங்கள் ஒன்றுக்கொன்று வாழ்கின்ற அல்லது மோதல்கள் ஏற்பட்டிருக்கின்ற பிரதேசங்கள் என்பவற்றிலிருந்து தெரிவு செய்யபட்டது. தனிப்பட்ட முக்கிய தகவல்கள் நேர்காணலில் பதிலளித்தவர்கள் கடந்த காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வலையமைப்புக்கள் மூலம் உள்ளூர் மத குழுக்கள், நான்கு மாவட்டங்களில் உள்ள தனிப்பட்ட ஆர்வலர்கள் மற்றும் உள்ளூர் சிவில் சமூக அமைப்புகளிலிருந்து உள்வாங்கப்பட்டனர். முக்கிய குழு மற்றும் விவாதக் குழுவின் கலந்துரையாடல்களால் ஆய்வுக் குழுவுக்கு புதியவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது பனிப்பந்து மாதிரி முறை பின்பற்றப்பட்டது.

இருபத்தியிரண்டு தனிப்பட்ட முக்கிய தகவல் நேர்காணல்களும் 17 மையக் குழு கலந்துரையாடல்களும் 2017 மார்ச் முதல் 2017 ஜூன் வரை, மற்றுமும் ஏப்ரல் முதல் மே 2018 வரையிலான காலப்பகுதியில் நான்கு மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. மையக் குழுக்கலந்துரையாடல்களானது ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேறு வேறாக நடாத்தப்பட்டது. இங்கு மோதல் தவிர்ப்புக்களில் அல்லது கட்டுப்படுத்துவதில் மதங்களுக்கிடையிலான உறவுமுறைகளை கட்டியெழுப்புவதில் வெவ்வேறான அணுகுமுறைகள் அல்லது உபாயங்கள் காணப்படுகின்றதா என்பதனை புரிந்து கொள்வதற்காக நடாத்தப்பட்டது.

---

[4] பெண்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் (WRDSs) ஆகியன பெண்களுக்கான அரசினால் நடாத்தப்படும் சமூகமட்ட ஒழுங்கமைப்புகளாகும். இவ்வொழுங்கமைப்பகள் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் அமையப் பெற்றுள்ளன. அபிவிருத்தி உத்தியோகத்தரின் மேற்பார்வையின்கீழ் இவ்வமைப்புகள் இயங்குகின்றன.

[5] இலங்கையில் சிங்கள முஸ்லிம் மோதல்கள் அதிகரித்தபொழுது அவற்றுக்கு முகம்கொடுப்பதற்காக, 2013 ஆம் ஆண்டு தேசிய சமாதானப் பேரவையினால் சர்வமதக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இவ்வமைப்புகள் யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், காலி, மட்டக்களப்பு, அம்பாறை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இயங்குகின்றன.

**ஆய்வின் எல்லைகள்**

*இந்த ஆய்விற்கான தரவு 2017 ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலங்களில் சேகரிக்கப்பட்டது. தரவு சேகரிப்பின் போது பதிலிருப்பவர்களின் நேரம் மற்றும் இருப்பு ஆகியவற்றின் காரணமாக, மாத்தறையில் இருந்து கத்தோலிக்க மற்றும் இந்து மதகுருமார்களின் கருத்துக்கள் மற்றும் மன்னாரில் இருந்த கத்தோலிக்க மதக் குருக்களின் கருத்துக்களை சேர்க்க முடியாது போய்விட்டது. இந்த இடைவெளியை பூர்த்தி செய்ய 2018 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மாத்தறை மற்றும் மன்னார் ஆகியோர் மீண்டும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. எனவே, மாத்தறையில் இருந்து குறிப்பிட்ட மாவட்ட தரவுகளிலிருந்து குறிப்பிட்ட காலப்பகுதியில் காணப்பட்ட பெறுபேறு வேறுபடலாம் (குறிப்பிடத்தக்கது அல்ல). ஆய்வு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இருக்கவில்லை என்பது கவனிக்க வேண்டியது அவசியம். ஆனால், ஒவ்வொரு குழுவிற்கும் உள்ள முக்கிய பிரச்சினைகளை அடையாளம் காண முக்கிய தகவல் தொடர்பு நேர்காணல்களைப் பயன்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நேர்காணல்கள் பெரும்பாலும் யாழ்ப்பாண நகரத்தில் மையப்படுத்தப்பட்டன. எனவே, ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் எதிர்கொண்டுள்ள ஒட்டுமொத்த சிக்கல்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன.*

*நான்கு மாவட்டங்கள் ஏற்கனவே இன-மத பதற்றங்கள் அல்லது மோதல்களின் தளங்கள் என்று புரிந்து கொண்டு தரவு சேகரிப்பு நிலைநிறுத்தப்பட்டது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறது. எனவே, ஆய்வுக்குள்ளான குறைபாடு என்னவென்றால் அது இன-மத ஒத்துழைப்பை மேம்படுத்துகின்ற அம்சங்களை ஆய்வு செய்யவில்லை. இன-மத அழுத்தங்கள் மற்றும் மோதல்களில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்த ஆய்வு சகவாழ்வு தொடர்பாக மோதலை அதிகரிக்கத் தோன்றலாம். இந்தக் கட்டுரையின் நோக்கம் உள் மத பதற்றங்கள் மற்றும் மோதல்களின் தன்மையை புரிந்துகொள்வது மற்றும் அவை எவ்வாறு உள்ளூர் மட்டத்தில் பேசப்படுகின்றன என்பதாகும். மேலும் இவ்வாய்வானது மதங்களுக்கிடையிலான உறவுகளில் பெண்களின் வகிபாகம் பற்றிக் கலந்துரையாடுவதுடன் கொடுக்கப்பட்ட சட்டகத்தினுள் நான்கு கிராமங்களுடைய இயங்குநிலைகளையும் பகுப்பாய்வு செய்கின்றது.*

## *1. அமைவிடம் - நான்கு மாவட்டங்கள் தொடர்பான ஓர் கண்ணோட்டம்*

*__மன்னார்__[6] மாவட்டமானது பிரதானமாக கத்தோலிக்கர்களையும் இரண்டு சிறுபான்மை சமூகங்களான முஸ்லீம்களையும் இந்துக்களையும் கொண்டுள்ளது. 2012 ம் ஆண்டு தேசிய சனத்தொகை கணக்கெடுப்பு புள்ளிவிபரங்களின் அடிப்படையில் மொத்த மக்கள்தொகை 99570 ஆகும். இதில் 52415 பேர் (52.6 வீதம்) கத்தோலிக்கர்களாகவும் 24027 பேர் (24.1 வீதம்) இந்துக்களாகவும் 16512 பேர் (16.5வீதம்) முஸ்லிம்களாகவும் 4790 பேர் (4.8 வீதம் ) கிறிஸ்தவர்களாகவும் 1809 பேர் (1.8 வீதம்) பௌத்தர்களாகவும் மற்றும் 17 பேர் ஏனைய மதங்களை சேர்ந்தவர்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னார் நகரில் 8063 கத்தோலிக்க குடும்பங்கள், 7306 முஸ்லிம் குடும்பங்கள், 3178 இந்துக் குடும்பங்கள், 494 ரோமன் கத்தோலிக்கர் அல்லாத (கிறிஸ்தவ) குடும்பங்கள் மற்றும் 4 சிங்கள புலம்பெயர்ந்த மீனவ குடும்பங்கள் காணபப்படுகின்றன. (அரச உத்தியோகத்தர், கத்தோலிக்க ஆண், தனிப்பட்ட தொடர்பாடல், மார்ச் 8, 2017).*

*மன்னார் மாவட்டம் காலனித்துவ காலத்திலிருந்து கத்தோலிக்க அடையாளம் கொண்டதாக இருந்து வந்துள்ளது. ஏனெனில் இது மடு தேவாலயம் அமைந்துள்ள மாவட்டமாகவும் 16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கர்கள் படுகொலை செய்யப்பட்ட இடம் அமைந்துள்ள மாவட்டமாகவும் உள்ளது.[7] மன்னார் மாவட்டமானது வலுவான இந்து அடையாளத்தையும் கொண்டுள்ளது. இங்கு பழங்கால புகழ்பெற்ற புனித தலமான திருக்கேதீஸ்வரம்[8] உள்ளது. இந்த ஆலயம் சிவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஆலயமாகக் கருதப்படுகின்றது. மன்னார் அதன் மத அடையாளத்திற்கு மேலதிகமாக 30 ஆண்டுகால இன மோதல் வரலாற்றினால் உருவமைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட முன்னால்*


---

*[6] மன்னாரில் 2017, மார்ச் 6ம் திகதியிலிருந்து 8ம் திகதி வரை மதத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், முக்கிய தகவல் வழங்குனர்கள் ஆகியவர்களுடன் ஒன்பது தனிப்பட்ட நேர்காணல்கள் நடத்தப்பட்டதுடன் பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கங்களுடன் (WRDS) மூன்று மையக்குழு கலந்துரையாடல்களும் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த முக்கிய நபர்களுடன் ஒரு மையக்குழு கலந்துரையாடலும் நடத்தப்பட்டது. மேலும் 2018 ஏப்பிரலில் ஒரு நேர்காணலும் நடத்தப்பட்டது.*

*[7] கத்தோலிக்கம் போர்த்துக்கேயர்களினால் 16ம் நூற்றாண்டில் இலங்கையில் நிறுவப்பட்டது. இதனால் போர்த்துக்கேயர்களுடன் போரிட்ட சிங்கள்வர்களாலும் தமிழ் மன்னர்களாலும் கத்தோலிக்கர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர். "கத்தோலிக்கர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவது தெற்கிலும் பார்க்க வடக்கில் கடுமையாக இருந்தது. 1543 - 1544 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் மதம்மாறிய 600 மக்கள் பட்டித்தோட்டத்தில் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனால் படுகொலை செய்யப்பட்டனர். இன்று மரித்தவர்களை புதைத்த இடத்தை குறிக்கும்விதமாக தலைமன்னார் வீதியையொட்டி ஒரு தேவாலயம் உள்ளது." மேற்குறிப்பிட்டவாறு பின்ரோ (2015) குறிப்பிடுகின்றார்.*

*[8] "திருக்கேதீஸ்வரம் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரத்திலிருந்து ஏழு மைல்கள் வடக்காக மாந்தோட்டத்தில் அமைந்துள்ள பழமைவாய்ந்த கோவிலாகும். புராண கருத்தின் அடிப்படையில் இது கேது பகவான் ஈஸ்வரனை (சிவன்) வழிபட்ட தொன்மையான கோவிலாகும். அதனால் இத்தலத்திற்கு திருக்கேதீஸ்வரம் என்ற பெயர் கிடைத்தது'. அந்தப் பாரிய கோவில் போர்த்துக்கீசர்களினால் முழுமையாக அழிக்கப்பட்டதுடன் அதன் கற்கள் மன்னார் கோட்டை கட்டவும் தேவாலயங்கள் கட்டவும் ஊர்காவற்துறை கோட்டை கட்டவும் பாவிக்கப்பட்டது'. 19ம் நூற்றாண்டில் இலங்கையில் சைவத்தின் மறுமலர்ச்சிக்கு பொறுப்பாக இருந்த ஆறுமுக நாவலர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கோவிலை மீளக்கட்டியெழுப்ப இந்துக்கள் கடமைப்பட்டுள்ளார்கள் என அவர்களுக்கு உணரவைத்தார். 1872ல் அவரது வேண்டுகோள் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கோவில் இருந்த அதே இடம் 1894ல் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில சீரமைப்புப் பணிகள் இடம்பெற்றன." (த ஹிந்து, டிசம்பர் 6, 2002, இணையத்தளப் பதிப்பு)*

*ஆயர் இராயப்பு ஜோசப் ஆளுனர் ஒருவருக்கான வகிபாகத்தை அக்காலத்தில் ஆற்றியிருந்தார்.*




*இந்த இன முரண்பாடானது மாவட்டத்தில் முஸ்லிம், தமிழ் சமூகங்களுக்கிடையிலான உறவிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. அவ்வழியில் 1990 களில் விடுதலைப் புலிகளால் வடக்கு மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் (ஹஸ்புல்லா 2001, நேசையா 2012). இன்று முஸ்லிம் குடும்பங்கள் மோதல்களுக்கு பின்னர் மன்னாரிற்கு மீண்டும் வந்து தங்களது சொத்துக்களை அரசியல் செல்வாக்கு மிக்க ஒரு முஸ்லிம் தலைமையின் கீழ் மீளக் கோருகின்ற போது அது முஸ்லிம்-தமிழ் உறவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மன்னார் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாகவும் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையில் கடுமையான மோதல்களுக்கிடையில் அகப்பட்ட ஒரு மாவட்டமாகவும் இருக்கின்றது, அதன் பெரும்பான்மை மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து, பின்னர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் உள்ள இன-மத உறவுகள் பல முகவர்களை, களங்களை, இயல்பாக்கும் நிலைமைகளை கொண்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் ஒட்டுமொத்தமாக பார்க்கையில் சமூகங்கள் சமாதானமாகவும் சகவாழ்வுடன் வாழ்கின்றன என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.*


*இந்த ஆய்விற்காக தரவுகளை சேகரிக்கும் போது மன்னார் அதனது மத ரீதியான பன்மைத் தன்மை காரணமாக மற்றும் ஒன்றுக்கொன்று ஏறத்தாழ சமனான விகிதாசார ரீதியில் பரந்து காணப்படுகின்ற சிறுபான்மை மதம் சார்ந்த சமூகங்கள் காரணமாக கத்தோலிக்க-இந்து மோதல்கள், கத்தோலிக்க-முஸ்லிம் மோதல்கள், கிறிஸ்தவர்களுக்கிடையிலான மோதல்கள் (கத்தோலிக்கம் மற்றும் கத்தோலிக்கர் அல்லாத), தமிழ் (கத்தோலிக்க, இந்து) மற்றும் சிங்கள பௌத்த மோதல்கள் (முரண்பாட்டின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் மேலிருந்து கீழாக)*

*காணப்பட்டன. இந்த மோதல்களானது குறித்த சமயக் குழுவினர்களது மனங்களையும், செயல்களையும் வெகுவாக பாதித்துள்ளன. இன விரிசல்களுக்கு எண்ணைய் ஊற்றுபவர்களாக மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், இலங்கை இராணுவம், சர்வதேச முகவர்கள், சுயாதீன கத்தோலிக்க மதகுருமார், தனிநபர்கள் காணப்படுவதுடன், பொருளாதாரம், அரசியல், ஆன்மீகம் மற்றும் கலாச்சார நிலைமைகள் ஆகியன இயல்பாக்கும் நிலைமைகளாக காணப்படுகின்றன.*

***யாழ்ப்பாண மாவட்டமானது***[9] *வரலாற்று ரீதியாக இலங்கைத் தமிழர்களின் கலாச்சார மற்றும் அரசியல் தலைமையகமாக கருதப்பட்டு வந்துள்ளதுடன் வட மாகாண சபையின் தளமாகவும் காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 583,882 மக்கள் தொகையில் 483,255 பேர் இந்துக்களாகவும் (82.7 வீதம்), 2168 பேர் பௌத்தர்களாகவும் (0.3 வீதம்), 75474 பேர் ரோமன் கத்தோலிக்கர்களாவும் (12.9 வீதம்), 2363 பேர் முஸ்லிம்களாகவும் (0.4 வீதம்), 20511 பேர் கிறிஸ்தவர்களாகவும் (3.5 வீதம்) 111 பேர் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள சமூக-அரசியல் காலநிலைக்கு பல காரணிகள் பங்களிக்கின்றன. ஒருபுறம் போருக்குப் பின்னரான உட்கட்டுமானப்பணிகள் இராணுவத்தின் பாரிய ஈடுபாட்டுடன் தொடங்கப்பட்டன. இராணுவம் யாழ்ப்பாணத்தில் கடைகள் மற்றும் ஹோட்டல்களை நிறுவியமையும் அவர்களது பிரசன்னமும் அபிவிருத்தியின் செயற்பாடுகளிலிருந்து தமிழ் மக்கள் அந்நியப்படுவதை தோற்றுவித்துள்ளது. மறுபுறத்தில் இலங்கையில் உள்ள ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாண சபை ஒரு குறிப்பிட்ட அளவிலேயே சேவைகளை வழங்க முடிந்தது. அதிகமான அபிவிருத்தி முயற்சிகள் மத்திய அரசாங்கத்தால் வட மாகாண சபையுடன் எந்தவித கலந்தாலோசனைகளும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டமையினால் வடமாகாணசபை சேவை வழங்குவதற்கு குறைந்தளவு திறன் கொண்டதாக கருதப்பட்டது. மேலும் உயர் பாதுகாப்பு வலயங்கள், காணாமலாக்கப்பட்டவர்கள், மீள்குடியேற்றம், காணி தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மத்திய அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது. வடக்கு முஸ்லிம்களது பிரச்சினைகளுக்காக அணுகுமுறைகளில் வட மாகாண சபை கூட பாகுபாடு காட்டுவதாக கருதப்படுகின்றது. இந்தக் காரணிகள் அனைத்தும் இன-மத உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக விபரங்கள் அறிக்கையின் அடுத்தடுத்த பிரிவுகளில் சித்தரிக்கப்படும்.*


---

[9] *மார்ச் 8ம் திகதியிலிருந்து 10ம் திகதி வரையான காலப்பகுதியில் இரு மையக்குழு கலந்துரையாடல்களும் மதத் தலைவர்கள், அரசாங்க நிர்வாகிகள், அரசியல்வாதி, ஊடகவியலாளர், பெண் தலைவர் ஆகிய ஆறு முக்கிய தகவல் வழங்குனர்களுடன் நேர்காணல்களும் நடத்தப்பட்டன. அவை பெரும்பாலும் யாழ்பாண நகரில் நடத்தப்பட்டதோடு கைதடி, மட்டுவில், ஆனைக்கோட்டை போன்ற இடங்களிலும் நடத்தப்பட்டன.*




*யாழ்ப்பாணத்தில் மதங்களை விட இன ரீதியான விடயங்கள் தான் மதங்களுக்கிடையிலான பதற்ற நிலையில் அல்லது முரண்பாட்டின் அடிப்படையாக உள்ளதோடு அவை முரண்பாடுகளில் வெளிப்படுகின்றன. முஸ்லிம்களுக்கும் தமிழர்கள் / இந்துக்களுக்குமிடையேயான உறவுகள் 90 களில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினால் (த.வி.பு) அரசியல் ரீதியாக பலவந்தமான வெளியேற்றப் பட்டமையினால் கறைப்படிந்திருக்கின்றது. சிங்கள பௌத்தர்களுக்கும் தமிழ் இந்து / கிறிஸ்தவர்களுக்குமிடையேயான உறவுகள் இன ரீதியான யுத்தம் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான இராணுவமயமாக்கல் காரணமாக எதிர்மறையாக தாக்கத்தை எதிர்கொண்டுள்ளன. தமிழ் இந்துக்கள் நெறிமுறையற்ற[10] விதத்தில் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாற்றப்பட்டமையால் ஏற்பட்ட பதற்ற நிலையும் சாதிய ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் இந்துக்களுக்கிடையே காணப்பட்ட முரண்பாடுகளுமே யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட தூய மதங்களுக்கிடையேயான முரண்பாடுகளாக கருதப்படுகின்றது. இந்த முரண்பாடுகளில் (மன்னாரைப் போன்று) இலங்கை இராணுவம், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், தனிநபர்கள் ஆகிய தரப்புக்கள் செல்வாக்கு செலுத்தியிருந்ததுடன் அரசியல், பொருளாதார, கலாச்சார, ஆன்மீக காரணிகள் இயல்பாக்கும் நிலைமைகளாக காணப்படுகின்றன.*

*[10] "நெறிமுறையற்ற" என்ற இவ் ஆய்வறிக்கையிலிருக்கும் பதம் எழுதியவருடைய கருத்தை பிரதிபலிக்கவில்லை. மாறாக அது பொதுவான "நெறிமுறையற்ற மதமாற்றங்கள்" பற்றி குறிப்பாக பெரும்பான்மை இன-மதம் சார்ந்த சமுதாயத்தினரிடையே காணப்படும் சொல்லாடலைக் குறிக்கின்றது.*




***அம்பாறை மாவட்டமானது***[11] *இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் அமைந்த அதன் இன-மத பரம்பலின் அடிப்படையில் முக்கியதுவம் வாய்ந்த மாவட்டமாகும். அம்பாறையில் இருக்கின்ற பெரும்பான்மை சமூகமாக முஸ்லிம்கள் காணப்படுகின்றார்கள். மொத்த சனத்தொகையாக 649,402 (2012 குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரங்களின்படி) காணப்படுவதுடன் இவற்றுள் 281,987 பேர் (43.4 வீதம்) முஸ்லிம்களாகவும் 252,427 பேர் (38.8 வீதம்) பௌத்தர்களாகவும் 102,829 பேர் (15.8 வீதம்) இந்துக்களாகவும் 7588 பேர் (1.1 வீதம்) ரோமன் கத்தோலிக்கர்களாகவும் 5542 பேர் (0.8 வீதம்) கிறிஸ்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.*

*அம்பாறை முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழுகின்ற பிரதேசமாகும். புவியியல் ரீதியாக அவர்கள் தமிழர்களுடன் ஒன்றுவிட்டு ஒன்று என்ற அடிப்படையில் வசிப்பதுடன் நகரத்தில் அடர்த்தியாக வாழுகின்ற சிங்களவர்களுடனான இடைத் தொடர்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தொல்பொருளியல் பிரதேசம், புனித பிரதேசம், சமயத்தலங்கள் என அடையாளப்படுத்தி அரசாங்கம் மற்றும் மதசார்பான நிறுவனங்கள் நிலங்களை கைப்பற்றுவதனால் ஏற்படும் தகராறுகள் காரணமாக இந்த மாவட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. அதனை விட இங்கு காணப்படுகின்ற சிக்கலான இனமயமாக்கப்பட்ட நிர்வாக முறைமையையும் காரணமாகச் சொல்ல முடியும். அம்பாறை மாவட்டமும் போரினால் பாதிப்புக்குள்ளான மாவட்டம் என்பதுடன் தமிழ்-முஸ்லிம் உறவுகள் 1990ம் ஆண்டு வடக்கு மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் விடுதலைப்*


[11] *2017ம் ஆண்டு மே 24க்கும் 27க்கும் இடையில் முஸ்லிம்கள், இந்துக்கள், பௌத்தர்கள், ஆண்கள், பெண்கள் ஆகியவர்களுடனான ஐந்து மையக்குழு கலந்துரையாடல்களும் தகவல் வழங்குனர்களுடன் நான்கு தனிப்பட்ட நேர்காணல்களும் நடத்தப்பட்டன.*

*புலிகளால் வெளியேற்றப்பட்டமை மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல்களில் இடம்பெற்ற படுகொலைகள்[12] ஆகியவை காரணமாக கறைபடிந்த ஒன்றாக மாற்றம் பெற்றது.*

*சிங்கள பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் அம்பாறையின் பிரதான முரண்பாடாகும். இது அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், தனிப்பட்ட பௌத்த துறவிகள் ஆகியோரால் மேலும் தூண்டப்பட்டன. முரண்பாடுகளானது கோட்பாடுகளை அடிப்படையாக வைத்தே காணப்பட்டது. ஆனால் அவை தனிப்பட்ட காணிகளை அல்லது சமயத்தலங்களை அல்லது இடங்களை கைப்பற்றிக்கொள்வதன் மூலம் வெளிக்காட்டப்பட்டது. தமிழ், முஸ்லிம் மக்கள் அம்பாறையில் ஒரு சமூகத்திற்கு இன்னொரு சமூகம் எல்லையாக இருப்பதாக வசிக்கின்றார்கள். இவர்கள் வரலாற்று ரீதியாக ஒருவருடன் ஒருவர் சிறந்த இடைத்தொடர்புகளை பேணி வந்திருக்கின்றார்கள். ஏனெனில் பெரும்பான்மையான முஸ்லிம்களது வயற் காணிகள் தமிழர்களின் கிராமங்களுக்கு அருகில் இருப்பதால் இவர்களுக்கிடையில் முரண்பாடுகள் அல்லது மோதல்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும் தற்போது தமிழ்-முஸ்லிம் உறவுகள் பொருளாதார, காணி, கலாச்சார வித்தியாசங்களை அடிப்படையாகக்கொண்டு இடம்பெறும் தனிநபர்களின் செயற்பாடுகள் காரணமாக கறைபடிந்ததாக காணப்படுகின்றது. அதே போன்று இந்த மாவட்டத்தில் இந்து-கிறிஸ்தவர் மற்றும் கிறிஸ்தவர்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும், ஏனைய மாவட்டங்களிலுள்ள சமபவங்களை ஒப்பிட்டு பார்க்கும் போது அவை புறக்கணிக்க கூடியளவில் காணப்படுகின்றன.*

*[12] காத்தான்குடியிலுள்ள இரு பள்ளிவாசல்கள் மீது 1990ம் ஆண்டு ஓகஸ்ட் 3ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடாத்தப்பட்டபோது தொழுதுகொண்டிருந்த 100க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் (ஹஸ்புல்லா, கோர்/ 2012). வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பதற்றம் அதிகரித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. முஸ்லிம்கள், தமிழர்களிடையேயான உறவுகளின் சிதைவு தொடர்பாக குறிப்பிடுகையில் மட்டக்களப்பு செவி வழிக்கதைகளில் கொண்டாடப்பட்ட சோனகர்-முக்குவர் கூட்டிணைவு 1990ல் சிதறிப்போனதாக மக்கில்வ்ரே (2003) குறிப்பிடுகின்றார். அது உள்ளூர் மனவெறுப்பினதும் சினத்தினதும் அடிப்படையில் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் படைப்பிரிவின் மிகப் பிரபலமான காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை உட்பட்ட முஸ்லிம்கள் மீதான தொடர் வன்முறைகளாலும் தாக்குதல்களாலும் நிகழ்ந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்(101). பதிலிற்கு முஸ்லிம்களை ஆயுதம் தரிக்கவைத்து அரசாங்கம் உருவாக்கிய முஸ்லிம் ஊர்காவற் படைகள் "பழிதீர்க்கும் எண்ணம்கொண்ட படை நடவடிக்கைகளை தமிழர்கள் மீது நடாத்தியதாக" குற்றஞ்சாட்டப்பட்டதாக மக்கில்வ்ரே மேலும் குறிப்பிடுகின்றார்(101).*

***மாத்தறை***[13] *இலங்கையின் தெற்கில் அமைந்துள்ள சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டமாகும். 2012 ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகை 814,048 பேர் இவர்களுள் 766,323 பேர் (94.1 வீதம்) சிங்கள பௌத்தர்களாகவும் 25,614 பேர் (3.1வீதம்) முஸ்லிம்களாகவும் 16,421 பேர் இந்துக்களாகவும் (2 வீதம்) 2432 பேர் (0.29வீதம்) ரோமன் கத்தோலிக்கர்களாகவும் மற்றும் 3,208 பேர் (0.39வீதம்) ரோ.க.அல்லாத கிறிஸ்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இம்மாவட்டத்தில் காணப்படுகின்ற பல்லின மத பரம்பலுடன் காணப்படுகின்ற சிங்கள பௌத்த பெரும்பான்மை இனம் பௌத்த தேசியவாத, தீவிரவாத கோட்பாடுகளுக்கு வெளிக்காட்டப்படுவதுடன் அவற்றினால் தூண்டப்படுகின்ற நிலைமையானது இம்மாவட்டத்தை எதிர்காலத்தில் முரண்பாடுகளுக்கான சாத்தியப்பாடுகள் நிறைந்த மாவட்டமாக மாற்றியமைத்திருக்கின்றது.*




*மாத்தறை மாவட்டத்தில் முதன்மையான முரண்பாடு சிங்கள பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் காணப்படுவதுடன் பல்வேறுவிதமான பாகுபாடுகள், வன்முறைச் செயற்பாடுகள், வெறுப்புப் பேச்சு ஆகியவற்றினால் வெளிப்படுகிறது. இம் முரண்பாடு பொருளாதார மற்றும் கலாச்சார காரணிகளால் பிரதானமாக இயக்கப்படுவதுடன் அது மேலும் மத மேலாதிக்க சித்தாந்த கருத்துக்கள் மற்றும் இன-*

[13] *முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையில் 2017ம் ஆண்டு ஜூன் 17, 18ம் திகதிகளில் நான்கு மையக்குழு கலந்துரையாடல்கள் மாத்தறை நகரம், வெலிகமவில் நடாத்தப்பட்டன. கிறிஸ்தவ, முஸ்லிம், பௌத்த தோட்டத் தொழிலாளர்கள் வாழுகின்ற தெனியாய அமைந்துள்ள மாத்தறைக்கு நான்கு மத சமுதாயங்களுக்கிடையேயான உறவுகள் தொடர்பான தெளிவான விம்பத்தை பெற்றுக்கொள்வதற்காக 2018 மே மாதத்தில் மீண்டும் விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் நேர்காணல்களும் நடாத்தப்பட்டன. பிக்கு, மௌலவி, கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ போதகர் (இந்து பூசகர் ஒருவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் கலந்துகொள்ளவில்லை) ஆகியோருடன் மூன்று முக்கிய தகவல் வழங்குனர் நேர்காணல்கள் இடம்பெற்றதுடன் மதங்களுக்கிடையேயான மன்றத்தின் பௌத்த, இந்து, கிறிஸ்தவ உறுப்பினர்களுடன் இரு மையக்குழு கலந்துரையாடல்களும் தெனியாயவில் இடம்பெற்றன. பதிலளித்தவர்கள் கிராமத்தில் மற்றைய இளைஞர், கிராம அபிவிருத்தி செயற்குழுக்களின் உறுப்பினர்களாகவும் இருந்தனர்.*

*மதத்தால் வேறுபடுபவர்கள் பற்றிய அச்சம்/அறியாமை ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டுள்ளன. சிங்கள தேசியவாதம், நிறுவனமயப்படுத்தப்பட்ட இனவாதம், கடந்தகால இன வன்முறைகளின் நினைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் தமிழ் இந்து / கிறித்தவ, சிங்கள பௌத்த உறவுகளும் துண்டிக்கப்படுகின்றன. இந்த மோதல்கள் மதத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், தனிநபர்கள் ஆகியோரால் செயல்படுத்தப்படுகின்றன.*

## 2. மதங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் போட்டிப் பரப்புக்கள், முகவர்கள், இயல்பாக்கும் நிலைமைகள்

*மதங்களுக்கிடையிலான முரண்பாடுகளை அதிகாரம், சித்தாந்தம்/அறம், ஆளுமை, இடம்/அமைவிடம் ஆகியவற்றுக்கான போட்டிகளிலிருந்தும் தனிநபர்களாக அல்லது ஒரு குழு/சமூகத்தின் ஒரு பகுதியாக செயற்படும் முகவர்களால் வரையப்படும் குழு அடையாளத்திலிருந்தும் மேலெழும்புவதே மதங்களுக்கிடையேயான முரண்பாடு என்ற மேயரினது (2013) புரிதலிலிருந்து வருவதே இப்பகுதியாகும். முரண்பாடுகள் சூழமைவுகளிலும் ஏற்படுகின்றன. மேலும் முரண்பாட்டை உந்தக்கூடிய பல்வேறு தனிப்பட்ட, அடிக்கடி குறுக்கீடும் நிலைமைகள் ஒரு குறிப்பிட்ட கிராமத்திலோ அல்லது மாவட்டத்திலோ உள்ளன. ஒரு குறிப்பிட்ட இடத்தினது பொருளாதார, அரசியல், சமூக, கலாச்சார மற்றும் உளவியல் நிலைமைகளை வெவ்வேறு பரப்புக்களில் போட்டியிடுவதை தூண்டும்/இயலுமானதாக்கும் முகவர்களாக மேயர் (2013) அடையாளம் கண்டுகொள்கின்றார். முரண்பாடுகள் தனியே மதம் சார்ந்த கருதுகோள்களால் மட்டும் உந்தப்படுபவை என்ற பார்வையிலிருந்து விலகி முரண்பாடுகளென்பவை பல பரப்புக்களின் கூட்டுக்களுக்கிடையேயான போட்டிகளிலிருந்து உருப்பெறுகின்றன எனவே அங்கு மதம் ஒரு உந்து சக்தி மட்டுமே என்ற ஒரு பரந்த கவனக்குவிப்பிற்கு இந்த அணுகுமுறை அனுமதிக்கின்றது. ஆகையால் இது மதங்களுக்கிடையேயான முரண்பாட்டின் கீழ் இருக்கின்ற அரசியல், பொருளாதார, கலாச்சார மற்றும் இன ரீதியான கருதுகோள்களின் உள்சேர்ப்பை அனுமதிக்கின்றது.*

*சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்களினதும் இடைத்தொடர்பாடல்களினதும் அனைத்து படிநிலைகளிலும் உட்பதிந்துள்ள இன-மத தேசியவாதமும் பெரும்பான்மைவாதமுமே நான்கு மாவட்டங்களிலும் மதங்களுக்கிடையேயான முரண்பாட்டிற்கும் மத உள் முரண்பாட்டிற்கும் விரிவான இயல்பாக்கும் நிலைமையாகவுள்ளது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டதன் காரணமாக முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இனவழி உறவுகளின் முறிவு என்பது மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஒரு கூடுதலான குறுக்கிடும் இயல்பாக்கும் நிலைமையாகும். இது விரோதத்தையும் அச்சத்தையும் சச்சரவுகளையும் அந்நிலத்தின் மீது விளைவாய் தந்துள்ளது.*

*இத்தரவு நான்கு பிரதானமான பரப்புக்களை முன்வைக்கின்றது. அவற்றில் இரண்டு இடம் மற்றும் வெளியோடு தொடர்புபட்டது: புனித இடங்களை கையகப்படுத்துவதில் ஒரு மத அடையாளத்தை இன்னொரு மதத்தை சார்ந்த சமூகத்தின் மீது திணித்தல், பிராந்திய விரிவாக்கத்தின் நோக்கத்திற்காக நிலங்களை கையகப்படுத்துவதனால் ஏற்படும் முரண்பாடுகள். பின்னையது மதத்தால் ஊக்கப்படுத்தப்படுவதில்லை ஆனால் மத முரண்பாடாக வெளிப்படுகின்றது. மூன்றாவது*

*பரப்பு அதிகார, பொருளாதார ஆதிக்கத்திற்கான பூசல்களுடன் தொடர்புபட்டுள்ளதுடன் நான்காவது பரப்பு கோட்பாடு, தீவிரவாதத்துடன் தொடர்புடையது.*

*நான்கு மாவட்டங்களில் இயக்கவியலில் இருந்து பெறும் தரவுகளின் சிக்கலான தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முக்கியத்துவம் மற்றும் கருத்துத் தெரிவித்தவர்களது நிகழ்வெண் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுப்பொருள்சார் பிரச்சினைகள் வரிசைப்படுத்தப்படுகின்றன. பகுப்பாய்வு மத ரீதியாக உந்தப்பட்ட முரண்பாடுகளுடன் தொடங்குவதுடன் மதம் ஒரு நிகழ்வு சார்ந்த காரணியாக அல்லது மேலதிகமான தூண்டியாக செயற்படும் முரண்பாடுகளுக்கு செல்கின்றது.*

## 2.1. புனித இடங்கள் மற்றும் சின்னங்கள் மீதான போட்டிகள்

### 2.1.1. தமிழ் இந்து இடங்களை பௌத்தமயமாக்கல்: போருக்கு பின்னரான புதிய முக்கியத்துவம்

*இலங்கையில் சமய அடையாளங்கள் பல்வேறு வடிவங்களில் வெளிக்காட்டப்படுகின்றன. அவை கட்டிடக்கலை, வண்ணம், உடை, உருவங்கள் மற்றும் ஒலி மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த அடையாளங்கள் இலங்கையின் காலனித்துவ மற்றும் பின்காலனித்துவ அரசியல் வரலாற்று காலமெங்கும் இனம்சார்ந்த தேசியவாதத்தின் காரணிகளை முன்கொண்டுசெல்லப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை புதியதொரு அர்த்த அடுக்கை பெற்றுக்கொண்டுள்ளதுடன் புதிய முக்கியத்துவங்களையும் குறித்து நிற்கின்றன. பௌத்த கொடி, பௌத்த சிலை என்பனவற்றோடு குறிப்பாக அரசமரம் பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள் ஆகியோரால் மதிக்கப்பட்டாலும் பௌத்தத்தை அடையாளப்படுத்தும் அடையாளமாக பிரபல்யம் பெற்றது. போருக்கு பிந்தைய சூழலில் அது வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவத்தினரால் தமது வெற்றியினை, மேலாதிக்கத்தை, இறுமாப்பை குறிக்கும் சின்னமாக புதிய வடிவவில் மாற்றிக்கொள்ளப்பட்டது.*

*யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் உள்ள கிறிஸ்தவர்கள், இந்துக்கள் இருசாராரும் வெளிப்படுத்திய பிரதான கவலை இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் அல்லது அரச மரங்களைக் கொண்ட பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிறுவுவதையும், புத்தர் சிலைகளை நிறுவுவதையும் பற்றியதாகும். பௌத்த மதத்தை திணிப்பது என்பது திட்டமிட்ட தேசியவாத மேலாதிக்க செயலாக கருதப்படுகிறது. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமில்லாது வட மாகாணத்தின் பிற பகுதிகளில் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பலாலியிலும் காங்கேசந்துறையிலும் உயர் பாதுகாப்பு வலயங்களில் இராணுவத்தினரால்*

தேவாலயங்கள், கோவில்கள் அழிக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன் அது வரலாற்றை அழிக்கும் முயற்சியாக கருதப்படுகின்றது (WRDS உறுப்பினர், இந்துப் பெண், மார்ச் 8, 2017). எந்தவொரு பௌத்தர்களும் இல்லாத பிரதேசங்களில் பௌத்தமதக் கொடியை பறக்கவிடுவது அந்த பகுதியின் வசிப்பவர்களை பகைத்துக் கொள்ளும் முயற்சியாக கருதப்படுகின்றது.

தனிப்பட்ட ஆதாயத்திற்காக விகாரைகளை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நிறுவுவதன் மூலம் இவ்வாறான இடுகுறியான திணிப்புகளுக்கு பங்களிக்கும் மற்றொரு முக்கியமான முகவர் இராணுவத்தினது பௌத்தமயமாக்கல் முயற்சியில் முதலீடு செய்யும் சுயாதீனமான பௌத்த துறவிகள் ஆவார்கள். (அரசியல்வாதி, இந்து ஆண், மார்ச் 9, 2017). நெடுந்தீவில் எவ்வித பௌத்த குடியிருப்பாளர்கள் இல்லை என்ற போதிலும் பௌத்த துறவியொருவர் அங்கு ஒரு பிரதேசத்தை கையகப்படுத்திக்கொண்டு இராணுவத்தின் ஆதரவுடன் ஒரு விகாரையை கட்டியெழுப்பியமையை யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த ஒரு அரசியல்வாதி உதாரணமாகக் கூறினார். இதேபோல் கிளிநொச்சியில் ஒரு கோவிலின் வளாகத்திற்குள் ஒரு பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற செயற்பாடு மன்னாரிலும் காணப்பட்டது. சில இடங்களில் குறிப்பாக இராணுவ முகாம் அல்லது பொலிஸ் நிலையம் போன்றவற்றையொட்டி புத்தர் சிலைகளை மற்றும் பௌத்த விகாரைகளை நிறுவுவது அசௌகரியமாக இருப்பதாக பதிலளித்த தமிழர்கள் தெரிவித்தனர். சுயாதீனமான பௌத்த துறவிகள் காட்டு அரசமரங்களின் இருப்பை பயன்படுத்தி அல்லது புதிய அரச மரங்களை நடுவதன் மூலம் கடந்த காலத்தில் அப்பகுதிகளில் பௌத்த குடியேற்றங்கள், விகாரைகள் இருந்ததாக நிறுவ முற்படுவதுடன் புதிய விகாரைகளின் நிர்மாணிப்பை அதன் மூலம் நியாயப்படுத்தி வருவதாகவும் கருதப்படுகின்றது. அதன்படி ஆராய்ச்சிக் குழு ஒரு குறிப்பிட்ட பௌத்த கோயிலின் வரலாற்றை விபரிக்குமாறு கேட்டபோது தலைமை பொறுப்பாளர்கள் மரபுவழி அரச மரத்தின் இருப்பைக் கொண்டே தங்களது வரலாற்றை விபரிக்கத் தொடங்கினர். அதே நேரம் ஆய்வுக்குழுவானது அண்மையில் நடப்பட்ட அரச மரங்களை மன்னார்-மதவச்சி பிரதான வீதியோரம் அவதானித்துக் கொண்டது. இந்த மூலோபாயம் அரச மரத்திற்கு இருந்த முக்கியத்துவத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த காலத்தில் தமிழர்கள் அரச மரங்களை மதித்தனர். எனினும் இராணுவத்தினர் மற்றும் சுயாதீன பௌத்த துறவிகள் மூலம் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் காரணமாக அரச மரங்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் சிதைவடைந்துள்ளது என பதிலளித்த ஒரு கத்தோலிக்கர் குறிப்பிட்டார். மக்கள் தங்களது பிரதேசங்களில் அரச மரக்கன்றுகள் காணப்படுமாயின் தங்களது பிரதேசங்களை பௌத்தர்கள் கையகப்படுத்துவதிலிருந்து பாதுகாக்கும் நோக்கில்

*அம்மரக்கன்றுகளை வேரோடு பிடுங்கி எறிகின்றனர் (சி.எஸ்.ஓ. உத்தியோகத்தர், கத்தோலிக்கர், பெண், மார்ச் 2017).*

*பௌத்தமயமாக்கலின் மற்றொரு அம்சமானது இந்து மத வழிபாட்டு இடங்களுக்கு அருகில் பௌத்த விகாரைகளை அல்லது தலங்களை கட்டுவதாகும். அது இனத்துவத்திற்கு அப்பால் செல்லுவதும் மத தேசியவாதத்தின் மீதமைந்ததுமாகும். புத்தர் சிலை நிறுவப்பட்டு விகாரை கட்டப்பட்டுவரும் இடம் முன்னர் ஒரு காலத்தில் விடுதலைப் புலிகள் வலுவாக இருந்த திருக்கேதீஸ்வரமாகும். பின்னர் போர்காரணமாக பிரதானமான இந்து குடியிருப்பாளர்களால் கைவிடப்பட்ட இப்பகுதியானது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் குடியிருப்பாளர்கள் மீள்குடியேற்றப்பட்டபோது அங்கு ஒரு இந்து நபருக்கு சொந்தமான தனியார் காணியில் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டிருப்பதை அவர்கள் கண்டனர். அப்பகுதியில் ஒரு தியான மண்டபம் கட்டப்பட்டு இருந்ததுடன் ஒரு துறவி அமர்த்தப்பட்டிருந்தார். ஒரு விகாரை கட்டப்பட்டுக்கொண்டிருந்ததுடன் அதன் "வரலாறு" என குறிப்பிட்டு ஒரு அறிவிப்புப் பலகையில் ஒரு சிங்கள தொடர் செய்தித்தாள் வெட்டுக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு கூறப்பட்டிருந்த நியாயமானது சங்கமித்தை[14] இலங்கைக்கு வரும் போது பாவிக்கப்பட்ட பாதையில் திருகேதீஸ்வரம் இருந்தது என்பதாகும்.*

*புனித இந்துக் கோவில் அமைந்துள்ள நயினாதீவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அங்கு பௌத்த சின்னங்கள் கட்டியெழுப்பப்பட்டதாக ஒரு மையக்குழு கலந்துரையாடலின் போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் கூறினார்கள். அத்துடன் சிங்கள யாத்திரீகர்களுக்கு ஒரு தனிப் படகு மற்றும் பாதையை அமைக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். கடந்த காலத்தில், சிங்கள மற்றும் தமிழ் யாத்ரீகர்களுக்கு ஒரே ஒரு படகு சேவையே இருந்தது. இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக கோவிலில் வணங்கியதுடன் அங்கு ஒன்றாக உணவருந்தினர். (WRDS உறுப்பினர், இந்து பெண், மார்ச் 9, 2017). கடந்த காலத்தில் மத நடைமுறைகளை ஒன்றாகப் பகிர்ந்து கொண்ட இந்து, பௌத்த யாத்திரீகர்களுக்கு போருக்கு பின்னர் தனித்தனியாக பாதையமைத்து தனியான படகு சேவைகளை ஆரம்பித்ததன் மூலம் வேண்டுமென்றே பிரிக்க எடுத்துள்ள ஒரு முயற்சியாக பதிலளித்தவர்கள் கருதினார்கள். மேலும் முன்னர் ஒரு நினைவுச் சின்னமாக மட்டுமே இருந்த மாதகலில் சங்கமித்தை யாழ்ப்பாணத்திற்கு உட்பிரவேசித்தாக கருதப்படும் இடத்தில் ஒரு விகாரையை நிர்மாணிப்பதானது வடக்கின் தமிழ்-இந்து அடையாளத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றதும் வரலாற்று ரீதியாக பகிரப்பட்ட இடங்களை பௌத்தமயமாக்கும் திட்டமிட்ட முயற்சியாகவும் மீண்டும்*

[14] *சங்கமித்தா என்றும் சிங்கள மொழியில் அறியப்படுகின்றவரான இவர் ஒரு பௌத்த பெண் துறவியாவார் (பிக்குனி). அசோகச் சக்கரவர்த்தியின் புதல்வியான இவரே இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அரசமரக் கிளையை கொண்டுவந்தவராவார்.*

*பார்க்கப்பட்டது. இராணுவத்தின் சுயாதீனமான நடவடிக்கைகள் மீது அரசாங்கத்தின் பிடி மிக பலவீனமானதாக இருப்பதால் இது போன்ற விடயங்களைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை இல்லாதிருப்பதாக உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் கூறினார். இருப்பினும் பௌத்த மதம் இந்துக்களுக்கு ஒரு தடையாக இல்லை எனவும் இரு மதங்களும் ஒரேவிதமான வழக்கங்களைப் பகிர்ந்துகொள்பவை என்றும் பதிலளத்தவர்களில் சிலர் தெரிவித்தனர்.*

*மன்னார் பிரதேசத்தில் உள்ள விகாரைகள் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளால் மட்டுமே காக்கப்படுகின்றன என்ற ஆய்வுக் குழுவின் கண்காணிப்பின் மூலம் இந்த உண்மை மேலும் வலுவூட்டப்பட்டது. மன்னாரில் ஆய்வுக் குழு சென்ற இரு விகாரைகளின் துறவிகள் அவ்விகாரைகளுக்கு அருகில் சிங்கள குடியேற்றங்கள் ஏதும் இல்லை என்பதையும் கட்டுமானப் பணிகள், சமய நிகழ்வுகள், விகாரைகளின் அலங்காரப் பணிகளில் இராணுவத்தினர், பொலிஸாரே கணிசமான பங்களிப்பை வழங்குகின்றார்கள் என்பதையும் ஒப்புக் கொண்டனர். மேலும் விகாரைக்கான அனைத்து உணவையும் பொலிஸார், இராணுவத்தினர் அல்லது சிவில் பாதுகாப்பு படையினரே வழங்குகின்றனர். யாழ்ப்பாண நகரத்தில் உள்ள விகாரையின் கட்டுமானத்தை பராமரிக்கும் வேலைகளிலும் உணவு வழங்கலிலும் இராணுவத்தினரும் பொலிஸாருமே முக்கிய பங்குவகிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே அவ் விகாரையை சேர்ந்த ஒரு துறவி விகாரை அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களால் எந்தவித சவால்களையும் எதிர்கொள்ளவில்லை என்றும் அந்த விகாரை கலாச்சார நடவடிக்கைகள், சகவாழ்வுக்கான இடம் என்ற கருத்தை வெளிப்படுத்தினார். "யாழ்ப்பாணத்தில் பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் முரண்பாடு எதுவும் இல்லை. இது முக்கியமாக இந்த இரு மதங்களுக்கிடையிலான பல கலாச்சார ஒற்றுமைகள் காரணமாகவே ஆகும். சில பொதுவான தெய்வங்கள் இரு சமூகங்களினாலும் வணங்கப்படுகின்றன. விகாரை வளாகத்திற்குள்ளேயே தெய்வங்களுக்கான சிலைகள் உள்ளன. இந்துக்கள் உள்ளே வந்து தங்கள் தெய்வங்களை வழிபடுகிறார்கள். வெசாக் மற்றும் பொசொனின் போது பௌத்த கலாச்சார மற்றும் மத நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். வெசாக் காலத்தில் விகாரையையும் சுற்றுப்புறத்தையும் அலங்கரிக்க எங்களுக்கு உதவுகின்றனர். அவர்களின் சமூக கூட்டங்கள் இடம்பெறும் இடமாக விகாரை இருப்பதுடன் இந்து மத மதத் தலைவர்களுடனும் சமூகத்துடனும் நட்புறவை பேணி வருகின்றது" என்று அந்த பௌத்த துறவி கூறினார் (பௌத்த துறவி, பௌத்த ஆண், மார்ச் 8, 2017).*

*மன்னார், யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்-பௌத்த மத உறவுகள் இராணுவத்தினர், சுயாதீன பௌத்த துறவிகள் ஆகியோரினால் திட்டமிடப்பட்டு உருவாக்கப்படும் முறைப்படுத்தப்படுத்தப்பட்ட பகைமையினை அடிப்படையாகக் கொண்டதே தவிர*

தமிழ் இந்துக்களிடமிருந்தும் கிறிஸ்தவர்களிடமிருந்தும் வெளிப்படும் எந்தவிதமான எதிர்ப்பினையும் கொண்டிருக்கவில்லை. "மக்கள் எதிர்த்து நிற்க இயலாத நேரத்தில் அரசாங்கம் அதனைச் செய்தனர்" (WRDS உறுப்பினர், இந்து பெண், மார்ச் 9, 2017) என்று ஒரு ஒரு பதிலளித்தவர் குறிப்பிட்டார். ஆகையால் பதற்றமானது சாதாரண தனிநபர்களுக்கிடையில் இல்லை மாறாக இந்து/கிறிஸ்தவ தமிழர்களுக்கும் அரசின் பௌத்தமயமாக்கல் நிகழ்ச்சி நிரலினது பிரதிநிதிகளுக்கும் இடையிலேயே இருக்கின்றது.

### 2.1.2. அடையாளமும் அதிகரித்த புலப்படும் தன்மை ஊடான ஆதிக்கமும்: மதச்சிலைகளை போட்டியாகவும் இடுகுறியாகவும் நிறுவுதல்

வடக்கு மாகாணத்தை பௌத்தமயமாக்குவதற்கான இராணுவத்தின் முயற்சி இனத்துவ-தேசியவாதத்தின் மீதான பெரிய தேசிய உரையாடலை நோக்கி பேசுகையில் பிராந்திய தேசியவாதங்களும் இன-மத உறவுகளை பாதிக்கும் செயற்பாடுகளில் முக்கிய பங்கைக் கொண்டுள்ளன. தேசிய மட்டத்தில் தனியார் (தமிழ்/இந்து) இடங்கள் மீதான இராணுவம் ஆக்கிரமிப்பை காணலாம். இருப்பினும் ஒரு சிறிய மாவட்ட மட்டத்தில் பல்வேறு போட்டியிடும் மத நிறுவனங்கள் பொது மதச்சார்பற்ற இடங்களை ஆக்கிரமித்து ஆன்மீகத்திற்குரிய இடங்களாக மாற்றுகின்றன. மன்னார் மற்றும் அம்பாறை மாவட்டங்கள் குறிப்பாக பிராந்திய மத-தேசியவாதத்தை பல்வேறு வடிவங்களில் வெளிக்காட்டியுள்ளன. இவற்றில் ஒன்று பொது இடங்களில் போட்டிபோட்டுக் கொண்டு மதச்சிலைகளை நிறுவுவதாகும். மன்னாரில் கத்தோலிக்கர்களும் இந்துக்களும், அம்பாறையில் பௌத்தர்களும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் பலனாக இப்பிரதேசங்களில் மோதல்கள், சொத்துக்களின் அழிவு, சில நேரம் வன்முறையும் விளைவாகியுள்ளன.

மன்னார் மாவட்டமானது தன்னை ஒரு கத்தோலிக்க மாவட்டமாக அடையாளம் காணுவதுடன் அது வெளியிலிருந்தும் அவ்வாறே அடையாளம் காணப்படுகின்றது. இந்துக்களும் கத்தோலிக்கர்களும் மன்னாரில் 16ம் நூற்றாண்டு தொடக்கம் கிறிஸ்துவம் அறிமுகப்படுத்தப்பட்திலிருந்து சகவாழ்வுடனே வாழ்ந்து வந்துள்ளார்கள்.

அவர்களுக்கிடையில் 1544 ஆம் ஆண்டில் வடக்கை ஆண்ட இந்து மன்னர் சங்லியன் (கங்கிலி I) என்ற மன்னன் மன்னாரில் மீண்டும் மதம் மாறுவதற்கு மறுத்த கத்தோலிக்கர்களை கொல்லுவதற்கு கட்டளையிட்ட அந்த இரத்த வரலாற்றை தவிர மிகவும் சக வாழ்வுடனே வாழ்ந்து வந்துள்ளார்கள். அதன் போது 600 க்கும் மேற்பட்ட கத்தோலிக்கர்கள் கொல்லப்பட்டதுடன் அவர்களது மனித எச்சங்கள் ஒரு தேவாலயம் நிர்மானிக்கும் போது கண்டெடுக்கப்பட்டது. அந்த தேவாலயம் தற்போது தியாகிகள் தேவாலயம் என அறியப்படுகின்றது. கத்தோலிக்கர்கள் பதில் கூறும் போது அந்த

*அடையாளத்தை மதங்களுக்கிடையிலான மோதல் தொடர்பான வரலாறாக மாத்திரமின்றி, அந்த மாவட்டத்தின் ஒரு உறுதியான கத்தோலிக்க சின்னமாகவும் காண்பதாக கூறினார்கள்.*

*மதச் சிலைகளை போட்டி போட்டு நிறுவுதல் மன்னார் மாவட்டத்தில் ஒரு வெளிப்படையான முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது. போரிற்கு பின்னர் அங்கு சிறிய தங்க நிறத்திலான பிள்ளையார் சிலைகள் பொது வீதிகளில் காணப்பட்ட கத்தோலிக்க சிலைகளின் பக்கமாக அல்லது அதற்கு எதிரே வைக்கப்பட்டன. இவ்வாறான கத்தோலிக்க சிலைகள் எப்போதும் பாதைகளின் மேலாக வளைவுகளில் அல்லது சந்திகளில் வைக்கப்படுவது மன்னாரில் ஒரு வழக்கமாகக் காணப்படுகின்றது. எனினும் தற்போது இந்துக்கள் அதற்கு போட்டியாக தங்களது கடவுளின் சிலைகளை நிறுவுவதற்கு முயற்சிக்கின்றார்கள் என பதிலளித்த கத்தோலிக்கர்கள் வாதாடினார்கள். கத்தோலிக்கர்கள் தங்களது கடவுளான பிள்ளையார் சிலைகளை உடைத்துள்ளார்கள் என இந்துக்கள் குற்றம் சாட்டினார்கள். இது சில நேரம் இரு சமூகங்களுக்கிடையில் முரண்பாடுகளை (சில சமயம் வன்முறைகளை) ஏற்படுத்தியது. பொது இடத்தில் வைக்கப்பட்ட இந்து கடவுளின் சிலை உடைப்பானது படிப்படியான அந்த இடத்தை விரிவுபடுத்தி அதனை ஒரு உத்தியோகபூர்வமற்ற வழிபாட்டு தளமாக உருமாற்றி பின்னர் ஒரு ஆலயமாக மாற்றப்பட வாய்ப்பு உள்ளது என்ற அச்சத்தினாலேயே இடம்பெற்றது எனக் கருதப்படுகின்றது (பாதிரியார், கத்தோலிக்க ஆண், ஏப்பிரல் 14, 2018).*

*இந்துக்கள் கத்தோலிக்க சிலைகளை அழித்ததாக குற்றம் சாட்டப்பட்டவேளையில் சிலை அமைக்க அரச அங்கீகாரம் பெற வேண்டிய கட்டாயத்தை மீறி கத்தோலிக்கர்கள் இரகசியமாக இந்து பிரதேசங்களில் தனியாருக்கு சொந்தமான காணிகளில் புதிய சிலைகளை வைத்தமையினாலே அது இடம்பெற்றதாக இந்துக்கள் நியாயப்படுத்துகின்றார்கள். மத முக்கியத்துவத்திற்கு மரியாதை காரணமாக அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு சிலைகளை அகற்றுமாறு கோரிக்கை விடுப்பதென்பது கடினமாகிறது. இந்துக்கள் எல்லா கடவுள்களையும் மதிக்கிறார்கள் அதனால் சிலைகளை அழிக்க மாட்டார்கள் என ஒரு இந்து சமயத்தவர் கூறினார் (மருத்துவ அதிகாரி, இந்து ஆண், மார்ச் 6, 2017). அடம்பன் சந்தி, மாந்தை மேற்கு, முசலி, நானாட்டான், நாயாற்று வீதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடி ஆகியன போட்டிக்கு சிலைகள் வைப்பதனால் முரண்பாடுகள் இடம்பெற்ற இடங்களாகும். ஒரு மதம் சார்ந்த சிலைகளை இன்னொரு மதத்தவருக்கு சொந்தமான இடங்களில் வைத்தல் அல்லது மதச்சார்பற்ற இடங்களை ஆன்மீகமயமாக்கல் என்பது இடுகுறி பிராந்திய விரிவாக்க முயற்சி என வாதாட முடியும். எடுத்துக்காட்டாக ஒரு மரபு ரீதியாக இந்துக்களின் இடமானது கத்தோலிக்கர்களது இடமாக குறிக்கப்படுதல்*

அல்லது கத்தோலிக்க இடமொன்றிற்காக இந்துக்கள் போட்டியிடுதல் என்பனவற்றை குறிப்பிடலாம். பாதுகாப்பற்ற உணர்வைக் கொண்ட சிறுபான்மையினரின் இந்த விரிவாக்கத்திற்கான உந்துதலும் பெரும்பான்மையினர் தமது நிலையை நிலைநிறுத்துவதும் சிறுபான்மை-பெரும்பான்மை சமூகங்களுக்கிடையேயான உறவுகளை பாதிக்கின்றன.

தொடர்ச்சியாக மதச் சிலைகள் வைக்கப்படுவதானது தனிநபர்களின் செயல் அல்ல மாறாக அரசியல்வாதிகளால் அவர்களின் இலாபத்திற்காக நிதியளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றது என்பதே பதிலளித்த கத்தோலிக்கர்கள் மற்றும் இந்துக்களிடையே உள்ள கருத்தாகும். வடக்கில் உள்ளூர் ஆதரவாளர்களைக் கொண்டு செயற்படுகின்ற இந்தியாவில் உள்ள சிவசேனா மற்றும் ஆர்.எஸ்.எஸ் போன்ற இந்து தீவிரவாதக் குழுக்களாலேயே முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுவதாகவும் கருத்தப்படுகின்றது. ஆனாலும் அது கத்தோலிக்கர்கள் மற்றும் இந்துக்களுக்கிடையில் உள்ள உறவுகளைப் உள்ளுணர்வு மட்டத்தில் பாதிப்பதுடன் இரு சமூகங்களுக்கும் இடையில் பதட்டத்தை உருவாக்குகின்றது.

மன்னாரில் காணப்பட்ட அதே இயக்கவியல் அம்பாறையிலும் காணப்படுகின்றது. நகரத்தைப் பொருத்தவரையில் முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையாகவும் சிங்கள சமூகம் சிறுபான்மையாகவும் (சிறப்பியல்பாக இல்லாத) காணப்படுகின்றார்கள். முஸ்லிம்கள் செறிந்து வாழும் இடங்களில் புத்தர் சிலைகளை நிறுவுவது சிங்கள-பௌத்த சமூகத்தின் ஒரு எதிர்வினையான வழக்கமாகும். அது இரு சமூகங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றிவித்து அடிக்கடி வன்முறையில் முடிந்திருக்கின்றது.

இதற்கு உதாரணம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பொத்துவில் பகுதியாகும். சில பௌத்த தனிப்பட்ட நபர்கள் புத்தர் சிலையை பிரதான வீதியில் வைத்தார்கள் என பதிலளித்தவர்கள் கூறினார்கள். இதற்கு பதிலளிக்கு முகமாக முஸ்லிம்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட போது அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இன்னொரு உதாரணம் அஸ்ரப் நகர் சம்பவமாகும். அங்கு புத்தர் சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும் அந்த குறிப்பிட்ட காணியானது புனித தலம் என்ற பெயரில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்தச் செயற்பாடுகள் கூட அரசியலினால் ஊக்கப்படுத்தப்பட்டதொன்றாகவே கருதப்பட்டது. எனினும் இந்தச் செயற்பாடுகள் பொது மக்களின் உணர்வுகளையும் வெளிப்படுத்தியது.

## 2.2. தீவிரவாதத்தின் வளர்ச்சி, வெறுப்பு பேச்சு, நம்பிக்கையின்மை ஆகியவையும் சமூக ஊடகத்தின் பங்கும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மூன்று மாவட்டங்கள் சிங்கள-பௌத்த தேசியவாதத்தினதும் இந்து, கத்தோலிக்க பிராந்திய தேசியவாதத்தினதும் பௌதீக ரீதியாக வெளிப்பாட்டை அனுபவித்துள்ளார்கள். அவை தொட்டுணரக்கூடிய வகையில் சமய வெளிகள் மற்றும் அடையாளங்கள் வறுதலாக கையாளப்படும் வகையில் வெளிப்பட்டன. அதேவேளை தெற்கில் மாத்தறை மாவட்டத்தில் உள்ள சிறுபான்மை சமூகமானது கோட்பாட்டு பரப்பின் அடிமட்ட நிலையில் நுழையும் சமய தீவிரவாதத்தினது விளைவால் முரண்பாட்டை அனுபவித்துள்ளார்கள். மாத்தறையில் மதங்களுக்கடையிலான முரண்பாடானது முதன்மையாக பொருளாதார அல்லது வியாபார போட்டித்தன்மையை அடிப்படையாகக் கொண்டே நடந்தேறியுள்ளதுடன் (பின்னர் கலந்துரையாடப்படும்) அவை வெறுப்பு பேச்சுக்களாக சமூக ஊடகங்களில் பரப்பப்படுகின்றன. தங்களது பிரச்சாரத்திற்கு சமூக வலைத்தளங்களை ஊடகமாக பாவிக்கின்ற பொது பல சேனாவின் ஆதரவாளர்களாகவும் அனுதாபிகளாகவும் இருக்கின்றவர்களே வெறுப்பு பேச்சுக்களில் ஈடுபடுபவர்கள் என பதிலளித்தவர்கள் கூறினார்கள். மாத்தறையிலுள்ள ஒரு முஸ்லிம் பெண் பதிலளிக்கும் போது பொது பல சேனா போன்ற அமைப்புக்களை சமூக ஊடகத்தில் தடை செய்யப்பட வேண்டும் என்று கூறினார். முஸ்லிம் சமூகங்களுடன் வியாபாரம் செய்ய வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கும் அதிகளவிலான குறுஞ்செய்திகள் அனுப்பட்டுள்ளன. ஆனால் முகப்புத்தகத்தில் வெறுப்புப் பேச்சுக்களை பரப்புபவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே போன்று ராவண பலகாய, மகாசோன் பலகாய டான் பிரசாத் போன்ற முகப்புத்தக குழுக்களை (Facebook Groups) வைத்துள்ளவர்கள் நிறுத்தப்படவில்லை என கூறினார்கள். வெலிகமவில் இருக்கும் பதிலளித்த பௌத்தர்களும் இதே போன்ற கருத்தையே தெரிவித்தனர். போர் முடிவுற்று இருந்தாலும் இன்னும் மீளிணக்கம் ஏற்படுத்தவில்லை. நாட்டின் மீளிணக்கத்தை குழப்புவதில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன என்றும் கூறினார்கள். சமூக ஊடகங்களில் பரப்பப்படுகின்ற வெறுப்பு பேச்சுக்கு மிகவும் பாதிப்புக்கு உட்படக்கூடியவர்களாக இளைஞர்களே குறிப்பிடப்பட்டனர். ஒரு முஸ்லிம் பெண் குறிப்பிடுகையில் சமூக ஊடகத்தில் உணர்ச்சியூட்டும் வெறுப்புப் பேச்சுகளுக்கு இளைஞர்களின் பிரதிபலிப்பு தொடர்பான தனது கரிசனையை வெளிப்படுத்தினார். இவ்வாறான வெறுப்பு பேச்சுக்கள் முஸ்லிம் இளைஞர்களை கோபமூட்டுவதாக காணப்படுகின்ற போதிலும் பள்ளிவாசல்கள் பொறுமையை கடைப்பிடிக்குமாறு போதிப்பதுடன் இளைஞர்களை வன்முறையில் ஈடுபடாது பொறுமையாக வைத்திருக்க அவதானமாக செயற்படகின்றன என அவர்கள் மேலும் கூறினார்கள். அடிமட்டத்தில்

எந்தவித மோதல்களும் இடம்பெறவில்லை என்றும் இளைஞர்களுக்கிடையில் முரண்பாடு இருப்பதால் அவர்கள்தான் கரிசனைக்கான காரணமாக அமைகிறார்கள் என வெலிகமவில் உள்ள பதிலளித்த பௌத்தர்கள் கூறினார்கள். இளைஞர்கள் இலகுவில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாக காணப்படுவதனால் அவர்கள் மத்தியில் அதிக விழிப்புணர்வும் கூருணர்வும் ஏற்படுத்தவேண்டி உள்ளது. குறிப்பாக மொழி வித்தியாசம் தேவையற்ற புரிந்துணர்வின்மையையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் என்பதால் அது தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும் என பதிலளித்த தெனியாயவில் உள்ளவர்கள் தெரிவித்தார்கள்.

வெலிகமவில் கடும்போக்குவாதமானது உளவியல் பரப்பிற்குள் வித்தியாசமாக வெளிப்படுத்துகின்றது. இது பெரும்பான்மை சமூகமானது தமக்கு எதிராக சதி செய்வதாக சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் சிறுபான்மை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்துகின்றது. சகவாழ்வு என்பது இந்தபகுதியில் காணப்படுகின்ற ஒரு வழக்காறு என பதிலளித்த முஸ்லிம்கள் தெரிவித்தனர். அதேநேரம் வன்முறையை அல்லது பிரச்சினையை தூண்டுபவர்கள் இனவெறி அமைப்புக்களே தவிர தாங்கள் ஒன்றாக வாழும் சமூகங்கள் அல்ல எனவும் அவர்கள் தெரிவித்தனர். அவர்கள் பொதுபல சேனாவே தங்களுக்கு உள்ள மிகப்பெரிய அச்சுறுத்தல் எனக் குறிப்பிட்டனர்.

முஸ்லிம் கிராமங்களுக்கு எல்லைப்புறமாக அமைந்த சிங்கள கிராமங்களிலுள்ள விகாரைகளில் தொழிற்படுவதும் அங்கு அடிக்கடி சந்திப்புகளை நடாத்துவதுமான பொதுபல சேனா தங்களது சமூகத்திற்கு எதிராக சதித் திட்டம் தீட்டுவதாக சந்தேகத்தையும் அச்சத்தையும் பதிலளித்தவர்கள் வெளிப்படுத்தினர். முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு குழு உருவாக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் தங்களது கரிசனைகளை பதிலளித்தவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இந்தக் குழுவினது ஒரு முயற்சியாக முஸ்லிம்களுக்கெதிராக வெறுப்பு பேச்சுக்களை பரப்பிவிட்டப்படுகின்றது. அங்கே சில முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு முஸ்லிம் சமூகம் தொடர்பாக எதிர்மறையான கருத்துக்கள் அதாவது தொப்பி போட்டு தாடி வளர்த்துக் கொண்டு இருப்பவர்கள் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிப்பவர்கள் என்று கற்பிக்கப்படுகின்றது என அவர்கள் கூறினார்கள். பல்லின சமூகங்களது கோட்பாட்டு பரப்பிற்கு குறிப்பாக இளைய சிறுவர்களுக்கு தீவிரவாத குழுக்களால் புகுத்தப்படும் தப்பெண்ணங்களும் எதிர்மறையான எண்ணங்களும் எதிர்காலத்தில் மதங்களுக்கிடையிலான முரண்பாட்டை தோற்றுவிக்கும் வாய்ப்பை அதிகரிக்கின்றது என்பது கரிசனைக்குரியது. எனினும் இளைஞர்களது எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளும்போது இவ்வாறான நச்சுத்தன்மையான முஸ்லிம்களுக்கு எதிரான கோட்பாடுகள் சமூகத்தில் பரப்பப்பட்டு அவை வளரும் போது தொழில் வழங்குவதில்

*மற்றும் வைத்தியசாலைகளில் தங்களது சமூகத்திற்கு எதிராக பாகுபாடு காட்டப்படும் என அஞ்சுவதாக கருத்து தெரிவித்த முஸ்லிம் பெண்கள் கூறினர்.*

*இருப்பினும் அனைத்து பௌத்த துறவிகளும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்பதையும் அவர்கள் தவறாக இருக்கும்போதும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பளிக்கும் ஒரு பௌத்த துறவி கூட இருப்பதாகவும் பதிலளித்த முஸ்லிம்கள் வலியுறுத்திக் கூறினார்கள். மதங்களுக்கிடையிலான நல்லுறவிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலான ஞானசார, பொதுபல சேனாவுக்கு எதிராக அனைத்து நல்ல பௌத்த துறவிகளும் தலையிடுவது அவசியமானது என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.*

*தமது மாவட்டத்தில் உள்ள யதார்த்தத்தை எதிர்கொண்ட மாத்தறை மற்றும் வெலிகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பதிலளித்த பௌத்தர்கள் மத தீவிரவாதம் தொடர்பான தமது பகுப்பாய்வில் அகநோக்கோடும் சுய விமர்சனத்தோடும் ஈடுபட்டனர். ஞானசாரரைப் போன்றவர்களது தீவிரவாத பௌத்த வழக்கங்கள் சகவாழ்வுக்கு மிக அச்சுறுத்தலாக அமைவதோடு தேவையற்ற, பொருத்தமற்ற பிரச்சினைகளை உருவாக்கின்றது என்பதை மக்கள் ஒப்புக் கொண்டனர்.*

*வெலிகமவில் பதிலளித்த பௌத்தர்கள் ஞானசாரரின் நடத்தை பற்றி மிகக் கடுமையாக விமர்சனங்களை முன்வைத்தனர். அவர் ஒரு "பைத்தியக்காரர்", ஒரு "குண்டர்" என அவர்கள் குறிப்பிட்டனர். அந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் அவரை பல்வேறு சமூகங்களிடையே வெறுப்புணர்வை பரப்புவதற்கு ஊடகங்களைப் பயன்படுத்துகின்ற அரசியல் பின்புல ஆதரவு, அரசியல் நோக்கங்கள் கொண்ட ஒரு மனிதராக பார்க்கிறார்கள். அவரைப் போன்ற நபர்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் அனைவரும் உடன்பட்டனர். விகாரைகள் மிகவும் வணிகமயமாக்கப்பட்டு பணத்தை சேகரிக்கும் மையங்களாக மாறிவிட்டன என்றும் அவை ஏழைகளுக்கு ஆதரவளிக்க பயன்படுத்தப்படுவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். சில பிக்குகள் ஒழுக்கமற்ற மற்றும் ஊழல் நிறைந்தவர்களாகவும் பௌத்தமதத்தை பற்றி மற்றவர்களிடம் தவறான ஒரு விம்பத்தை உருவாக்கி வருவதாகவும் பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர். தனிப்பட்ட துறவிகள் பணம் சேர்க்கின்ற ஒரு வழிமுறையே பௌத்த மத தீவிரவாதம் என தாங்கள் கருதுவதாக பதிலளித்த பௌத்தர்கள் குறிப்பிட்டனர் (மையக்குழு கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள், பௌத்த ஆண்கள் மற்றும் பெண்கள், ஜூன் 17, 2017).*

மேலே கூறியப்பட்டதை வற்புறுத்திக் கூறுகிற வகையில் பௌத்த துறவிகளுக்கிடையிலான முரண்பாடு பற்றி ஒரு பௌத்த துறவி கலந்துரையாடினார். சமயத்திற்கு உண்மையானவர்கள் என வேசமிடுகின்ற பௌத்த துறவிகளுக்கும் சசனரக்ஷக (புத்த சாசனத்தை பாதுகாக்கும் அமைப்பு) இல் சிறுபான்மையினராகிய,

*அவரும் அங்கம் வகிக்கும் மிதவாத பௌத்த துறவிகளுக்குமிடையேயான முரண்பாடு பற்றியே அவர் குறிப்பிட்டார். மதங்களுக்கிடையிலான செயற்பாடுகளில் தான் பங்குபற்றுவதில் அச்சம் கொள்வதாகவும் அவர் கூறினார். தனது சாசனத்திலுள்ள ஏனைய துறவிகளினால் மாத்திரமின்றி விகாரைக்கு வருகை தருகின்ற மக்களாலும் அது தொடர்பில் கண்டனத்திற்கு உள்ளாகுவதாக அவர் குறிப்பிட்டார். மதங்களுக்கிடையேயான நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டதன் விளைவாக தாராளவாத துறவி ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் இறந்தார் என அவர் கூறினார். எனவே பதிலளிப்பவர் போன்ற மிதவாத துறவிகள் அச்சம் கொண்டுள்ளதுடன் கிராமத்தில் மற்றைய மத சமூகங்களுடன் நேர்முறையாக ஈடுபட கடினமாக உள்ளதாக கருதுகின்றனர் (பௌத்த துறவி, பௌத்த ஆண், மே 26, 2018).*

*பௌத்த சமூகத்திடையே காணப்படும் தீவிரவாதம் (பதிலளித்த பௌத்தர்களோ முஸ்லிம்களோ முஸ்லீம் தீவிரவாதத்தை குறிப்பிடப்படவில்லை) தனிப்பட்ட மற்றும் அரசியல் நோக்கங்களுடனான சக்தி வாய்ந்த தனி நபர்களால் உந்தப்பட்டதாக தெரிகிறது. வெறுப்புணர்வு மற்றும் வெறுப்பு பேச்சின் பரப்புகை தாராளவாத பிக்குகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தி மதங்களுக்கிடையேயான நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து அவர்களை நலிவுறச் செய்வது மட்டுமல்லாமல் சமூகங்களுக்கிடையில் குழப்பம், சந்தேகம், அவநம்பிக்கை ஆகியவற்றை விதைக்கிறது.*

*எனவே இந்த ஆய்வின் ஒரு குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு தவறான கருத்துக்கு மாறாக அவநம்பிக்கையும் சந்தேகமும்தான் மதங்களுக்கிடையேயான மோதலை ஊக்குவிக்கும் முக்கிய காரணிகள் என்பதாகும். இது ஒவ்வொரு இன-மத சமூகத்தின் பாதுகாப்பற்ற தன்மையிலிருந்து உள்ளூர் மற்றும் தேசிய அளவிலான மட்டத்திலான தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள பயம். இது வெறுப்பு பேச்சு மற்றும் தீவிரவாத சக்திகளின் பிரச்சாரம் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டு எண்ணெய் ஊற்றப்படுகின்றது. ஒரு பெரிய (தேசிய அளவில்) இனச் சுத்திகரிப்பு திட்டமிட்டு நடாத்தப்படுகின்றது என்று அம்பாறையிலுள்ள முஸ்லிம் சமூகம் கருதுகின்றது. இந்த கருத்து அந்த சமூகம் மீது தனிப்பட்ட நபர்களால் நிகழ்த்தப்படும் வன்முறை, சொத்துக்களை அழிக்கும் செயல்களால் உயிரூட்டப்படுகின்றது. அம்பாறை நகரத்திலுள்ள ஒரு முஸ்லிம் ஹோட்டல் எரிக்கப்பட்டதுடன் ஒரு மசூதி சுவர் 2017ல் சேதமாக்கப்பட்டது. அரசினால் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையினின்று விலக்கீட்டுரிமை காரணமாக அவர்கள் தண்டனைகள் பற்றிய அச்சமின்றி தமது பாரபட்ச எண்ணத்தின் அடிப்படையில் நடப்பதாக கருதப்படுகின்றது.*

*அவநம்பிக்கையின் மற்றொரு வெளிப்பாடு, சாத்தியமான பாகுபாடு மனித-யானை முரண்பாடு தொடர்பாக உள்ளது. அண்மைக்காலத்தில் யானைகள் காரணமாக அவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாக அம்பாறை மாவட்டத்திலுள்ள சில*

பதிலளித்த முஸ்லிம்கள் தெரிவித்தனர். 30-40 ஆண்டுகளுக்கு முன்னர் யானைகளின் நடமாட்டம் அங்கு இருக்கவில்லை என அவர்கள் குறிப்பிட்டதுடன் சிங்கள கிராமங்களில் யானைகளுக்கு வேலிகள் அமைக்கப்பட்டு அங்கிருந்து ஆலையடிவேம்பு, பாலமுனை போன்ற முஸ்லிம் கிராமங்களுக்கும் அவை விரட்டி--யடிக்கப்படுகின்றமையாலே இப்பிரச்சினைகள் உருவானதாக அவர்கள் வாதிடுகின்றனர். யானைகள் தங்கள் கால்களால் இரும்பு வளையங்களைக் கொண்டிருப்பதால் அவை காட்டு யானைகள் அல்ல என்பதால் ஏனெனில் இந்த செயல் வேண்டுமென்றே நடாத்தப்படுகின்றது என்பது நியாயப்படுத்தப்படுகிறது. அவர்களுடைய சந்தேகம் துல்லியமானதா அல்லது இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் நோக்கினால் அத்தகைய நிகழ்வுகள் பௌத்த சமூகம் மத்தியில் முஸ்லீம்-எதிர்ப்பு உணர்வுகளுடன் தொடர்புபட்டது என்ற உண்மை சமூகங்களுக்கு இடையில் அவநம்பிக்கை எவ்வாறு பதற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை வலியுறுத்துகின்றது.

பதிலளித்த முஸ்லிம்கள் போலவே அம்பாறையில் பதிலளித்த பௌத்தர்களும் முஸ்லிம் சமூகத்தின் செயல்களில் நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். வடக்கு, கிழக்கில் இருந்து படைகளை அகற்ற வேண்டுமென முஸ்லிம்கள் கோருவதன் பின்னால் ஒரு பெரிய சதி இருப்பதாகவும் அது அவர்களின் (சிங்களவர்களின்) விருப்பத்துக்கு அமைவானதாக இருக்காது என்று அவர்கள் உணர்ந்தனர். வடக்கு, கிழக்கின் பிரிவினை நோக்கோடு ஒரு சதித்திட்டம் இருப்பதாக அவர்கள் அஞ்சுகின்றனர். சிங்கள பௌத்த தேசிய இனத்தை காப்பாற்றும் தேசியவாத உரையாடலுடன் அது இசைந்துகொள்கின்றது. அந்தப் பயம் தீவிரவாத குழுக்களால் தூண்டிவிடப்படுகின்றது. சிங்களவர்கள் ஒரு சிங்கள நாட்டில் வாழ வேண்டும் என்றும் முஸ்லிம்கள் ஒரு முஸ்லிம் நாட்டில் வாழ வேண்டும் என்றும் ஒரு பதிலளித்த சிங்களவர் கூறியது தீவிரவாத கருத்துக்கள் அடிமட்டத்தில் எவ்வாறு பரவியுள்ளது என்பதை காட்டியது. சிங்கள கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கும் முஸ்லிம் நாடுகளிலிருந்து வரும் உதவிகளை மறுப்பதற்கும் ஒரு தேவை உள்ளது என்று அவர் மேலும் கூறினார் (கிராம அபிவிருத்தி மன்ற உறுப்பினர், பௌத்த ஆண், மே 25, 2018). அவர் ஒரு துறவி என்ற ரீதியில் ஞானசார (பொதுபல சேனா) மீது தாங்கள் மதிப்பு வைத்திருப்பதாக சில பதிலளித்தவர்கள் கூறினார்கள்.

பொதுபல சேனாவின் மத கருத்துக்களும் நாட்டிற்கான உணர்ச்சிகளும் நியாயமானவையாக இருந்தாலும் அத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட அதன் நடவடிக்கைகள் தவறானவை என அவர்கள் வாதிட்டனர். மேலே குறிப்பிட்ட கருத்துக்களை சிலர் எதிரொலித்ததோடு தற்போதைய சூழலில் பௌத்த மதம் அபாயத்தை எதிர்கொண்டிருப்பதாகவும் பௌத்த சமூகம் தமது மதத்திற்கு மரியாதைக்குரிய வகையில் செயற்படுவதில்லை எனக் குறிப்பிட்டனர். மேலும் முஸ்லிம்களும் தமிழர்களும் பௌத்த மதத்தை மதிக்காது தங்கள் மதத்தையே

*மதிக்கின்றார்கள் என்று அவர்கள் நம்பினார்கள். அது நாட்டில் புத்தமதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை நிலைப்பாட்டைத் தவிர்ப்பதாக அமைவதாக அவர்கள் கருதுகின்றனர்.*

### ***2.3. கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம், கலப்புத் திருமணம், "நெறிமுறையற்ற" மதமாற்றங்கள்***

*கிறிஸ்தவ சமூகத்தினருக்கிடையிலும் கிறிஸ்தவ சமூகத்தினராலும் இடம்பெறும் மதங்களுக்கிடையேயான, மத உள் மோதல்களுக்கு ஒரு முக்கியமான காரணம் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம் ஆகும். மதம், இனத்தை மட்டுமில்லாது சமூக-பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் "குழு அடையாளத்தை" கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம் அச்சுறுத்துவதால் அது மதங்களுகிடையேயான உறவுகளை பாதிக்கின்றது. மதம் மற்றும் சாதி அடிப்படையில் வரையறுக்கப்படும் உள்-மத உறவுகளையும் பாதிக்கின்றது.*

*கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சமூகங்களில் குறிப்பாக மன்னார், அம்பாறை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நற்செய்தி தேவாலயங்களின் அதிகரிப்பு மற்றும் பெருக்கம் ஆகியவை முன்னர் ஒரியல்பாக இருந்த சமய சமூகங்களின் அடையாளங்களை முறித்துக் கொண்டன. அது தனிப்பட்ட, சமூக, அரசியல் மட்டங்களில் மதங்களுக்கிடையேயான முரண்பாட்டையும் உள்-மத முரண்பாட்டையும் விளைவித்தது. மன்னார் மாவட்டத்தில் மூன்று பரந்த கிறிஸ்தவக் குழுக்களாக (பதிலளித்தவர்களால் வரையறுக்கப்பட்டது) பாரம்பரிய கத்தோலிக்கர்கள் (ரோமன் கத்தோலிக்கர்கள்), பிரதான தேவாலய சமூகங்கள் மற்றும் கட்டற்ற தேவாலய சமூகங்கள் (இரண்டும் "ரோமன் கத்தோலிக்கமல்லாத" என குறிப்பிடப்படுகின்றன) ஆகியவை உள்ளன. கத்தோலிக்க பாதிரியார்கள் கட்டற்ற தேவாலயங்களைப் பற்றி அதிகம் அக்கறை காட்டவில்லை. ஆனால் அவர்கள் முஸ்லீம்களுடனும் இந்துக்களுடனுமான தங்கள் உறவுகளில் கவனம் செலுத்தினர்.*

*நிறுவன மட்டத்தில் கத்தோலிக்க திருச்சபை (மன்னார் மத நிறுவனப்படி உச்சியில் உள்ளது) கட்டற்ற தேவாலயங்களுடன் அதிகாரப்பூர்வ தொடர்பை பேணவில்லை ஆனால் அது பிரதான தேவாலயங்கள் என அடையாளப்படுத்துகின்ற அங்கிலிக்கன்கள் மற்றும் பப்டிஸ்டுகள் போன்ற தேவாலய சமூகங்களுடன் இடைத்தொடர்பை கொண்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபையின் பிரதிநிதியின் கருத்தின்படி கட்டற்ற தேவாலய சமூகங்களுடன் ஒரு உறவைக் கட்டியெழுப்ப இன்னும் 15-20 ஆண்டு காலம் எடுக்கும் (பாதிரியார், கத்தோலிக்க ஆண், ஏப்ரல் 14, 2018).*

*கத்தோலிக்க பாதிரியார்கள் அல்லாத கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ சமூகங்கள் பற்றி எந்த கவலையையும் எழுப்பவில்லை என்றாலும் கட்டற்ற தேவாலயங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் கத்தோலிக்கர்களுக்கு எதிரான பல கவலைகளை*

*வெளிப்படுத்தினர். மன்னாரில் 2.6 வீத மக்கள் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ சமுகத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளபோது கத்தோலிக்கருடன் முரண்பாடு நிலம் மற்றும் அடையாளத்தின் அடிப்படையில் வெளிப்படுகிறது என கட்டற்ற தேவாலய போதகர் ஒருவர் கூறினார். கட்டற்ற தேவாலயங்களின் காளாண்கள் போன்று பெருகுகின்றமையும் தேவாலயங்களை கட்டுவதற்கு உள்ளூராட்சி அரசாங்க ஒப்புதல் பெறுவதற்குள்ள சிரமத்தின் காரணமாக தனியார் நிலங்களில் (பெரும்பாலும் போதகரின் தனிப்பட்ட காணியில் அல்லது அவரது உறவினர்களது காணியில்) கட்டப்பட்டமையே இதற்கு காரணமாகும். புதிய கட்டற்ற தேவாலயங்கள் கட்டப்படுகின்ற வேளையில் கத்தோலிக்க கிராமவாசிகள், அயலில் வசிப்பவர்கள் (போதகரின் உறவினர்கள்) கற்களை எறிவதுடன் பெரும்பாலும் தற்காலிக கட்டிடங்களை அழிக்கிறார்கள். ஒரு கிராமத்தின் கத்தோலிக்க அடையாளம் மீதான ஊடுருவல் தொடர்பான சகிப்புத்தன்மையின்மை எதிர்ப்பை வெளிப்படுத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ் வன்முறைகள் இருக்கின்றன. ஆனாலும் அவை தனிப்பட்ட பிரச்சினைகள் கூட எனெனில் குற்றவாளிகள் மிகவும் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அயலவர்கள். அவர்கள் தமது கத்தோலிக்க உறவினர் புதிய தேவாலய சமூகத்திற்காக தமது திருச்சபை விட்டுச் சென்றது தொடர்பில் கோபத்தின் வெளிப்பாடாகவே அதனைச் செய்கின்றனர். எனவே ஒரு போதகர் அவரது கிராமத்தில் கத்தோலிக்கர்கள் அவரது எதிரிகள் இல்லையென்றும் ஏனெனில் 80 வீதமானவர்கள் அவரது உறவினர்கள் எனவும் கூறினார் (போதகர், கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ ஆண், மார்ச் 7, 2017). மன்னாரை ஒரு கத்தோலிக்க மறைமாவட்டமாக வரலாற்று ரீதியாக அடையாளப்படுத்துவதே புதிய கிறிஸ்தவ பிரிவினரின் தோற்றத்தை நோக்கிய மக்களுடைய விரோதப்போக்கின் அடிப்படை காரணம் என அவர் சுட்டிக்காட்டினார். இது கிறிஸ்தவ பிரிவுக்களுக்கிடையிலான திருமணங்களுக்கும் எதிராக இருக்கின்றது.*

*மன்னார் மாவட்டத்தில் புதிய கிறிஸ்தவ பிரிவினர்களின் பரவலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் காரணங்களைப் பற்றி கட்டற்ற தேவாலய போதகர் சுயமாக விமர்சனம் செய்தார். ஒரு கட்டற்ற தேவாலய சமூகத்தில் (சபை) சமயத்தில் தத்துவார்த்த வேறுபாடுகள் ஏற்படுகையில், சில உறுப்பினர்கள் பிரிந்து சென்று தங்கள் சொந்த தேவாலயத்தை ஆரம்பிக்கிறார்கள் என்று அவர் கூறினார். இந்த புதிய தேவாலயம் பெரும்பாலும் தாய்தேவாலயத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ளது. கட்டற்ற தேவாலயங்களில் ஒரு தரப்படுத்தப்பட்ட இறையியல் இல்லை என்பது தொடர்பில் கூட போதகர் விமர்சித்தார். சில போதகர்கள் கத்தோலிக்கம் அல்லாத பல்கலைக்கழகங்களில் இறையியல் கற்கின்ற போதும் மற்றவர்கள் கற்பதில்லை. இறையியல் பின்னணி இல்லாதவர்கள் இலாபமீட்டும் ஒரு வழிமுறையாக தங்கள் தேவாலயங்களை பயன்படுத்தி வருகின்றனர் என்று அவர் கூறினார். எனவே*

தேவாலயங்களின் பதிவு அவசியம் என்று அவர் கூறினார். ஒருவர் தனது வீட்டின் வளாகத்திற்குள்ளேயே தனது தேவாலயத்தை அமைப்பதன் மூலம் பதிவு செய்வதற்கான தேவையிலிருந்து தப்பித்துக்கொள்கின்றார்.

கட்டற்ற தேவாலயங்கள் காளாண்கள் போல முளைப்பதுடன் இணைந்திருப்பது மத மாற்றங்களின் அதிகரிப்பு ஆகும். யாழ்ப்பாணத்தில் நற்செய்தி சபைகளால் நடத்தப்பட்ட "நெறியற்ற" மத மாற்றங்கள் தமிழ் கத்தோலிக்க, இந்து சமூகங்களிடையே மனக்கலக்கத்தை உண்டாக்கியுள்ளன.

இந்து மதத்தவர்களுடனான அவர்களுடைய உறவு இணக்கமானது என்று கத்தோலிக்கர்கள், கத்தோலிக்கர்கள் அல்லாத கிறிஸ்தவர்கள் கூறினார்கள். மறுபுறம் தங்கள் சமூகத்தின் உறுப்பினர்கள் கிறிஸ்தவ நற்செய்திக் குழுக்களால் எளிதில் கிறிஸ்தவத்திற்கு மதமாற்றப்படுகின்றார்கள் என்று பதிலளித்த இந்துக்கள் கவலை வெளியிட்டனர். சாதி பாகுபாட்டிலிருந்து தப்பிக்க, கல்வியில் முன்னேற, நிதி ஆதாயத்திற்காக, மற்றும் போரின் போது கிறிஸ்தவ பெயர்களைப் பெற்று துன்புறுத்தல்களை தவிர்க்கவும் இந்துக்கள் கடந்த காலத்தில் கிறிஸ்தவத்திற்கு மாறினார்கள் (அரச அதிகாரி, ஹிந்து ஆண், மார்ச் 10, 2017). தற்போது கிறிஸ்தவ மதமாற்றங்கள் கடவுளுடைய சபை, இலங்கை பெந்தேகோஸ்தே மிஷன் போன்ற நற்செய்தி தேவாலயங்களால் வழங்கப்படும் அற்புதமான சுகப்படுத்துதல், தீர்க்கதரிசனங்கள், பண ஊக்கப்படுத்தல்கள் மூலம் உந்துதல் பெற்றே இடம்பெறுகின்றன (WRDS தலைவர், இந்து பெண், மார்ச் 9, 2017). கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் மதமாற்றங்கள் கலப்புத் திருமணத்தினால் கூட ஏற்படுகின்றது. இந்து மதத்தைச் சேர்ந்த மணப்பெண்ணோ/மணமகனோதான் எப்போதும் மதம் மாறி வருகிறார்கள் என்று பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர். இது இந்து மதம் என்பது பல தெய்வ வழிபாடுகளை கொண்டது என்பதால் மற்ற தெய்வங்களை அவர்கள் ஏற்றுக்கொள்வதே காரணம் என்று ஒருவர் பதிலளித்தார். தாங்கள் மதமாற்றத்தை வலுவாக எதிர்த்தாலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் இந்து கோவில்களிலும் சில இந்துக்கள் வணங்குவது கிறிஸ்தவ சுவிசேஷத்தின் தாக்கத்தின் விளைவாக ஏற்பட்டதென சிலர் பதிலளித்தனர். கருத்து மட்டங்களில் ஏமாற்றத்தை உணர்ந்த போதிலும் மதமாற்றங்களின் விளைவாக எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை என்று பதிலளித்தவர்கள் அனைவரும் தெரிவித்தனர். எனினும் யெகோவாவின் சாட்சி குழுவினர் மதமாற்றத்திற்கு கையாளும் ஊடுருவும் முறைகளால் அவர்களை தாங்கள் விரும்பவில்லை என பதிலளித்த இந்துக்களும் கிறிஸ்தவர்களும் தெரிவித்தனர்.

மத மாற்றங்கள் நடக்கின்ற போதிலும் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் இடையே இணக்க உறவுகள் இருப்பதாக அம்பாறையில் பதிலளித்த இந்துக்கள் கூறினார்கள். "கிறிஸ்தவர்கள் உங்களது அடுத்த வீட்டில் இருந்தால், அவர்கள் உங்களை

*எப்படியாவது மதம்மாற்றிவிடுவார்கள். அது சூனியமா என்று எனக்குத் தெரியவில்லை" என ஒரு பதிலளித்தவர் கிறிஸ்தவர்களை நோக்கி காணப்படும் பொதுவான மனோபாவத்தை எதிரொலித்தார் (மத்தியஸ்த சபை உறுப்பினர், இந்துப் பெண், மே 24, 2017). இரு சமூகங்களுக்குமிடையில் நல்ல உறவு இருந்தது ஏனெனில் பல கலப்புத்திருமணங்கள் நடைபெறுகின்றன. பெரும்பாலான இந்து மதத்திலிருந்து மாறியவர்கள் கோவிலும் தேவாலயத்திலும் வணங்குகின்றனர் (யாழ்ப்பாணத்திலிருந்து கருத்துக்களை எதிரொலிக்கின்றனர்) என மற்றொரு கருத்துத் தெரிவித்தவர் கூறினார். இருப்பினும் இயேசு அழைக்கிறார், இயேசு வாழ்கிறார், கத்தோலிக்கர்கள் மற்றும் மெத்தடிஸ்டுகள் போன்ற பல்வேறு கிறிஸ்தவ பிரிவுகளை பெயர் குறிப்பிட்டுக் கூறமுடிந்தாலும் பிரிவுகளுக்கிடையிலான வித்தியாசத்தை பதிலளித்த இந்துக்களால் கூற முடியாதிருந்தது. இந்துக் கோவில் நிர்வாகமானது தன்னுடைய நலன்களுக்காக பணியாற்றிக்கொண்டு பூசாரியின் உறவினர்களைக் கொண்டிருப்பதால் இந்துக்கள் கிறிஸ்தவம், இஸ்லாமிற்கு மதம்மாறுவதாக ஒரு இந்து பூசாரி தனது சொந்த சமூகத்தை விமர்சித்தார். எந்தவொரு ஒருங்கிணைந்த இந்து நிறுவனமும் இல்லாமலும் ஒவ்வொரு கோவிலும் சுயாதீனமாக இருப்பது இன்னொரு பங்களிக்கும் காரணியாக இருக்கிறது. எனவே கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் போலல்லாமல் பெரும்பாலான கோவில் நிர்வாகங்கள் சமூகத்திற்கு தொண்டு சேவைகளை வழங்கவில்லை. கிறிஸ்தவர்களுக்கு எதிராக இந்துக்கள் வெளிப்படுத்திய ஒரே குறை அவர்கள் வழிபாடு செய்யும்போது சத்தமாக பாடுவதால் அது சுற்றியுள்ள இந்துக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளது கற்றலைப் பாதிக்கிறது என்பதாகும். எனினும் ஒரு கிராமத்தில் ஒரு புதிய தேவாலயம் நிறுவப்பட்டபோது இந்துக்கள் கற்களை வீசியதுடன் எதிர்ப்புத் தெரிவித்தனர் ஒரு கிறிஸ்தவ போதகர் கூறினார். ஒரு உதாரணமாக தம்பலவில் என்று அழைக்கப்படும் ஒரு பகுதியில் கிறிஸ்தவர்கள் தேவாலயங்களை கட்டுவதை இந்துக்கள் தீவைத்து கட்டடங்களை அழித்ததன் மூலம் தடுத்து நிறுத்தினர்.*

*தெனியாயவில் பதிலளித்த இந்துக்கள் கிறிஸ்தவ நற்செய்தி தேவாலயங்கள் பற்றிய கவலைகளை எதிரொலித்தனர். அவர்கள் மதப்பிரச்சாரங்களைச் செய்யாத கத்தோலிக்க திருச்சபைக்கும் கடவுளின் மன்றம், கல்வாரி சபை, மற்றைய மதங்களைப் பற்றிய தவறான மனப்பாங்கினை பரப்புவதன் மூலம் தனிநபர்களை மதம்மாற்றும் மற்றைய புதிய சிறிய கிறிஸ்தவ தேவாலயங்களுக்குமிடையேயான வேறுபாட்டை தெளிவாக காட்டினார்கள். பதிலளித்த இந்துக்கள் மதமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கோவில்களை ஒரு சேவை வழங்கும் நிறுவனமாக கருதாமல் வியாபாரமாகக் கருதுகின்ற இந்து பூசாரிகளின் முதலாளித்துவ, விருப்பில்லாத அணுகுமுறையிலிருந்தான் மதமாற்றம் உருவாவதாக அவர்கள் நியாயப்படுத்தினர். எவ்வாறாயினும் தெருவில் கடவுளர்களின் உருவங்களை வீசி எறிவது போன்ற அவமதிப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதாக*

*நடப்பதுடன் இந்து அடையாளத்தை போட்டியிடுவது போன்றவையே நற்செய்தி தேவாலய சமூகங்களுடனான அவர்களின் பிரதான ஆட்சேபனையாகும்.*

*பெரும்பாலான முரண்பாடுகள் கிறிஸ்தவர்களுக்கிடையில் நற்செய்தி தேவாலயங்கள் தொடர்பானவையாக அல்லது இந்துக்கள், கிறிஸ்தவர்கள் தொடர்பானதாக இருக்கின்றது. மற்றைய முனையில் பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையேயான உறவு இணக்கமானதாக இருந்திருக்கவில்லை. கடவுளின் மன்றத்தின் ஒரு தேவாலயம் 2013ல் தாக்கப்பட்டதுடன் 2016ல் ஒரு மெதடிஸ்ட் தேவாலயம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதுடன் அங்கிருந்தவர்கள் பௌத்த பிக்குகளாலும் (பொதுபல சேனாவின் ஆதரவாளர்களாக கருதப்பட்டனர்) அவர்களது ஆதரவாளர்களாலும் தாக்கப்பட்டு மிரட்டப்பட்டு பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். கிறிஸ்தவ தேவாலயங்கள் மோசடி மற்றும் லஞ்சம் மூலம் மக்களை மதம்மாற்றப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும் கிறிஸ்தவ தேவாலயத்தின் ஒரு பிரதிநிதி அக்குற்றச்சாட்டை மறுத்ததுடன் கிறிஸ்தவ தேவாலயங்கள் மட்டுமே சமூக சேவையை வழங்குவதாக குறிப்பிட்டார் (போதகர், கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ ஆண், மே 26, 2018).*

### *2.4. சாதியப் பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை*

*யாழ்ப்பாணத்திலும் அம்பாறையிலும் உள்ள இந்து மற்றும் கத்தோலிக்க சமூகங்களுக்கிடையில் மத உள் உறவுகளை பாதிக்கும் சாதி ஒரு மறைந்த, பெரிதாகப் பேசப்படாத பிரச்சினை. சாதி தனி நபர்கள் மற்றும் சமூகங்களை சமூக, கலாச்சார, மற்றும் பொருளாதார பங்குகள் ஆகியவற்றினதும் வெளிகளினதும் படிநிலைகளில் வைக்கின்றன. சாதியானது மத சடங்குகள் மற்றும் பழக்கவழக்கங்களை பாதிக்கும் ஒரு காரணி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட சாதிகளை சேர்ந்தவர்கள் திருவிழாக்களில் உணவு தயாரிப்பது, பரிமாறுவது போன்ற சில செயல்பாடுகளை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக்கள் மத்தியில் குறிப்பிடப்பட்டது. தாழ்ந்த சாதி என்று கருதப்படும் இந்துக்களுக்கு வெளி, பங்கேற்கும் வாய்ப்பு மறுக்கப்படுவதனால் கோவில் திருவிழாக்களில் இடம்பெறும் வாக்குவாதங்கள் முரண்பாடுகளை விளைவித்துள்ளன. இது ஒரு உயர் சாதிக் கோவில் நிர்வாகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு வழிவகுத்ததுடன் மற்றொரு சந்தர்ப்பத்தில் தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்த பக்தர்கள் கோவிலுக்கு செல்வதை தவிர்த்துக் கொண்டார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு மாற்றாக புதிய கோயில்கள் தாழ்த்தப்பட்ட சாதியினரால் கட்டப்படுகின்றன. ஆனால் அவர்களின் மூதாதையர் கோவில்களை (குலக் கோவில்) பார்வையிட ஏங்குவதை அவர்கள் வெளிப்படுத்தினர்.*

உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஒரு பாதிரியார் அதிகாரப்பூர்வ சிறப்பு முத்திரையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுவது சாதி என்பதும் தமிழ் கத்தோலிக்கர்களிடையே ஒரு பிரச்சினையாக இருக்கின்றது என்பதின் வெளிப்பாடாகும். இதேபோல் இந்து சமூகத்தில் "சிறிய" தெய்வங்களின் கோயில்களுக்கு தாழ்த்தப்பட்ட சாதியினரும் சிவன் போன்ற "பெரிய" தெய்வங்களின் கோயில்களுக்கு உயர் சாதியினரும் பூசாரிகளாக அமர்த்தப்படுகின்றனர். ஆனால் இந்து மத குருக்கள் சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டாமல் பூஜைகளை அனைத்து கோவில்களிலும் செய்கிறார்கள். சாதி வேறுபாடுகளை தக்கவைத்துக் கொள்வது சாதாரண நபர்களையும் சமூக தலைவர்களையும் கொண்ட கோவில் நிர்வாகக் குழுக்கள் ஆகும். சாதி கிராமங்களில் பெரும்பாலும் கவனிக்கப்பட்டாலும் யாழ்ப்பாண நகர்ப்புற பகுதிகளிலும் சாதி விலகவில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். அரசியல் இலாபத்திற்காக சாதி அமைப்பில் முதலீடு செய்தவர்கள் இருப்பினும் பொது உறவுகளில் சாதி அடிப்படையிலான பாகுபாடு கிடையாது என்று கூறி தனது பார்வையை ஒரு தமிழ் அரசியல்வாதி வெளிப்படுத்தினார். சிறிய, குடும்பத்திற்கு சொந்தமான கோயில்களிலேயே சாதி வேறுபாடுகள் பார்க்கப்படுவதாகவும் யாழ்ப்பாணத்தில் உள்ள பொது கோவில்களில் சாதி அடிப்படையிலான எந்தவொரு கட்டுப்பாடுகளையும் விதிப்பதில்லை என்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆய்வுக் கேள்விகள் கேட்கப்பட்ட வேளையில் மாத்திரம் சாதி தொடர்பான பிரச்சினை தாழ்த்தப்பட்ட சாதியினரால் மட்டுமே வெளிக்கொணரப்பட்டது என்பது ஆராய்ச்சிக் குழுவால் அவதானிக்கப்பட்ட ஒரு விடயமாகும். பதிலளித்த உயர் சாதியினர் யாழ்ப்பாணத்தில் சாதி ஒரு பிரச்சனை இல்லை என்று மறுத்தனர். மேலும் சாதி மத உறவுகளில் மட்டுமல்லாது பாடசாலைகள் போன்ற சமூக நிறுவனங்களுக்குள்ளும் ஊடுருவுகின்றது. கிராமங்களில் உள்ள சில பாடசாலைகள் சாதிய அடிப்படையில் மாணவர்களுக்கு பாரபட்சம் காட்டுவதுடன் வாய்ப்புகளுக்கான பெறுவழியை கட்டுப்படுத்துவதாக சில பதிலளித்தவர்கள் தெரிவித்தனர். ஆனால் நகர்ப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் இது ஒரு விடயமாக இருக்கவில்லை.

சாதி என்பது ஒரு இனக்குழுவை பாதிக்கக்கூடியதும் முஸ்லிம் சமூகம் போன்ற பிற சமூகங்களால் தமது பிராந்திய எல்லையை விரிவுபடுத்துவதில் (நனவுபூர்வமாக அல்லது நனவிலியாக) மூலதனமாக்கப்படுகின்றதுமான ஒரு தோற்றநிலைக் கொள்கையும் ஆகும். அம்பாறையில் தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்த தமிழர்களது நிலத்தை வாங்குவதற்கு உயர் சாதி தமிழர்கள் தயங்கும்போது முஸ்லிம் சமூகம் அவற்றை வாங்குவதாக கூறப்படுகின்றது. கிறிஸ்தவ சமூகத்தைப் பொறுத்தவரையில் தேவாலய வழக்கங்களில் சாதி நுட்பமான முறையில் செயற்படுவதாக கூறப்பட்டது. உயர் சாதியனரே தேவாலய நிர்வாகத்தில் உயர்ந்த பதவிகளை வகிப்பதாக குறிப்பிடப்பட்டது. இருப்பினும்

*எல்லோரும் ஒன்றாக அமர்ந்து கொண்டிருக்கும் தேவாலய வழிபாட்டுச் சேவையின் போது சாதி ஒரு பிரிக்கக்கூடிய காரணி அல்ல என ஒரு போதகர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம், மன்னார், அம்பாறை ஆகிய இடங்களில் இது போன்ற நிலைமையே காணப்பட்டது.*

### 2.5. ஆட்புலத்தை விஸ்தரித்தல்: இன-மத ஆதிக்கத்தின் குறியீடாக காணி

*பிராந்திய விரிவாக்கத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்துவதற்கான ஒரு வழிமுறையாக ஒரு இன-மத சமுதாயத்தால் நிலம் (சில நேரங்களில் இன-மதத்தை சார்ந்தவையாகும்) கையகப்படுத்தப்படுவது என்பது சிறுபான்மை இனக்குழுக்களின் பாதுகாப்பற்ற உணர்விலிருந்து வெளிப்படும் போட்டியிடும் பிராந்திய இன-மத தேசியவாதங்களின் ஒரு வெளிப்பாடாகும். இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு தங்களை சிறுபான்மையினராகக் கருதும் முஸ்லிம் மற்றும் பௌத்தர்களிடம் குறிப்பாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் அரச, தனியார் காணிகளில் இராணுவ குடும்பங்களை குடியேற்றுவதன் மூலம் அரச அனுசரணையில் பிராந்திய விரிவாக்கம் இடம்பெறுவதிலும் அம்பாறையில் முஸ்லிம்களிடையிலும் அது இருக்கின்றது.*

*குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் மதங்களுக்கு இடையேயான இணக்கமின்மைக்கு ஆதாரமாக காணியே உள்ளது. 2017 ஆம் ஆண்டில் தரவு சேகரிப்பு வேளையில் முஸ்லிம்-பௌத்த உறவுகள் வன்முறைக்கு உள்ளாகும் சாத்தியத்தை கொண்டிருந்தன. அவை 2018ம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நிகழ்வாகின. உள்ளூர் நிர்வாகத்தில் முஸ்லிம்களின் செல்வாக்கு, மாவட்டத்தில் சிறுபான்மையினர் என்ற ரீதியில் பௌத்தர்களின் பாதுகாப்பின்மை, சிங்கள பௌத்த தேசியவாதம், பௌத்த தீவிரவாத குழுக்களின் பங்கு, இரு இன-மத சமூகங்களுக்கிடையிலான இடைத் தொடர்பு இல்லாதது ஆகியவை இரு மத சமூகங்களுக்கிடையிலான உறவை பாதிக்கும் பல அடுக்கு காரணிகளாக உள்ளன. பிராந்தியத்தின் புவியியல் கட்டுப்பாட்டை விரிபுபடுத்தும் நோக்கோடு சமயத்தை சாக்குப்போக்காக பாவித்து முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதாக பௌத்த சமூகத்தின் மீது குற்றச்சாட்டு உள்ள காணி தொடர்பான தகராறுகளில் இக்காரணிகள் வெளிப்படுகின்றன.*

*தொல்பொருளியல் திணைக்களம், அரசு ஆகியவற்றை அனுமதிக்கும் புனித பகுதிகள் சட்டம் மூலம் புனித பகுதி என்று வாதத்தை பயன்படுத்தி நியாயப்படுத்தி தனியார் நிலங்களை கைப்பற்றுவதன் மூலமே பிரதானமாக பௌத்த வெளிகள் விரிவுபடுத்தப்படுகின்றன. பௌத்த சமூகத்தின் பாதுகாப்பின்மை உணர்வுக்கு உரமூட்டுவதன் மூலம் அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக முஸ்லிம்களுக்கு*

சொந்தமான நிலங்களை கையகப்படுத்துவதற்காக இந்த சட்டத்தை அரசியல்வாதிகள் பயன்படுத்தினர் என அம்பாறையில் பதிலளித்த முஸ்லிம்கள் கூறினார்கள். முஸ்லிம்களுடைய நிலம் பௌத்தர்களால் புனித நிலமாக அறிவிக்கப்பட்டுள்ள சாம்புநகர் சம்பவம் ஒரு உதாரணமாகும். இன்னொரு சம்பவம் ஒரு விகாரை தொடர்பானது. இறைக்காமத்தில் ஒரு முஸ்லிம் நபருக்கு சொந்தமான காணியில் விகாரையொன்று பலாத்காரமாக கட்டப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு தரவு சேகரிப்பு நிகழ்ந்துகொண்டிருந்த நேரத்தில் இந்த விவகாரம் பௌத்த மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையே ஒரு எரிகின்ற பிரச்சினையாக இருந்தது. வட்டமடுவில் இதேபோன்ற நில பிரச்சினை சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகுத்தது.

இம்மாவட்டத்தில் பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையிலான ஓரளவிற்கு சகவாழ்வு இருக்கின்ற போதிலும் சிங்களவர்கள் மத வழிபாட்டிற்காக புனித சின்னங்களை அமைக்க அனுமதிக்கப்படவில்லை மாணிக்கமடு போன்ற இடங்களில் (சச்சரவு நிலவும் பிரதேசம்) என பதிலளித்த பௌத்த மதத்தினர் கூறினார்கள். முஸ்லிம்கள் சிங்கள கிராமங்களில் மசூதிகள் கட்டும் போது இது நியாயமற்று இருப்பதாக அவர்கள் கூறினார்கள்.

மாவட்டத்தின் ஒரு முஸ்லிம் பிரிவில் (அட்டாளைச்சேனை) அமைந்துள்ள ஒரு பழங்கால பௌத்த தளமான தீகவாபி[15] அம்பாறையில் பௌத்த மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையேயான சச்சரவிற்கு மற்றொரு காரணமாகும். அது ஒரு முஸ்லிம் பிரிவாக இருந்த போதிலும் பல சிங்களவர்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் தாங்கள் குடியேறியுள்ளனர் என்பதை அறியாமலேயே குடியேறியுள்ளனர். அப்பகுதியில் சிங்கள பெயரும் அடையாளமுமான "தீகவாபியை" பிரபலப்படுத்தும் முயற்சியாக முஸ்லிம் கிராமங்கள் ஊடாக தீகவாபிக்கு செல்லும் வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது முஸ்லிம் மற்றும் பௌத்த சமூகங்களிடையே கசப்புத்தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. அப்பகுதியிலுள்ள முக்கிய பிரச்சினைகள் தீகவாபி மற்றும் மாணிக்கமடு தொடர்பில் இருப்பதாக பதிலளித்த பௌத்தர்கள் தெரிவித்தனர். முஸ்லிம்கள் அப்பகுதியை உரிமை கொண்டாடினாலும் பிரதேசத்தில் காணப்படும் பழமையான பௌத்த எச்சங்கள் பௌத்த மத அடையாளத்தை நியாயப்படுத்துவதாக அவர்கள் வாதிடுகின்றனர். அப்பிரதேசத்தில் நிறுவப்படும் புத்தர் சிலைகளை முஸ்லிம்கள் அழிப்பதுடன் தலையீடு செய்ய அரசாங்க அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகளையும் தடுக்கின்றனர் என அவர்கள் கூறினார்கள்.

---

[15] ஈகைக்காக வழங்கப்படும் ஒருவரின் வருமானத்தின் ஒரு பகுதியாகும் - இஸ்லாத்தின் அடிப்படையான அம்சமாகும்

*இந்த விவகாரத்தை ஆராய்வதற்காக விகாரையில் பிக்குகள் தலைமையிலான செயற்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (கிராம அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், பௌத்த ஆண்களும் பெண்களும், மே 25, 2017).*

இரு சமய சமூகங்களுக்கிடையே நிலப்பகுதிக்கு ஒரு வித்தியாசமான பூசல் முஸ்லிம்களுக்காக சவுதி அரேபிய அரசாங்கம் நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட நுரைச்சோலை சுனாமி வீடமைப்பு திட்டத்தின் கீழ் வீடுகளை விநியோகம் செய்வது தொடர்பாக எழுந்தது. வீடுகளுகளை கோரி சிங்களவர்கள் நீதிமன்றில் வழக்கொன்றை தொடுத்ததன் காரணமாக வீடுகள் முஸ்லிம்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. மூன்று சமூகங்களுக்கிடையிலும் வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள போதிலும் அது இன்னமும் செயற்படுத்தப்படவில்லை.

இவ்வாறான பதற்றங்கள் இருந்த போதிலும் அம்பாறை சிங்கள பௌத்தர்கள் என்ற நிலைப்பாட்டைப் பற்றி பதிலளித்த பௌத்தர்கள் நேர்முறையான மனப்பாங்கினை வெளிப்படுத்தினர். மாவட்டத்தில் உள்ள பல்வேறு இன-மத சமுதாயங்கள் போரின் போது இருந்ததைப் போலல்லாமல் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் மக்களிடையே சகவாழ்வு இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். எவ்வாறாயினும் அவர்களது பிரதான இடைத்தொடர்பு தமிழ் மக்களுடனேயே இருப்பதாகவும் முஸ்லிம்களுடனான தொடர்பு குறைவாகவும் இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். இது இந்து சமூகத்தினருடன் கூடுதலாக தன்னை அடையாளப்படுத்திய தீகவாபியை சேர்ந்த பௌத்த பெண்ணில் மனப்பாங்கில் பிரதிபலித்தது. *“இந்துக்கள் ஒரு அப்பாவி சமூகம், அவர்களது நிலை போருக்குப் பின்னரும் மோசமாகவுள்ளது. திருக்கோவில் பகுதிக்கு சென்றால் அவர்களின் நிலைமையை நீங்கள் காணலாம். இந்துக்களுடன் எங்களுக்கு பல ஒற்றுமைகள் உள்ளன. ஒரே தெய்வங்களை நாம் பகிர்ந்து கொள்கிறோம். போருக்கு முன்பும் எங்கள் உறவுகள் மிகவும் வலுவாக இருந்தன. இருப்பினும், முஸ்லிம்கள் இதற்கு எதிர்மாறாக உள்ளனர். அவர்கள் சுயநலமாக உள்ளதுடன் நிலத்திற்காக மற்ற சமூகங்களுடனும் போட்டியிடுகின்றனர்.” (கிராம அபிவிருத்தி மன்ற உறுப்பினர், பௌத்த பெண், மே 25, 2017)* இன மத உறவுகளின் சிக்கலான தன்மை, சூழமைவு சிறப்புத்தன்மைக்கான ஒரு எடுத்துக்காட்டு இதுவாகும். தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் சிறுபான்மையினராக உள்ள அம்பாறையில் முன்னர் வேற்றினத்தார் என பார்க்கப்பட தமிழர்கள் மீது பச்சாதாபம் காட்டுகின்றனர்.

பௌத்தர்கள் தாங்கள் சிறுபான்மையினராக உணரும் பாதுகாப்பின்மை உணர்ச்சியின் வெளிப்பாடான ஆட்புல விரிவாக்கம் தொடர்பானதாவே பௌத்த - முஸ்லிம் முரண்பாடுகள் உள்ளன. முஸ்லிம் குடியேற்றங்கள் படிப்படியாக விரிவடைவதன் மீதான தமிழ்-முஸ்லிம் உறவுகள் வடக்கு-கிழக்குப் பகுதியில் முஸ்லிம் சமூகத்தின்

*சிறுபான்மை நிலையுடன் தொடர்புபட்டது. இருப்பினும் தங்கள் ஆட்புலத்தை விரிவுபடுத்துவதற்கு முஸ்லிம் சமூகத்தால் பயன்படுத்தப்படும் மூலோபாயங்கள் பௌத்த அணுகுமுறையைப் போலல்லாது தமிழ் சமூகத்தின் ஒப்பீட்டளவினாலான வறுமையை முதலீடாக்குவதாகும். சந்தைப் பெறுமதியை விட கூடிய பெறுமதிக்கு தமிழர்களுடைய காணிகளை வாங்குவதன் மூலம் முஸ்லிம்கள் படிப்படியாக தங்கள் இட எல்லைகளை விரிவுபடுத்துவதாக அம்பாறையில் பதிலளித்த தமிழர்கள் குற்றம் சாட்டினர். இவ்வாறு தமிழ் மக்கள் ஒரு காலத்தில் வாழ்ந்த கிராமங்கள் இப்பொழுது முஸ்லிம் கிராமங்களாக மாறிவிட்டன. தமிழ் சமூகத்திற்கான ஒரு சுனாமி மீள் குடியேற்ற பகுதியான சின்னமுகத்துவாரம் ஒரு உதாரணமாகும். பணம் தேவைபட்ட தமிழர்கள் முஸ்லிம்களுக்கு காணிகளை விற்றதால் இப்போது அது முஸ்லிம் பகுதியாக மாறியுள்ளது. நிலம் தொடர்பான பிரச்சினைகளில் சாதி ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. ஏனெனில் நிலப்பரப்பு சாதிகளின் முதன்மை அடையாளங்களுள் ஒன்றாகும். சுனாமி மீள்குடியேற்ற நிலப்பகுதி தாழ்த்தப்பட்ட சாதி மக்களுடையதாக கருதப்படுகின்றது. எனவே இந்த நிலம் உயர் சாதி தமிழர்களால் கைவிடப்பட்டது. மறுபுறம் முஸ்லிம்கள் அத்தகைய நிலத்திற்கு நல்ல விலைகளை வழங்கி அவற்றை வாங்குகின்றனர். எவ்வாறெனினும் யாழ்ப்பாணத்தில் இருப்பதைப் போன்று சாதி ஒரு பாரபட்சத்தின் அடிப்படையாக அம்பாறையில் இல்லை என பதிலளித்த தமிழர்கள் வலியுறுத்தினார்கள்.*

*கலப்புத் திருமணம், நெறியற்ற மதமாற்றங்கள், அரசியல் செல்வாக்கு ஆகியவை தமிழ் நிலங்களை பெற்றுக்கொள்வதற்கான மற்றைய வழிமுறைகளாகும். தமிழர்கள், முஸ்லிம்கள் இடையேயான கலப்புத்திருமணங்களை தமிழ் நிலங்களை கையகப்படுத்த வேண்டுமென்றே எடுக்கப்படும் முயற்சியாக கருதுவதாக அம்பாறையில் பதிலளித்த தமிழர்கள் குறிப்பிட்டனர். தங்கள் சமூகத்தின் உறுப்பினர்கள் இஸ்லாத்திற்கு மதம்மாறுவதை தற்போதைய பிரச்சனையாக பதிலளித்த இந்துக்கள் குறிப்பிட்டனர். ஆலையடிவேம்பு பிரதேசத்தில் இஸ்லாத்திற்கு மதம்மாறிய சுமார் 5-6 இந்துக்கள் இப்போது அவர்களது எஞ்சிய குடும்பங்களையும் மதம்மாற்றி வருவதாக அவர்கள் தெரிவித்தனர். இது தமிழ் பிரதேசத்தில் ஒரு மசூதியை கட்டியெழுப்புவதை நியாயப்படுத்த முஸ்லிம் சமுதாயத்தால் உந்தப்பட்ட ஒரு சதியாக கருதப்பட்டது. மதமாற்றத்திற்கான ஒரு முக்கிய காரணியாக வறுமை குறிப்பிடப்பட்டுள்ளது. "தமிழர்களுக்கு பாதுகாப்பான வாழ்வாதாரங்கள் அல்லது சந்தைகள் இல்லை. எனவே முஸ்லிம் பகுதிகளில் வேலை வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் பொருளாதார இலாபத்தை பெறலாம் என இந்துக்களை மூலைச்சலவை செய்து மதம்மாற்றுகின்றனர" (அரச அதிகாரி, இந்து ஆண், மே 24, 2017). விடுதலைப் புலிகளிடமிருந்து தப்பிப்பதற்கு சில தமிழர்கள் இனவாத மோதல் சமயத்தில் இஸ்லாத்திற்கு மதம்மாறினார்கள் எனவும் குறிப்பிடப்பட்டது.*

அம்பாறையில் ஆட்புல விரிவாக்கம் மாவட்டத்திலுள்ள அரசியல் செல்வாக்கின் மூலமும் அடையப்படுகின்றது. பலம்வாய்ந்த அரசியல்வாதியொருவரை பயன்படுத்தி தமிழ் பிரிவிலுள்ள 34 குடும்பங்களை முஸ்லிம் பிரிவிற்கு உரித்துடையவர்களாக வர்த்தமானி மூலம் அறிவித்து முஸ்லிம் பிரிவின் எல்லைகளை விரிவுபடுத்துவதன் மூலம் முஸ்லிம்கள் ஆட்புல எல்லைகளை திரிவுபடுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை ஒரு உதாரணமாகும். தமிழர்கள் அரசியல் ரீதியில் பலவீனமாக இருப்பதால் இத்தகைய விடயங்கள் நடக்க அனுமதிக்கப்படுவதாக பதிலளித்தவர்கள் தெரிவித்தனர். முஸ்லிம்களை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்று கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் ஒருமனதாக கூறினார்கள். நிலம் தொடர்பான சச்சரவுகளும் முஸ்லிம்கள் தமிழ் நிலத்தை கையகப்படுத்துதலும் முக்கிய காரணமாகும்.

ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக இடம்பெறும் ஆட்புல விரிவாக்கம் பெறும்பான்மை - சிறுபான்மை தொடர்பான பாதுகாப்பின்மையின் வெளிப்பாடாகும். தேசிய ரீதியில் பெரும்பான்மையினரான பௌத்தர்கள் அம்பாறை மாவட்டத்தில் தமது சிறுபான்மை நிலைக்கு எதிர்வினையாற்றுகின்றனர்.

அம்பாறையில் பெரும்பான்மையினராக இருக்கும் முஸ்லிம்கள் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கெதிரான சிறுபான்மை நிலைக்கெதிராக எதிர்வினையாற்றுகின்றனர். இரு சமூகங்களும் ஆதிக்கம் செலுத்தும் ஊடகமாக நிலம் இருக்கின்றது. ஆனால் அது நிலச் சந்தையினை சூழ்சித்திறத்துடன் கையாளுதல்/திரிபுபடுத்தல், சமூக (கலப்புத்திருமணம்), சட்ட (புனித பகுதிகள் சட்டம்), அரசியல் ஆகிய ஒவ்வொரு இன-மத சமூகத்தின் மூலதனத்தின் மூலம் கையகப்படுத்தப்படுகின்றது.

### 2.6. காணி மற்றும் உரிமைத் தகுதி: போருக்கு பின்னரான பரிசீலனைகள்

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற இனப் போரும் அது பல வடிவங்களில் இடம்பெயர்ந்த மக்களைத் தோற்றுவித்தமையும் பல்வேறு இன-மத சார் சமுதாயங்களுக்கிடையே நிலத்திற்கான போட்டியினை தோற்றுவித்துள்ளது. 1990ல் வடக்கு முஸ்லிம்களை வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் கட்டளையிட்டமையை விளைவாக கொண்டுவந்த இனப்பிரச்சினையின் வரலாற்றைப் பரிசீலனைக்குட்படுத்தாமல் ஆட்புல விரிவாக்கப் பிரச்சினையைப் பற்றி மன்னாரில் விவாதிக்க முடியாதது. இதன் விளைவாக முஸ்லிம் சமூகத்தினர் தமது நிலங்களையும் சொத்துகளையும் கைவிட்டுச் சென்றதுடன் சில சமயங்களில் அவற்றை தமிழ் அயலவர்களது கண்காணிப்பில் விட்டுச்சென்றதுடன் சில சமயங்களில் அவர்கள் திரும்புவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் அவற்றை விற்றுவிட்டு சென்றனர். மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்திற்கு திரும்புவதன் மூலம்

*அவர்களின் படிப்படியான ஆட்புல விரிவாக்கம் பெரும்பான்மை தமிழ் சமூகத்தினரின் மத்தியில் பாதுகாப்பின்மை உணர்வை தூண்டுகின்றது.*

*மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்கத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவு இன முரண்பாடுகளின் விளைவுகள் மற்றும் வடக்கு மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை ஆகியவற்றின் மூலம் மாற்றத்திற்குள்ளாகி வந்துள்ளது. ஒரு முக்கிய தகவல் வழங்குனரின் தகவலின்படி கடந்த காலங்களில் (அதாவது முஸ்லிம்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னர்) இனங்களுக்கிடையேயான, மதங்களுக்கிடையேயான சகவாழ்வு மன்னாரின் நெறிமுறையாக இருந்தது. சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையின் கட்சி அரசியல் கூட அதனைப் பாதிக்கவில்லை (பூசகர், இந்து ஆண், ஏப்பிரல் 14, 2018). 1990ல் முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டமை திருப்புமுனையாக அமைந்ததுடன் அது இரு சமூகங்களுக்குமிடையில் குறிப்பிடத்தக்க பிளவை ஏற்படுத்திய காரணியாக கருதப்படுகிறது. இதற்கு முன்னர் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவு "இளைய மற்றும் மூத்த சகோதரர்களுக்கு" இடையே உள்ள உறவைப் போன்றதாக காணப்பட்டது. ஒரு முஸ்லிம் தவறிழைத்த போது ஒரு தமிழரால் அவரைத் திட்ட முடிந்தது அது முஸ்லிம் சமுதாயத்தில் எதுவித குழப்பத்தையும் ஏற்படுத்தியதில்லை (கள அலுவலர், கத்தோலிக்க ஆண், மார்ச் 6, 2017). இந்த ஒப்புமை 1990 களின் முற்பகுதியில் மன்னாரில் இருபகுதியினருக்கும் இடையேயான "உறவுமுறை" நட்புறவை மட்டுமல்லாமல் கத்தோலிக்க தமிழ் சமூகத்தின் அதிக மக்கள்தொகையினை அடிப்படையாகக் கொண்ட ஒரு படிநிலை உறவையும் குறிக்கிறது.*

*மன்னார் மாவட்டத்தில் போருக்குப் பின்னர் முஸ்லிம்கள் திரும்பிய போது பொருளாதாரம் மற்றும் அரசியல் கத்தோலிக்க-முஸ்லிம் உறவுகளின் மையத்திலும் இந்து-முஸ்லிம் உறவுகளின் மையத்திலும் உள்ளது. முஸ்லிம் மக்கள் முன்னர் இருந்ததைவிட மிகவும் செல்வச் செழிப்புடன் திரும்பி வருவதாக பதிலளித்த இந்து மற்றும் கத்தோலிக்கர்களது கருத்து இருந்தது. மேலும் ஒரு முக்கிய முஸ்லிம் அரசியல்வாதியிடமிருந்து பெறப்படும் அரசியல் ஆதரவு இரு சமூகங்களுக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்துகின்றது. இந்த அரசியல்வாதி இரு சமூகங்களுக்கிடையில் அவரது தனிப்பட்ட அரசியல் ஆதாயத்திற்காக முரண்பாடுகளை ஏற்படுவதாக தாங்கள் கருதுவதாக பதிலளித்த இரு கத்தோலிக்கர்கள் குறிப்பிட்டனர்.*

*எனவே தமிழ்/கத்தோலிக்க-முஸ்லிம் உறவுகளின் மத்தியில் நிலம் தொடர்பான பிரச்சினைகளும் முஸ்லிம் மக்களுடைய சனத்தொகை வளர்ச்சியும் உள்ளன. தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உள்ள பிறப்பு விகிதத்தில் உள்ள வேறுபாட்டைப் பற்றி தனது கவலையை வெளியிட்ட ஒரு ஓய்வு பெற்ற இந்து மருத்துவ அதிகாரி விரைவில் முஸ்லிம்கள் தமிழ் மக்களை எண்ணிக்கையில்*

விஞ்சுவார்கள் எனக் கூறினார் (மருத்துவ அதிகாரி, ஹிந்து ஆண், மார்ச் 6, 2017). முஸ்லிம்களின் சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு (இது இருபது ஆண்டுகளில் நிகழ்ந்த ஒரு இயற்கை நிகழ்வு என வாதிடப்படக் கூடும்) மேலும் நிலத் தேவைக்கு வழிவகுத்தது. ஒரு புறம் ஒரு குறிப்பிட்ட முஸ்லிம் அரசியல்வாதி காடுகளை அழித்து அவ்விடங்களில் முஸ்லிம் குடும்பங்களை மீளக் குடியமர்த்த தனது செல்வாக்கை பயன்படுத்தி வருகிறார் எனக் கூறப்படுகின்றது. இது மாவட்டத்தில் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு வழிவகுத்துள்ளது. மறுபுறத்தில் தாங்கள் அந்த பகுதிகளை விட்டு வெளியேறும்போது கைவிட்டுச் சென்ற நிலங்களை கத்தோலிக்க திருச்சபை கையகப்படுத்தியுள்ளதாகவும் அவை திரும்பத் தரப்பட வேண்டும் என்றும் முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது பல சச்சரவுகளை குறிப்பாக எல்லைக் கிராமங்களில் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய சச்சரவின் ஒரு எடுத்துக்காட்டு அருகருகே உள்ள கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் கிராமங்களாகும். ஒரு முஸ்லிமினுடைய நிலம் எனக் கருதப்படுகின்ற நிலப்பகுதியில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் நிறுவப்பட்டமை இவ் அருகருகே உள்ள கிராமங்களில் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. இந்த இரண்டு சமுதாயங்களாலும் உருவாக்கப்பட்ட பல்வேறு போட்டித்தன்மையான வாதங்கள் இந்த பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளன. கத்தோலிக்க சமுதாயத்தின் வாதம் என்னவெனில் முஸ்லிம்கள் அந்த நிலத்தை சொந்தம் கொண்டாடிக்கொண்டிருப்பதற்கான காரணம் கத்தோலிக்கர்களின் சனத்தொகை குறைந்து முஸ்லிம்களின் சனத்தொகை அதிகரித்துள்ளமை என்பதாகும். கேள்விக்குட்பட்ட நிலப்பகுதி பாரம்பரிய முஸ்லிம் மயானமாக இருந்ததுடன் பின்னர் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளின் செல்வாக்கினால் அங்கு ஒரு தேவாலயம் கட்டியெழுப்பப்பட்டதாக முஸ்லிம் சமுதாயத்தினர் கூறுகின்றனர். அந்நிலம் கத்தோலிக்க திருச்சபைக்கு சொந்தமானதாக இருந்ததுடன் அதை மயானமாக பாவிக்க முஸ்லிம் சமுதாயத்தினருக்கு அனுமதியளித்ததாக கத்தோலிக்கர்கள் கூறுகின்றனர். வெளியேற்றப்பட்டதன் பின்னர் 2004 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் திரும்புவதற்கு எந்த வாய்ப்புமில்லை என கருதிய முஸ்லிம் மக்கள் தங்கள் நிலத்தை விற்றதாகவும் இந்தியாவுக்கு தப்பிச் சென்ற சில முஸ்லிம்கள் அவர்கள் நிலத்தை விற்பதற்கான அதிகாரத்தை தங்கள் உறவினர்களுக்கு வழங்கிச் சென்றபோது அவர்கள் அவற்றை விற்றதாகவும் கத்தோலிக்கர்கள் கூறுகின்றனர். இந்தக் காரணிகள் மன்னாரில் உள்ள தமிழ்-முஸ்லிம் உறவுகளின் சிக்கலான தன்மையை மேலும் சிக்கலாக்குகின்றன.

இந்த ஒரு பிரச்சினை தவிர இரண்டு சமூகங்கள் இடையே எந்த மோதல்கள் இல்லை என்றும் கத்தோலிக்க கிராமத்தை சேர்ந்தவர்கள் கடைகள் மற்றும் தபால் அலுவலகத்திற்காக முஸ்லிம் கிராமத்தை சார்ந்திருப்பதாகவும் பதிலளித்த முஸ்லிம்கள்

*கூறினார்கள். முஸ்லிம் கிராமத்தில் ஒரு நீண்டகால கத்தோலிக்க பாடசாலை மற்றும் தேவாலயமும் கூட உள்ளது. அங்கு மதரீதியான சமூகங்கள் எந்த முரண்பாடு அல்லது மோதல்கள் இன்றி தினசரி இடைத்தொடர்பை பேணுகின்றன. எனினும் பிரார்த்தனை இடம்பெறும் சமயத்தில் முஸ்லிம்கள் தேவாலயத்தின் மீது கற்களை எறிந்து உரத்த இசையை ஒலிக்கவிடுவதன் மூலம் பிரார்த்தனையை பாதித்தனர் என்று சில பதிலளித்த கத்தோலிக்கர்கள் கூறினார்கள். ஆனால் அந்நிலத்தின் மீதான கத்தோலிக்கர்களின் உரிமையை நீதிமன்றம் உறுதி செய்த பின்னர் அவ் வன்முறை நிறுத்தப்பட்டது.*

*உள்நாட்டுப் போரின் போது தமிழர்களின் இடப்பெயர்வு காரணமாக சில கிராமங்கள் கைவிடப்பட்டமை நிலங்கள் மீதான தகராறுகளுக்கு வழிவகுத்துள்ளன. இடப்பெயர்வின் காரணமாக எருக்கலம்பிட்டி என்ற கிராமத்தை முஸ்லிம்கள் ஆக்கிரமித்து இப்போது அது ஒரு முஸ்லிம் கிராமமாக மாற்றமடைந்துள்ளதாக பதிலளித்த கத்தோலிக்கர்கள் கூறினார்கள். அக்கிராமத்தில் ஒரு தேவாலயம் இருக்கின்ற போதும் முஸ்லிம்கள் அதை வழிபாட்டிற்கு பயன்படுத்த அனுமதிப்பதில்லை என பதிலளித்தவர்கள் கூறினார்கள். தங்கள் தேவாலயத்திற்கு அருகில் ஒரு பள்ளிவாசல் கட்டப்படுவது தொடர்பில் மற்றொரு கிராமத்தைச் சேர்ந்த சில பதிலளித்த கத்தோலிக்கர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.*

*இடப்பெயர்வுகள் காரணமாக தமிழ் கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களாக மாறுதல், நிலத்தின் உரிமை மீதான பதற்றங்கள், அரசியல் தலையீடுகளினதும் போரினதும் இடப்பெயர்வினதும் விளைவாக ஏற்படும் வணக்க வழிபாடுகளுக்கான பெறுவழி ஆகியவையே மன்னாரில் சமுதாயங்களுக்கிடையேயான முரண்பாட்டின் தூண்டுதல்களாகும்.*

*மன்னாரில் முஸ்லிம் நபர்கள் மற்றும் கத்தோலிக்க திருச்சபைக்கு இடையில் முரண்பாடு இருக்கின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் சமூகம் மற்றும் வடக்கு மாகாண சபைக்கும் இடையில் முரண்பாடு இருக்கின்றது. முஸ்லிம்களுக்கும் தமிழ் சமூகங்களுக்கும் இடையில் உள்ள பதட்டங்களில் ஒன்று மீள்குடியேற்றம் தொடர்பானது. யாழ்ப்பாணத்தில் 4300 முஸ்லிம் குடும்பங்கள் விடுதலைப் புலிகள் அவர்களை வெளியேறும்படி கட்டளையிட்ட போது இருந்ததாக ஒரு முக்கிய தகவல் வழங்குபவர் தெரிவித்தார். குடும்பங்கள் தம்முடன் 500 ரூபாய் மட்டுமே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பல குடும்பங்கள் புத்தளம், நீர்கொழும்பு, பாணந்துறை ஆகிய இடங்களிலிருந்த முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் 2002ல் யாழ்ப்பாணத்திற்குத் திரும்ப ஆரம்பித்ததுடன் தற்போது யாழ்ப்பாணத்தில் 700 முஸ்லிம் குடும்பங்கள் மற்றும் 13 பள்ளிவாசல்கள் உள்ளன (மௌலவி, முஸ்லிம் ஆண், மார்ச் 8, 2017). இந்திய நிதியுதவியில் செயற்படுத்தப்படும் அல்லது அரசாங்க அதிகாரிகளினால் செயற்படுத்தப்படும் உள்ளூர் வீட்டு திட்டங்களில் முஸ்லீம்கள்*

*சேர்க்கப்படவில்லை என்று பதிலளித்தவர்கள் கூறினார்கள். 700 குடும்பங்களில் 60 குடும்பங்களுக்கு மட்டுமே இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்டன (மௌலவி, முஸ்லிம் ஆண், மார்ச் 9, 2017). மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது உண்மைகளைத் தவிர்த்து எப்போதும் தமிழர்களின் பக்கத்தில்தான் நிற்பதாக பதிலளித்த முஸ்லிம் நபர் கூறினார். முஸ்லிம்கள் தாங்கள் வற்புறுத்தலால் கைவிட்ட நிலங்களை மீட்டுக் கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். உதாரணத்திற்கு அவர்கள் பொம்மைவெளி பிரதேசத்தில் மீளக்குடியேற ஆரம்பித்தபோது அந்நிலப்பகுதி பயிர்ச்செய்கைக்குரியது என்று பிரகடனம் செய்த பிரதேச செயலக அலுவலம் அதை அனுமதிக்கவில்லை. முஸ்லிம் உரிமையாளர்களுக்கு நிலங்களை மீளப் பெற்றுக்கொடுப்பது பற்றிய பிரச்சினை ஒன்றுதான் பொதுக் கூட்டங்களில் எழுப்பப்பட்டபோது எப்போதும் தட்டிக்கழிக்கப்பட்டு வருவதாக பதிலளித்த ஒருவர் குறிப்பிட்டார் (மௌலவி, முஸ்லிம் ஆண், மார்ச் 9, 2017). இருப்பினும் யாழ்ப்பாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் எந்தவொரு பிரச்சினையும் இல்லாத போதிலும் மாவட்டத்திற்கு வெளியில் இருக்கும் முஸ்லிம் தலைவர்கள்தான் பிரச்சனைகளை உருவாக்கி வருகின்றனர் என ஒரு தமிழ் அரசியல்வாதி குறிப்பிட்டார். சில முஸ்லிம்கள் தங்களுடைய நிலங்களையும் கடைகளையும் பெரிய அளவிலான பணத்திற்கு விற்றுவிட்டதாகவும் அதன் பிறகு அவற்றை அவர்கள் உரிமை கோருவது தவறானது என்றும் அவர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் யாரும் முஸ்லீம்களின் மீள்குடியேற்றத்தை எதிர்க்க மாட்டார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். "உண்மையான யாழ்ப்பாண முஸ்லிம்களே எங்களுக்கு மீள வேண்டும்" யாழ்ப்பாணத்துக்கு வெளியில் இருந்து முஸ்லிம் தலைவர்கள் அரசியல் இலாபத்திற்காக மாவட்டத்தில் உள்ள பிரச்சனைகளில் ஊடுருவ முயல்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார் (அரசியல்வாதி, இந்து ஆண், மார்ச் 9, 2017). 1990 களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுடன் நல்ல உறவை பேணிவந்ததாக பதிலளித்த முஸ்லிம்கள் தெரிவித்தனர். முஸ்லிம்களை வெளியேற்றியது இந்த இரண்டு சமூகங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தியுள்ளதோடு உறவு இன்னும் மீளமைக்கப்படவில்லை. மீள்குடியேற்றம் மற்றும் நிலத்தை மீள வழங்குதல் தொடர்பான பிரச்சினை இரு சமூகங்களுக்கும் இடையில் பதற்றங்களை அதிகரிக்கின்றது.*

### 2.7. தொழில், அரச பயன்களுக்கான பெறுவழி: சமத்துவத்திற்கான கோரிக்கை

*பிராந்திய தேசியவாதம், இன-மத பெரும்பான்மைவாதம் அரசியல், மதத் தலைவர்களால் ஊக்கப்படுத்தப்படுவது மட்டுமில்லாது அவை அரச, பிராந்திய நிறுவன கட்டமைப்புகளால் பரப்பப்படுகின்றன. அதனால் மதத்தை, இனத்தை அடிபடையாகக் கொண்ட பாகுபாடு எதிர்பார்க்கப்படுகின்றது. சில சமயங்களில் அது சிறுபான்மை சமுதாயங்களால் அனுபவிக்கப்படுகின்றது.*

*மாவட்டத்தில் உள்ள மதங்களுக்கிடையேயான முரண்பாடுகளின் மையத்தில் அரசியல், அரசியலுடன் தொடர்புபட்டவர்கள் இருந்தனர் என்று பதிலளித்த மன்னார் மக்கள் அனைவரும் அறிந்திருந்தனர். அரசியல் ஆதரவில் இருந்து எழுந்த பல ஏற்றத்தாழ்வுகள் எழுப்பப்பட்டன். இஸ்லாமிய நாடுகளிலிருந்து ஸகாத் வடிவத்தில் கிடைக்கப்பெறும் நிதியளிப்புக்கள் முஸ்லிம்கள் முசலி, முருங்கன், வில்பத்து, சிலாப வீதியை ஒட்டிய பகுதிகளில் தங்கள் ஆட்புலத்தை விரிவுபடுத்துவதற்கு உதவுகின்றன.*

*முஸ்லிம் கிராமங்களின் விரிவாக்கத்துடன் இணைந்திருப்பது புதிய பள்ளிவாசல்களின் தோற்றம் ஆகும். மேலும் முஸ்லிம் அரசியல்வாதிகள் பாடசாலைகளை கட்டி எழுப்புவதன் மூலம் இந்த கிராமங்களின் உள்கட்டுமானத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிதியளிப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதனால் அபிவிருத்தியடைந்த சிறு சிறு பிரதேசங்கள் முஸ்லிம் அல்லாத கிராமங்க்களை ஒட்டி இருக்கின்றன (சி.எஸ்.ஓ. பிரதிநிதி, கத்தோலிக்க பெண், மார்ச் 6, 2017).*

*முஸ்லிம் சமூகத்தின் உறுப்பினர்களுக்கு அரசாங்க நியமனங்கள் கிடைப்பதில் செல்வாக்கு மிக்க முஸ்லிம் அரசியல்வாதிகளால் குடும்ப ஆதிக்கம், பாரபட்சம் ஆகியவை இருப்பது மன்னாரில் பதிலளித்த தமிழர்களால் எழுப்பப்பட்ட மற்றொரு விடயமாகும். அவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமது உரிமைகள் மறுக்கப்படுவதாக உணர்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். எனினும் முஸ்லிம் அரசியல்வாதிகள் கிடைக்கப்பெறும் நிதியை தமிழ் கிராமங்களுக்கு உதவவும் பயன்படுத்துகின்றனர் என்று பதிலளித்த முஸ்லிம்கள் தெரிவித்தனர். வடக்கு மாகாண சபை முஸ்லிம் மக்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகளை வழங்குவதில் பாகுபாடு காட்டுவதாக அவர்கள் குற்றம் சாட்டினார்கள். மாறாக முஸ்லீம்களுக்கு அமைச்சரவையில் இருக்கும் செல்வாக்கின் காரணமாக தாங்கள் ஒடுக்கப்படுவதாக கத்தோலிக்கர்கள் கூறுகின்றார்கள்.*

*இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதிப்பிற்குள்ளாதல் பற்றிய இந்தச் சொல்லாடலை அடிப்படையாகக் கொண்டே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவு, அவர்களது இடைத்தொடர்பு வரையறுக்கப்பட்டுள்ளது.*

*கத்தோலிக்க திருச்சபை ஆட்சியிலும், முடிவெடுப்பதிலும் சக்திவாய்ந்த பாத்திரத்தை வகிக்கிறது என்பது மன்னாரில் உள்ள இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் ஒரு முக்கியமான அம்சமாகும். எனவே இந்து மற்றும் மற்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் அவர்களின் நலன்கள் நிர்வாக முடிவுகளில் பரிசீலிக்கப்படவில்லை என்ற ஒரு உணர்வு இருக்கின்றது. முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் மன்னாரின் அரசியலிலும் நிர்வாகத்திலும் குறைவாக ஆர்வம் காட்டும் ஆயர் லயனல் இமானுவேல் பெர்னாண்டோ என்பவரால் பிரதியீடுசெய்யப்பட்டாலும்*

நிர்வாகத்தின் அனைத்து துறைகளிலும் கத்தோலிக்க திருச்சபைக்கு சக்தி வாய்ந்த செல்வாக்கு உள்ளது என்பது பொதுவான பார்வையாகும். மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் கத்தோலிக்கர்கள் என்றும் அவர்கள் எல்லோரையும் சமமாக நடத்துவதாக கூறிக்கொண்டாலும் அவர்கள் பாரபட்சம் காட்டுவதாக பதிலளித்த ஒரு இந்து பூசகர் கூறினார் (பூசகர், ஹிந்து ஆண், தனிப்பட்ட தொடர்பாடல், மார்ச் 6, 2017). இந்து திருவிழாக்களின் போது பதாகைகளை நிறுவுவது அவற்றிற்கு பொலிஸாரின் அனுமதியை பெறுவது என்பது பதிலளித்த இந்துக்களால் மேற்கோள் காட்டப்பட்ட இந்த அதிகாரத்தின் ஒரு எடுத்துக்காட்டு ஆகும். கோயில் நிர்வாகம் அனைத்து ஆவணங்களையும் சரியாக பூர்த்தி செய்து காவல்துறையை அணுகும் போது பதாகைகளை நிறுவுவதற்கு முற்கூட்டிய தடை உத்தரவு பலம் வாய்ந்த கத்தோலிக்கர் ஒருவரால் பெறப்பட்டிருக்கும். கோயில் நிர்வாகத்தால் இந்த உத்தரவை எதிர்த்துப் போட்டியிட முடியாதிருக்கும்.

இதேபோல் கிறிஸ்தவ (கத்தோலிக்கம் அல்லாத) சமூகம் தங்கள் சொந்த தேவாலயங்களை கட்டியெழுப்புவதற்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் பாடசாலைகளில் கத்தோலிக்கம் அல்லாத சமய பாடத்தை பெறுவதிலும் (நான்கு பாடசாலைகள் தவிர - வங்காலையில் ஒரு பாடசாலை உட்பட்ட - பாடசாலைகள் கத்தோலிக்கம் அல்லாத சமய பாடத்தை ஒரு சமய பாடமாக அறிமுகம் செய்துள்ளன) அனுபவித்த பிரச்சினைகளை பற்றி பேசியது. ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்காக பங்களித்த கத்தோலிக்கர் அல்லாத பிரசங்கிகளுக்கு பாராட்டு நிகழ்வுகளை நடாத்துவதற்கு தடையாகவும் கத்தோலிக்க திருச்சபை உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். உதாரணமாக ஜீவநகரில் கத்தோலிக்க திருச்சபை மற்றும் அதன் குருமார்கள் அவ்வாறான ஒரு தனிநபரை கௌரவிக்கும் முகமாக பதாகை வைப்பதை தடுத்து நிறுத்தினார்கள் (போதகர், கத்தோலிக்கர் அல்லாத ஆண், மார்ச் 7, 2017).

கத்தோலிக்கர் அல்லாத சமூகம் உறுப்பினர்கள் நிறுவன மட்டத்தில் எதிர்கொள்ளும் மற்றொரு பிரச்சினை ரோமானிய கத்தோலிக்க பிரிவின் கீழ் கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவம் அடங்கியுள்ளதாக கருதப்படுவதாகும். எனவே அவர்கள் அரசாங்க கூட்டங்களுக்கு, நிகழ்வுகளுக்கு தாங்கள் அழைக்கப்படுவதில்லை என்று ஒரு கத்தோலிக்கர் அல்லாத போதகர் கூறினார். எனவே, கத்தோலிக்க பாதிரியார்கள், இந்து பூசகர்கள் மற்றும் முஸ்லீம் மௌலவிகள் அழைக்கப்படுகையில், கத்தோலிக்கர் அல்லாத போதகர்கள் விலக்களிக்கப்படுகின்றார்கள். அது இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிறிஸ்தவ பிரிவுகள் தொடர்பான விழிப்புணர்வு, உட்சேர்க்கைக்கான தேவையை உணர்த்துகின்றது.

அம்பாறையில் முஸ்லிம் சமூகத்தால் கொண்டுசெல்லப்படும் அரசியல் மற்றும் நிர்வாக ரீதியிலான செல்வாக்கு காரணமாக அம்பாறை தமிழ் சமுதாயம் தாங்கள் பாதிப்புக்குள்ளாவதாக தெரிவித்தனர்.

அரசியல் தொடர்புகள் மூலம் முஸ்லிம்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதால் கல்வி கற்ற தமிழர்கள் அரசாங்க தொழில்களை பெறுவது கடினமானதாக இருப்பதாக என பதிலளித்த தமிழர்கள் தெரிவித்துள்ளனர். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான வழக்கறிஞர்கள், நீதிபதிகள், மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முஸ்லீம்களாக இருப்பதால் தாங்கள் நேர்மையாக நடாத்தப்படுவதில்லை என அவர்கள் கூறினார்கள். முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள் தங்களை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்வதாகவும் அவர்கள் கூறினார்கள். மாறாக அரசாங்க வேலை வாய்ப்புகள் குறிப்பாக உயர் மட்ட நிர்வாக வேலை வாய்ப்புக்கள் தொடர்பாக அவர்கள் மீது பாகுபாடு காட்டப்படுவதாக முஸ்லிம்கள் தெரிவித்தனர். உயர்மட்ட நிர்வாக வேலைவாய்ப்புக்களை தமிழர்கள் மட்டுமே பெறுவதாக பதிலளித்த முஸ்லிம்கள் (மாகாணத்தில் சிறுபான்மையினர்) கூறினார்கள். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக அனுமதிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது எந்தவித பாகுபாடுகளை காட்டாதபோதிலும் தொழில் வழங்கப்படும்போது முஸ்லிம்கள் மீது பாகுபாடு காட்டப்படுவதாகவும் அவர்கள் கூறினார்கள். மாவட்டத்தில் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். இரு சமுதாயங்களாலும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் பகிரப்படுவதானது ஒருபுறம் இரு சமுதாயங்களுக்கிடையிலான இடையிலான உரையாடலில் பற்றாக்குறை தவறான கருத்திற்கு இட்டுச்செல்வதுடன் மறுபுறம் சமத்துவமின்மை தொடர்பான தவறான கருத்துக்கள் சமுதாயங்களை ஒருவருக்கொருவர் எதிராக நிலைநிறுத்துகின்றது.

பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் மதப் பழக்கவழக்கங்களைப் பகிர்ந்து கொண்ட போதிலும் இந்து மதம் சமூகம் தெனியாயவில் உள்ள பெரும்பான்மையான பௌத்த அரசாங்க அதிகாரிகளால் பகைமை பாராட்டப்படுவதாக பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர். இந்து ஆலயத்திற்கு அருகே ஒரு பொது விளையாட்டு மைதானமாக உள்ள நிலத்தை பயன்படுத்தி புத்தர் சிலை ஒன்றை அமைத்து அந்த வளாகத்தில் ஒரு அரச மரத்தை நாட்டியுள்ளனர். விளையாட்டு மைதானத்திற்கு அடிக்கடி வரும் சிங்கள இளைஞர்கள் கோவில் மற்றும் அதன் நடவடிக்கைகளுக்கு தடையாக செயற்படுவதாக கருதப்படுவதோடு புத்தரின் சிலை நிறுவப்படுவதன் பின்னால் உள்ள அரசாங்க அதிகாரிகளின் எதிர்கால நோக்கங்கள் தொடர்பில் சந்தேகம் எழும்பியுள்ளது. தெனியாயவில் உள்ள பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையேயான உறவு எப்போதும் வலுவிழந்திருந்ததில்லை. 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்து

*கோவில்களின் முதல் பூஜை பௌத்த விகாரையில் இடம்பெற்றதை போன்று பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் ஒற்றுமை நிலவியதாக பதிலளித்த இந்துக்கள் தெரிவித்தனர். இனமுரண்பாடு, கிராமப்புறங்களில் பொதுபல சேனாவின் இருப்பு, அரசியல், அரச நிதியை கோயிலுக்கு அல்லாது விளையாட்டு மைதானத்திற்கு ஒதுக்கிய இனவாதம் ஆகியவை காரணமாக இது போன்ற உறவுகள் மோசமடைந்து விட்டன என்று பதிலளித்தவர்கள் கூறினார்கள். (மதங்களுக்கிடையேயான செயற்குழு உறுப்பினர்கள், இந்து, கிறிஸ்தவ ஆண்கள் மற்றும் பெண்கள், மே 26, 2018).*

## 2.8. நிறுவனமயப்படுத்தப்பட இனவாதமும் சிறுபான்மையினருக்கு சொந்தமான நிறுவனங்களை கைப்பற்றுதலும்

*மாத்தறை மாவட்டத்தில் இன்னுமொரு வடிவத்தை ஆட்புல விரிவாக்கம் எடுத்துள்ளது. காலியிலுள்ள தென் மாகாண கல்வி அமைச்சு சிங்கள துணை அதிபர்களையும் ஆசிரியர்களையும் நியமிப்பதன் மூலம் தமது பாரம்பரிய முஸ்லிம் பாடசாலையை சிங்கள பாடசாலையாக மாற்றியமைக்க முயற்சிக்கின்றது என அங்கு பதிலளித்த முஸ்லிம் பெண்கள் தெரிவித்தனர். பாடசாலையில் பௌத்த வழிபாட்டை தொடங்குவதற்கான ஒரு சதியாக அதை அவர்கள் உணர்ந்தனர். முஸ்லிம்கள் வீட்டில் தமிழ் பேசும் போதும் தமிழ் சமுதாயத்திலிருந்து ஒரு தமிழ் மொழி ஆசிரியரை பாடசாலைக்கு கல்வி அமைச்சு நியமிக்கவில்லை. முஸ்லிம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதுடன் அது தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் உள்ளன. அரச அமைச்சினால் ஒரு பாரம்பரிய முஸ்லிம் நிறுவனத்தை மாற்றியமைக்கும் இந்த படிப்படியான செயற்பாடு இன-மத பிரதிநிதித்துவத்தின் ஏற்றத்தாழ்வையும் அரச அமைச்சில் உள்ள நிறுவனமயப்படுத்தப்பட்ட இனவாதத்தையும் நிரூபித்துள்ளது. இது இன-மத சிறுபான்மையினரால் கட்டியெழுப்பப்பட்ட வளர்த்--தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் அழிக்கப்படுகின்ற, புறக்கணிக்கப்படுகின்ற நிலைக்கு வழிவகுக்கின்றது.*

*அவ்வாறான இனவாதம் கல்வி ஒழுங்கமைப்பிற்குள்ளும் விரிவடைந்துள்ளது. சிலர் தங்கள் ஆடைகளால் (ஹிஜாப்) வெறுக்கிறார்கள் "ஏன் சேலை அணியக்கூடாது?" என்று கேட்டுக் கொண்டார்கள். மாத்தறையிலுள்ள சிங்கள பாடசாலைகளில் விளையாட்டு செயற்பாடுகளின் போது கூட முஸ்லிம் மாணவர்களுக்கு முஸ்லிம் உடையணிவதற்கு (தலை தாவணி) அனுமதி வழங்கப்படுவதில்லை. முஸ்லிம் பெண் பிள்ளைகள் மூடப்பட்ட ஆடைகளை அணியமுடியாது என்று பதிலளித்த முஸ்லிம் பெண்கள் முறையிட்டனர் (பெண்கள் குழு உறுப்பினர், முஸ்லிம் பெண், ஜூன் 18, 2017). இனவாதம் சார்ந்த கல்வி ஒழுங்கமைப்பு தமிழர்கள் சிங்களவர்களுக்கிடையேயான*

பிரிவினைக்கு பங்களிப்பதோடு இனவாதம் மிகவும் இளம் வயதிலேயே பதிக்கப்படுவதற்கு வழிவகுப்பதாக தெனியாயவில் பதிலளித்தவர்கள் தெரிவித்தனர். ஆசிரியர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படும் இனவெறியும் ஒரு பங்களிக்கும் காரணியாக காணப்பட்டது.

மாறாக அமைச்சர்களான தமிழர்களும் முஸ்லிம்ளும் தமது சொந்த சமூகங்களை சேர்ந்தவர்களை பரீட்சையில் தேர்ச்சி பெறவைக்கிறார்கள் என தாங்கள் உணர்வதாக வெலிகமவில் பதிலளித்த பௌத்தர்கள் தெரிவித்தனர். அதன் விளைவாக அவர்களில் பலர் உயர் அரசாங்க பதவிகளில் இருப்பதாகவும் கூறினார்கள்.

### 2.9. பொருளாதாரம் மற்றும் வியாபார போட்டி

பொருளாதாரம் நான்கு மாவட்டங்களில் இன-மத உறவுகளை பாதிக்கும் குறுக்குவெட்டு காரணியாகவுள்ளது. ஆனால் அம்பாறையிலும் மாத்தறையிலும் மேலதிகமாக கூறப்பட்டது. அம்பாறையில் வறுமை என்பது குறிப்பிடத்தக்க காரணியாக இருந்ததுடன் அது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான உறவுகளை பாதிக்கும் காரணி என்று கூறப்பட்டது. தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட நேர்காணல்களில் இருந்து வறுமை பற்றிய இரண்டு ஒத்த, முரண்பாடான விபரங்கள் வெளிப்பட்டன. அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் ஒப்பீட்டளவில் ஏழைகளாக உள்ளதுடன் அவர்கள் முஸ்லிம் வீடுகளில், வியாபார நிலையங்களில் வேலை செய்கின்றனர் என பதிலளித்த தமிழர்கள் தெரிவித்தனர். இது தமிழ் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதற்கும் முஸ்லிம்களின் தவறான மொழி பாவனை மூலம் இந்து இளைஞர்கள் சீர்கெட்டுப்போவதற்கும் வழிவகுப்பதாக அவர்கள் கூறினார்கள். யுத்தம் தமிழர்களை பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலவீனமாக்கியுள்ளதால் முஸ்லிம்கள் இந்த மாவட்டத்தில் அதிக பலம் வாய்ந்தவர்களாக உள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பிறகு தமிழர்கள் பணக்காரர்களாகிவிட்டனர் என்றும் புலம்பெயர்ந்தோருடைய நிதியளிப்பின் மூலம் அவர்கள் முஸ்லிம்களுக்கு பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள் என்றும் பதிலளித்த முஸ்லிம்கள் தெரிவித்தனர். தமிழர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் சமூக மட்டத்தின் நிலைப்பாடாகவும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் சமூகம் தொடர்பாக முஸ்லிம்களின் கருத்துக்கள் பொதுவாக கவனிப்பு எனவும் தோன்றுகிறது. இந்த உள்ளுணர்வுகள் சமூகங்களுக்கு இடையில் எந்தவொரு பெரிய முரண்பாடுகளையும் ஏற்படுத்தவில்லை. இருப்பினும் நிலம் தொடர்பான சிறிய இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

எனினும் முஸ்லிம்-சிங்கள உறவுகள் மாத்தறை மாவட்டத்தில் பொருளாதாரப் பரிசீலனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மாத்தறை நகரில் இன-மத

பிரச்சினைகள் இல்லை என பதிலளித்த முஸ்லிம் பெண்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் முஸ்லிம் எதிர்ப்புணர்வுகளின் பரவுகை முதன்மையாக வணிக போட்டிடன் தொடர்புடையது. இந்தப் போட்டிகள் பொறாமை அடிப்படையிலானது. அதேசமயம் பஷன் பக் போன்ற முஸ்லிம் கடைகளை பௌத்தர்கள் ஆதரிப்பதில்லை. இதன் விளைவாக முஸ்லிம்கள் இழப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அதற்கு பிரதிபலனாக அவர்கள் சிங்கள கடைகளை ஆதரிக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். மேலும் முஸ்லிம் வியாபாரங்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாகவும் குறிப்பிட்டார்கள். முஸ்லிம்களுடைய நோன்பு காலத்தில் முஸ்லிம் கடையொன்று எரிக்கப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அப் பெண்கள் குறிப்பிட்டனர். இது நோன்பு காலத்தை சீர்குலைக்கும் ஒரு திட்டமிட்ட செயல் என்று அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிரான இத்தகைய விரோதமானது "சந்தையில்" முஸ்லிம்களின் பிராந்திய விரிவாக்கம் தொடர்பான சிங்கள சமூகம் மத்தியிலுள்ள அச்சத்துடன் தொடர்புபட்டது. அதிக முஸ்லிம்கள் உள்ள வெலிகமவில் முஸ்லிம்கள் மூலோபாய ரீதியாக சிங்கள மக்களை பொதுச் சந்தையிலிருந்து துரத்துவதுடன் அவர்களின் இறைச்சிக் கூடங்களை விரிவுபடுத்தியுள்ளனர் என பதிலளித்த பௌத்தர்கள் கூறினார்கள். நகர சபையின் தலைவர் ஒரு முஸ்லிமாக இருப்பதனால் முஸ்லீம்களுக்கு ஆதரவாக நகர சபை நிர்வாகம் செயற்படுவதாகவும் சிங்களர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாகவும் அவர்கள் நம்பினார்கள். நகரத்தில் சில சிங்கள கடைகள் மட்டுமே எஞ்சியுள்ளமை பற்றிய அவர்களது கரிசனையை வெளிப்படுத்தினர். மேலும் "இந்த நாட்டை கைப்பற்ற" அத்தகைய முயற்சிகளுக்கு பின்னால் ஒரு கண்ணுக்குத் தெரியாத சக்தி இருப்பதைப் பற்றியும் அவர்கள் கவலை தெரிவித்தனர். இரண்டு வருடங்களில் சிங்கள கடைகள் எதுவும் நகரத்தில் இருக்காது என அவர்கள் எதிர்வு கூறினார்கள். மேலும் வெலிகம முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதால் சிங்களவர்கள் வெலிகமவில் பலவீனமாகி வருகின்றனர் என அவர்கள் கணித்துள்ளனர்.

"இந்நிலத்தை கைப்பற்றுவதற்கான" (வெலிகம/இலங்கை) முஸ்லிம் சமூகத்தின் மூலோபாயம் நிலம், மக்கள் தொகை, பொருளாதாரம் ஆகிய மூன்று வழிகளில் இருப்பதாக அவர்கள் கூறினார்கள். இருப்பினும் சிங்களவர்கள் தங்கள் சொந்த சோம்பேறித்தனத்தின் காரணமாக சிறப்பாக செயல்படவில்லை என்றும் முஸ்லிம் வர்த்தகங்களை தாக்க அது ஒரு காரணமாக இருக்கக்கூடாது எனவும் சுயவிமர்சனமான கருத்துக்களையும் அவர்கள் கூறினார்கள் (மதங்களுக்கிடையேயான குழுவின் உறுப்பினர்கள், பௌத்த ஆண்களும் பெண்களும், ஜூன் 21, 2017).

முஸ்லீம் "ஜமாத்" (பிரசங்கம்) நடவடிக்கைகள், ஒரு பள்ளிவாசலின் சட்ட ரீதியான விரிவாக்கம், முஸ்லிம்களின் வணிகங்கள் தொடக்கங்கள் ஆகியவை பௌத்த

*தனிநபர்களாலும் பிக்குமார்களாலும் மட்டுமில்லாது பெரிய பௌத்த சமுதாயத்தினாலும் தடுக்கப்படுவது நிலம், சனத்தொகை, பொருளாதாரம் ஆகியவற்றை கைப்பற்றுவதற்காக முஸ்லிம்களிடம் மூலோபாயம் இருக்கிறது என்ற எண்ணத்தினால் உருவாகும் மேலே கூறப்பட்ட பயத்துடன் தொடர்புபட்டது. 2018ல் பொதுபல சேனாவினாலும் அவர்களது ஆதரவாளர்களாலும் முஸ்லிம் வணிகம் வற்புறுத்தி மூடப்பட்டதோடு ஒரு பௌத்த தொழிலதிபரை பதிலாக கொண்டுவந்தமையும் ஒரு எடுத்துக்காட்டு. முஸ்லிம் தனிநபர்கள் மீதான அச்சுறுத்தல்கள் கடிதங்கள் மூலம் தனிப்பட்ட தகவல்தொடர்பு வடிவங்கள் உட்பட இன்னும் நுட்பமான வழிமுறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.*

## *3. மதங்களுக்கிடையிலான மோதல்: மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வு*

### *3.1. மன்னார்*

*மதங்களுக்கிடையிலான மோதலானது கத்தோலிக்கர்களிடையே காணப்பட்ட அதிகார உறவுகள், அதிகார வாக்குவாதங்கள், பெரும்பான்மைத்துவ மனப்பாங்கு, முஸ்லிம்களிடையே காணப்பட்ட உரிமைத்துவம் தொடர்பான உணர்வு, கிறிஸ்தவர்கள் (வெளிப்படையாகவும் சின்னங்கள், அடையாளங்கள் மூலமாகவும்) தங்களது மத அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு எதிராக சிறுபான்மை சமூகமான இந்துக்களின் துலங்கல் அல்லது எதிர்ச்செயற்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. மேலும் சமனற்ற வளப்பங்கீடும் நுகர்வும் இனத்துவ மத அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டமை, அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நீதி என்பனவும் மதச்சமூகங்கள் ஒன்றின் மீது ஒன்று பழி சுமத்திக் கொள்ளவும் காரணங்களாக அமைந்தன. மன்னார் மாவட்டத்தில் அவ்வகையான வேற்றுமைகள் அவர்களுக்கே உரித்தான அடையாளத்துடன் வெளிப்படுத்தப்பட்டு வந்தாலும் போருக்குப் பிந்திய தேசியவாத நிகழ்ச்சிநிரலில், பௌத்த விகாரைகள் பரந்தளவில் புனந்துரைக்கப்பட்டு வந்ததோடு அங்கு நிதானத்துடன் பௌத்தமயமாக்கம் உருவாக்கப்பட்டு, இனத்துவ மதரீதியாக கத்தோலிக்கமும் இந்துவும் ஏனையவை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இருந்தபோதிலும், பௌத்தமயமாக்கமானது இன்னொரு வகையில் போரின் இயற்கை விளைவாகவும் கருதப்பட முடியும். அதாவது, பௌத்த இராணுவ வீரர்கள் மத ரீதியாக தமது மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வழிபடவும் தாம் முகாமிட்டிருந்த முகாம்களுக்கு அருகாமையில் புனித ஸ்தானங்களைக் அமைத்துக்கொண்டனர்.*

*இடம் சார்ந்த மற்றும் உறவு சார்ந்த காரணிகளுக்கு மேலதிகமாக, குறிப்பாக தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கடையில் அதேபோன்று தமிழ் - பௌத்த சமூகங்களுக்கடையில் மதங்களுக்கிடையிலான நெருக்கடி நிலை உக்கிரமடைந்ததற்கு அரசியல் பங்குதாரர்கள், மற்றும் மதத் தலைவர்களின் வகிபாகத்தையும் பிரதானமாக நோக்க வேண்டும். பதிலளித்த அனைத்து மக்களும் அவர்களது மத ரீதியான ஒத்த தன்மைக் கொண்ட அம்சங்கள் ஒரே இடத்தில் காணப்பட்டமை விதிவிலக்காக அன்றி வழமையானதாகக் காணப்பட்டதாகவும் சாதாரண பிரஜைகளுக்கிடையில் பகைமை உணர்வுகள் காணப்படவில்லை எனவும் குறிப்பிட்டனர். கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் பெறுவதற்காக மதச் சமூகங்களை தூண்டிவிட்டமையே மதச் சமூகங்களுக்கிடையில் மோதல் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக அடையாளப்படுத்தப்பட்டது. மேலும், கத்தோலிக்க இந்து மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்கள் தங்களது மதச் சமூகங்களின் மீது அதிகளவான ஆதிக்கம்*

*கொண்டிருந்தனர். குறிப்பாக யாருக்கு எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதை எடுத்துரைத்ததோடு, சட்டங்களை மீறுவதற்கும் வன்முறைக் கிளர்ச்சியை செய்வதற்கும் தூண்டப்பட்டனர். உள்ளூர் மக்களிடையே மோதல்கள் எழுச்சி பெறுவதற்கு வைராக்கியத்துடன் செயற்பட்ட இளம் மதத் தலைவர்களும் அவர்களது மத போதனைகளும் காரணங்களாக அமைந்தன. வடக்கில் தமிழ் - இந்து தேசியவாதத்தை உருவாக்கும் நோக்கில் மன்னார் மாவட்டத்தில் வைப்பதற்காக இந்தியா கடவுள் கணேசனின் சிலையை வழங்கியமைக்கு இந்திய (மோடியின்) அரசாங்கத்தை பதிலளித்த ஒருவர் தனது வார்த்தையில் குறைகூறியமை குறிப்பிடத்தக்கது.*

### *3.2. யாழ்ப்பாணம்*

*வடக்கில் போர் மற்றும் போருக்குப் பிந்திய இராணுவமயமாக்கல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மத வேற்றுமையை விடவும் இனத்துவ வேற்றுமையே இன - மத உறவுகளில் மோதல் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. பௌத்த கொடிகளை ஏற்றுதல் , வடக்கில் இராணுவக் குடும்பங்களை குடியமர்த்துதல், பௌத்த விகாரைகளைக் கட்டுவதற்காக தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்தல் என்றவாறாக சிங்கள பௌத்த தேசியவாதம் அடையாளப் பூர்வமாக பிரயோகிக்கப்பட்டமையானது அரசியல் ரீதியாக குறைந்த அதிகாரம் கொண்ட தமிழ் சமூகத்தை, எதிர்க்கும் மனநிலைக்கு உள்ளாக்கியது. 1990 களில் வடக்கிலிருந்து முஸ்லிம் சமூகம் வெளியேற்றப்பட்டமையோடு ஏற்பட்ட காணிப் பிரச்சினையோடு, தமிழ் - முஸ்லிம் உறவுகள் வரையறுக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் தேசிய சமாதானப் பேரவை (NPC) விவகாரத்தில் வடக்கிற்கு வெளியே இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் குற்றம் சாட்டி தலையிட ஆரம்பித்தனர். இந்துக்கள் மத்தியிலும் சிலவேளை கத்தோலிக்கர் மத்தியிலும் சாதி எனும் சமூக - கலாசாரக் கோணத்தில் மத அனுஷ்டான வழிமுறைகளில் காணப்பட்ட வேற்றுமைகளே தனிநபர் மட்டத்தில் விவாதங்கள், பகைமை மற்றும் கசப்புணர்வுகள் ஏற்பட்டு மத நெருக்கடி ஏற்படுவதை சாத்தியமாக்கியது. இந்துக்கள் கிறிஸ்தவ தேவாலயங்களை நோக்கி மத மாற்றமடைந்தமையானது பிரச்சினையாகக் கருதப்பட்டாலும் இந்துச் சமூகம் அதனைச் சகித்துக் கொண்டது.*

*இவ்வாறு, யாழ்ப்பாணத்தில் இன - மத உறவானது அரசியல் உறவுகள் மற்றும் ஆழமாகக் பதிக்கப்பட்ட உறவுகள் மூலமாக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு அவை ஆதிக்க படிநிலை உறவுகளை உருவாக்குவதோடு நிலைத்து நிற்கவும் செய்துள்ளது.*

### *3.3. அம்பாறை*

*அரசியல்வாதிகள் சட்டத்தை நடைமுறைபடுத்துவதிலுள்ள குறைபாடு மற்றும் சர்வதேச சதிச்செயல் போன்றவையே அம்பாறை மாவட்டத்தில் மதங்களுக்கிடையிலான மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் என பதிலளிப்பவர்களின் கருத்தாகக் காணப்பட்டது. இது பொதுபல சேனா, நோர்வே மற்றும் இஸ்ரேலோடு தொடர்புகளை வைத்து, முஸ்லிம்களுக்கு எதிராக சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வேலை செய்தமையாக நம்பப்படுகிறது. மேலும், மதங்களுக்கிடையிலான பிரச்சினைகளில் தங்களுடைய உரிமை தொடர்பாக கருத்து தெரிவிக்க முற்பட்ட போது, பொதுபல சேனா வன்முறையை உருவாக்குவதன் மூலமாக அந்த உரிமைக்கான கவனத்தை திசை திருப்ப முயற்சி செய்தது.*

*முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் பல உள்நாட்டு இனத்துவ சமூகங்கள் அரசாங்கத்துக்குள்ளேயும் வெளியேயும் காணப்படுவதாக பதிலளிப்பவர்கள் தெரிவித்தனர். முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதும் அவர்களது காணிகளை பறிப்பதும் தவறானது என தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனவிலங்குத் திணைக்களம் குற்றம் சாட்டியது.*

*இனத்துவ அரசியல் கட்சிகளும் மத நெருக்கடிகள் ஏற்படுவதற்கு ஒரு காரணியாகும். அதாவது, அவை பல்வேறுபட்ட மதம் மற்றும் இனக் குழுக்களின் குரலாக காணப்பட்டதாகவும் அக்கட்சிகளுக்கிடையிலான உறவுகளில் சந்தேகம் காணப்பட்டதாகவும் பதிலளிப்பவர்கள் குறிப்பிட்டனர். மதங்களுக்கிடையிலான நெருக்கடிகளைத் தூண்டிவிடுவது வேறுபட்ட அரசியல் கட்சிகளின் சதி எனவும் இவர்கள் நம்பினர். முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகளை உருவாக்குவதில் குறிப்பாக மணிக்கமடு புத்தர் சிலையுடன் தொடர்பான அரசியல்வாதிகளுக்கு பெரும் பங்கு காணப்படுகிறது.*

*முஸ்லிம்களுக்கிடையிலான ஜிஹாத் குழுக்கள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்ட போலியான வதந்திகளும் செய்திகளும் மதங்களுக்கிடையிலான மோதலுக்கு காரணமாகும். அவை, செய்திகள் மற்றும் ஊடகங்கள் மூலமாக வடிவமைக்கப்பட்ட ஒன்றென சில பௌத்த மதத்தைதச் சார்ந்த பதிலளிப்பவர்கள் கருத்து தெரிவித்தனர். சம காலத்தில் உள்வாங்கப்பட்ட சட்டங்கள் நடைமுறைபடுத்தப்படாமை, நம்பிக்கையின்மை போன்றன காணிப் பிரச்சினைகளுக்குத் தடையாகக் காணப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.*

*சாதாரண பொதுமக்களுக்கு எந்தவொரு இன - மதக் குழு தொடர்பாகவும் முன்னுரிமை காணப்படவில்லை என்றும் முஸ்லிம்களை விட தமிழர்கள் சிறந்தவர்கள் என்ற கருத்து நிலவுவதாதகவும் பௌத்த மதத்தவர்கள் குறிப்பிட்டனர். முஸ்லிம்கள் "வஞ்சகர்கள்" என சாதாரண பொது மக்கள் நம்புவதாக குறிப்பிட்டதோடு, வியாபாரத்தின் வெற்றியில்*

*இதனை அவர்கள் தொடர்புபடுத்துதில்லை எனவும் வாதிட்டனர். இதனால் முஸ்லிம்கள் பெய்யான நம்பிக்கையில் வியாபாரத்தில் சிறந்து விளங்குகிறார்கள் என குறிப்பிட்டனர் (கிராம அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், பௌத்த ஆண் - பெண், மே 25, 2017).*

*அம்பாறை மாவட்டத்தில் மதங்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் மோதல்களுக்கு பிரதான காரணியாகக் குறிப்பிடப்பட்டு வந்த குறித்த பிரதேசத்தில் பொருளாதாரம் மற்றும் நிர்வாக செயற்பாடுகளின் மீதான முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் மூலம் சிங்கள பௌத்த அரசுக்கு பாதுகாப்பின்மை என்பதும் ஒதுக்கி வைக்கப்பட்ட அவர்களின் நிலங்கள் மூலாக முஸ்லிம்களின் அதிகாரங்கள் இடம்பெயர்க்க முயற்சிக்கப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டு வந்த கருத்துக்களும் மேற்கூறப்பட்டவைகளின் மூலமாக பொய்ப்பிக்கப்படுகிறது. மறுபுறத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக சிறப்பான நிலையில் உள்ளவர்கள், கலாசார ரீதியாக வேறுபட்டவர்கள், தமிழர்களின் கலாசாரப் பெறுமானங்களை கெடுப்பவர்கள் என முஸ்லிம்களுக்கு எதிராக தப்பபிப்பிராயம் கொண்டிருந்தனர். இந்த மாவட்டத்தில் பிரதான மூன்று இனத்துவ குழுக்களுக்கிடையிலும் காணி, அதிகாரம் திரட்டுதல் மற்றும் ஆதிக்கம் செலுத்துதல் என்பவையே வாக்குவாதத்துக்குரிய பகிரப்பட்ட மூலங்களாகக் காணப்படுகின்றன.*

### *3.4. மாத்தறை*

*மாத்தறை மாவட்டத்தில் மதங்களுக்கடையிலான மோதல் ஏற்படுவதற்குக் காரணம் பெரும்பான்மை சிங்கள பௌத்த சமூகம் அவர்களது இனத்துவ மத அடையாளத்தை இழந்து வருவதாக அவர்களுக்குக் காணப்பட்ட அச்சமே என அடிக்கோடிட்டுக் காட்டப்படுகிறது. இவ்வச்சமானது அரசியல்வாதிகள் மற்றும் அடிப்படைவாதக் கூறுகளால் முன்வைக்கப்பட்டு வன்முறை மற்றும் இனவாதச் செயல்களுக்கு சாதாரண பிரஜைகள் தூண்டப்பட்டனர்.*

*சிங்கள சமூகத்தினருக்கு ஏனைய மதங்கள் தொடர்பாகக் காணப்பட்ட போதிய அறிவின்மையே இத்தகைய சாதாரண பொது மக்களை எளிதில் இனவாத செயல்களுக்கு தூண்டுவதற்கு பிரதான காரணமாகும். முஸ்லிம் தரப்பினரும், அவர்களது சமூகமும் ஏனைய சமூகங்கள் தொடர்பாக பெரிதளவில் அறிந்து வைக்கவில்லை என்பதுடன் உடன்படுகின்றனர். மாத்தறை நகரப் புறத்தில் சமூகங்கள் கலந்து காணப்படுவதனால் ஏனைய சமூகங்கள் பற்றி முஸ்லிம்கள் அறிந்து வைத்துள்ளமையினால் ஏனைய கலாசார மக்களுடன் இடைவினைகளை மேற்கொள்கின்றனர் என முஸ்லிம் பெண் ஒருவர் தெரிவித்தார். எவ்வாறிருப்பினும், வெலிகமை மற்றும் திக்வெல்லை போன்ற ஓரினத்துவ முஸ்லிம் கிராமங்களில் வாழும் முஸ்லிம்கள் ஏனைய சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சில வேளைகளில் சிங்களவர்களின் புரிதல் அற்ற*

செயற்பாடுகள் காரணமாக அவர்கள் மீது வருத்தத்தைத் தரக்கூடிய உணர்வு ஏற்படுவதாகவும் குறிப்பிட்டனர் (பெண்கள் குழுவில் ஓர் உறுப்பினர், முஸ்லிம் பெண், ஜுன் 18, 2017).

ஓர் இனத்துவத்தைக் கொண்ட இது போன்ற கிராமங்களில் மோதலுக்கு மொழியும் ஒரு காரணமாகும். அவ்வாறான கிராமங்களில் முஸ்லிம்களுக்கு சிங்களத்தை முறையாக பேச தெரியாமையானது சாதாரண மக்களுக்கிடையில் தவறான தகவல் பரிமாற்றம், தவறான புரிந்துணர்வு ஏற்படுவதற்கு காரணம் என தரவு பதிலளிப்பவர்கள் குறிப்பிட்டனர். ஆகவே, மதங்களுக்கிடையிலான மோதலின் இருப்புக்கு மொழிப் பிரச்சசினை, ஏனைய மதம் மற்றும் அவர்களின் வழிபாடுகள் தொடர்பாக போதிய அறிவின்மை மற்றும் குறிப்பாக பின்தங்கிய கிராமப் புறங்களில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான போதிய இடைவினை காணப்படாமை என்பவையே பிரதான சவால்களாகும்.

முஸ்லிம்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். குழுவுக்கு ஆதரவளிப்பவர்கள் என்ற நம்பிக்கை தவறான புரிந்துணர்வுக்கும் தவறான கண்ணோட்டத்துக்கும் ஒரு உதாரணமாகும். இது முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு நியாயமான காரணமாக பயன்படுத்தப்பட்டது. முஸ்லிம்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். குழுவுக்கு எதிரானவர்கள் என பெண் ஒருவர் உறுதியாகக் குறிப்பிட்டார். சமூக மற்றம் அரச ஊடகங்களில் முஸ்லிம்கள் உள்நாட்டு சமூகத்துக்கு அளிக்கும் பங்களிப்புகள் மற்றும் உறவுகள் தொடர்பாக உறுதிசெய்யப்படாத வகையில் கலந்துரையாடப்பட்டது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது முஸ்லிம்கள் அதிகளவான வெள்ள நிவாரணங்களை வழங்கியமையினால் இனத்துவ - மதப் பிரச்சினைகள் குறைந்ததாக மக்கள் தெரிவித்த கருத்தை உதாரணமாகக் கூறலாம். முஸ்லிம்கள் கருணையுள்ளவர்கள், ஏழை மக்களுக்கு உதவுபவர்கள், வெள்ளப்பெருக்கின் போது உதவியாக செயற்பட்டார்கள் என மாத்தறை மாவட்ட நகர்ப்புற ஒருவர் குறிப்பிட்டார் (குழுக் கலந்துரையாடல், பௌத்த ஆண், பெண், ஜுன் 17, 2017).

வெலிகமையில் முஸ்லிம் நபரொருவர் மக்களுக்கு வரலாறு தெரியாததனாலேயே மோதல் ஏற்படுவதாகக் குறிப்பிடுகிறார். வெலிகமை ஆரம்பத்தில் தமிழ் கிராமம் என்றும் பின்னர் அது முஸ்லிம் கிராமமாக் மாறியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அந்தவகையில், பழைய வரலாறு தெரியாத புதிய மக்களை அடிப்படைவாதக் குழுக்கள் மூளைச்சலவைச் செய்து இது ஆரம்பத்தில் சிங்கள கிராமம் என நம்பவைத்தனர் (மத நிறுவனங்களின் உறுப்பினர்கள், முஸ்லிம் ஆண் - பெண், ஜுன் 18, 2017). சிலவேளை சிங்கள மதச் சமூகமே சிங்கள தனிநபர்களை பொதுபல சேனா போன்ற அடிப்படைவாதக் குழுக்களில் இணைவதற்கு தூண்டுவதாகவும் இருக்கலாம் என முஸ்லிம் நபர் ஒருவர் குறிப்பிட்டார். சில முஸ்லிம் விவசாயிகள் அவர்களது அயல் சிங்கள விவசாயிகளின்

*பசுக்களைத் திருடுகின்றனர். முஸ்லிம் இளைஞர்கள் பாதையில் கிறிக்கட் விளையாடி வாகன போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துகின்றனர். அதற்கு பழிவாங்கும் நோக்கில் சிங்களவர்கள், முஸ்லிம் இளைஞர்கள் தொழுகையில் ஈடுபடும் போது அவர்களின் தொப்பிகளைப் பறிக்கின்றனர். ஆனால் இக்கருத்தைச் சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை. சில முஸ்லிம் இளைஞர் குழுக்கள் இவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்துவதை நினைத்து அவர்கள் கவலை அடைவதாகக் குறிப்பிட்டனர்.*

*முஸ்லிம்கள் போயா தினங்களில் கிறிக்கட் போட்டிகளை ஒழுங்கமைப்பதாக வெலிகமையிலுள்ள பௌத்த தரப்பினர் தங்கள் சார்பு கருத்தாக வெளிப்படுத்தினர். அவர்கள் நாள் முழுதும் பயன்படுத்தும் ஒலிபெருக்கிகள் பௌத்தர்கள் மத அனுஷ்டானங்களில் ஈடுபடும் அமைதியான சூழ்நிலைக்கு இடையூறு ஏற்படுத்துவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். இவ்வாறான சூழ்நிலையில் ஒரு பௌத்த நாட்டில் பௌத்தர்கள் தங்களது மதத்தை பின்பற்றுவதற்கான உரிமையை இழக்கின்றனர் என்றும் அவர்கள் உதவியற்றவர்களாக உணர்வதாகவும் குறிப்பிட்டனர் (குழுக் கலந்துரையாடல், பௌத்த ஆண் - பெண், ஜுன் 17, 2017).*

மறுபுறத்தில், சிங்களவர்களிடையே காணப்பட்ட பெரும்பான்மைத்துவ மனப்பாங்கும் விழிப்பணர்வும் இனத்துவங்களுக்கிடையிலான பிரச்சினைகளை மேலும் மோசமாக்குவதில் ஒரு காரணியாக காணப்பட்டது என்பதனை சிங்கள தரப்பு பதிலளிப்பவர்கள் சிலர் ஒப்புக் கொண்டனர். சிங்களவர்கள் தங்களது ஆதிக்கம் இன்னொரு சமூகத்தவரால் சவாலுக்குட்படுத்தப்படுவதை விரும்பவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்தனர். கடந்த காலங்களில் பல மோதல்கள் மற்றும் சண்டை உருப்பெற்ற ஓர் இடமாக வெலிகமையை அம்மக்கள் எடுத்துக் காட்டினர். தனிப்பட்ட ரீதியாக வாக்குவாதங்கள் ஏற்படும் போது சிங்களவர்களிடையே காணப்பட்ட சிங்களவர்கள் பெரும்பான்மையினர் என்ற நிலையே இவ்வாறான மத - இனங்களுக்கிடையிலான மோதல்கள் ஏற்படுவதற்கு அடிப்படையாகும்.

அரசாங்கக் கட்டமைப்புக்களில் சிங்களப் பெரும்பான்மை பரவிக் காணப்படுவதாலும் குற்றம் புரிபவர்கள் சிங்கள பௌத்தர்களாக காணப்படுவதனாலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுகின்ற பொலிஸார் மற்றும் கிராம சேவகர் போன்றோர் இத்தகைய மோதல்கள் ஏற்படும் போது தலையிட்டு, தீர்த்து வைப்பதில் தோல்வி கண்டுள்ளனர். அச்சுறுத்தல், பாரபட்சம், தங்களுக்கெதிரான வன்முறைகள் காரணமாக முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ சிறுபான்மையினர் உதவி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசியல்வாதிகள் மூலமாக முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புக்கள் பரப்பப்படுவதன் மூலம் மதங்களுக்கிடையிலான நெருக்கடி மேலும் மேலெழத் தொடங்கியது. முஸ்லிம் அமைச்சர்கள் தங்கள் பாராளுமன்ற ஆசனத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக இது தொடர்பாக எந்த நடவடிக்கையையும்

*மேற்கொள்ளவில்லை என முஸ்லிம் தரப்பினர் தெரிவித்தனர் (குழுக் கலந்தரையாடல், முஸ்லிம் ஆண் - பெண், ஜுன் 18, 2017). அரசியல்வாதிகள் தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரலுக்காக வேண்டி மதங்களுக்கிடையிலான மோதல்களை தூண்டிவிட்டதாக வெலிகமைப் பிரதேச பௌத்த தரப்பு நபரொரவர் தெரிவித்தார். இன - மதங்களுக்கிடயிலான மோதல் மற்றும் வன்முறை மூலம் பாதிக்கப்பட்டவர்கள் நீதியை நாடிய போது அரசியல் ஆதிக்கம் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்புக்களில் காணப்பட்ட சிங்களப் பெரும்பான்மை மூலம் பாதிக்கப்பட்டனர்.*

## *4. மதங்களுக்கிடையிலான மோதலில் கவனிக்கப்பட வேண்டிய மோதல் தீர்வு உத்திகள் மற்றும் மதங்களுக்கிடை யிலான குழுக்களின் வகிபாகம்*

*பொலிஸ் போன்ற அதிகாரம் வாய்ந்த தரப்புகள் சட்டத்தை அமுல்படுத்தும் முறையும் மதங்களுக்கிடையிலான மோதல்கள் தோன்றுவதற்கும், வாக்குவாதங்கள் ஏற்படுவதற்கும் காரணமாக அமையலாம். பல குழுக்களை உள்ளடக்கிய சமூகங்களில் அரச நிறுவனங்களும் அவற்றின் நடைமுறைத் தன்மைகளும் பெரும்பான்மைத்துவ இன மதக்குழுக்களால் வடிவமைக்கப்படும் போது அங்கு பாரபட்சம் மற்றும் அரச சட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறைகளின் நடுநிலைத் தன்மையில் நம்பிக்கையின்மையும் ஏற்படுகிறது. இத்தகைய நம்பிக்கையின்மையானது மன்னார் மற்றும் அம்பாறை மாவட்டங்களலுள்ள முஸ்லிம் சமூகங்களில் காணப்படுகின்றன. மன்னாரில் கத்தோலிக்க பெரும்பான்மை சமூகமும் அம்பாறையில் பௌத்த அரச பிரதிநிதிகளும் மோதலுக்கான சட்டபூர்வமான ஆதாரங்களை நாடிச் செல்லும் செயற்பாட்டினால் இத்தகைய நம்பிக்கையில்லாத் தன்மைகள் உருவாகியுள்ளளன. அதேபோன்று பௌத்த அடிப்படைவாத அம்சங்களைக் கொண்ட பொலிஸ் தரப்பின் மூலமாக தெனியாயவிலுள்ள இந்துக்களும் முஸ்லிம்களும் இது போன்ற பாரபட்சங்களை அனுபவிக்கின்றனர்.*

*மதங்களுக்கிடையிலான மோதல் தணிப்பு அல்லது அதன் மத்தியஸ்த செயன்முறைகளை மதத் தலைவர்கள் தனிப்பட்ட மட்டத்தில் தனிப்பட்ட திறனுடன் தலையிடுவதன் மூலம் சாத்தியமாகியுள்ளன. வித்தியாசமான மதங்களுக்கிடையில் நல்ல உறவுகளைப் பேணுவதை நோக்காகக் கொண்ட மதங்களுக்கிடையிலான குழுக்ககள் (முறைசார்ந்த/ முறைசாராத) இந்நான்கு மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. மன்னார் மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள மதச்சபைகள் பிரதிநிதிகளின் பொதுவான கருத்து யாதெனில், மதங்களுக்கிடையிலான மோதலின் போது வன்முறையுடன் கூடிய நிகழ்வுகள், வாக்குவாதங்கள் ஏற்படும் போது உடனடியாக அதில் தலையிட்டு தீர்த்து வைப்பதற்கு போதிய திறன் கொண்டதாகக் காணப்படவில்லை என்பதாகும். மதங்களுக்கிடையிலான மோதல் ஏற்படும் போது அரசியல் நோக்கங்களைக் கொண்ட தேசியவாதம், பிராந்திய தேசியவாதம் போன்றன வடிவம் பெறுவதிலிருந்து தவிர்க்க அம்பாறை மற்றும் மாத்தறையிலுள்ள இத்தகைய சபைகள் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளன.*

### *4.1. மன்னார்*

*மன்னார் மாவட்ட மதங்களுக்கிடையிலான சபையானது மோதலைத் தணிக்கும் ஒரு முறைசாராத அமைப்பாக தன்னைக் கருத்திற் கொண்டு, அதனுள் மதத் தலைவர்களை*

உள்வாங்கி அவர்களுடன் இணைந்து மதங்களுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சிகளை மேற்கொள்கிறது. இச்சபை இருபது வருடங்களுக்கு முன்னர் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் ஒரு மௌலவியும் இணைந்து உருவாக்கப்பட்டது. போர்க் காலப்பகுதியில் இக்குழு இயங்காமல் இருந்த பொழுதிலும், தற்பொழுது இரு அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்களின் உதவியோடு தங்களது செயற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது. இக்குழுவின் தலைவரும் செயலாளரும் நான்கு மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மதகுருமார்களை உள்ளடக்கியுள்ளதோடு, ஏனைய உறுப்பினர்கள் மத குருமார்களால் பரிந்துரைக்கப்படும் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. இச்சபை மாதத்துக்கு ஒரு முறை ஒன்று கூடுவதோடு, சட்ட ரீதியற்ற முறையில் சிலைகளை வைத்தல், காணிப் பிரச்சினைகள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள் போன்றன தொடர்பான முறையீடுகளை விசாரணைச் செய்கின்றது. வித்தியாசமான மதங்களைக் கொண்ட சபை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சியில் மதங்களுக்கிடையிலான இருப்பினை விருத்தி செய்வதை அடிப்படையாகக் கொண்டு, முக்கியத்துவம் வாய்ந்த மதத் தலைவர் ஒருவர் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டு, அது தொடர்பாக கருத்துக்களை முன்வைக்க முயற்சி செய்யப்பட்டது. ஒரு கிறிஸ்தவ தேவாலயம் இந்துக் கோவிலை உரிமைக் கோரிய விடயத்தில் ஏற்பட்ட பிரச்சினையை சுமூகமாக தீர்த்து வைப்பதற்கும் இவர்களுக்கு முடியுமாக இருந்தது. இருந்தபோதிலும், அவர்கள் ஒரு சபையாக செயற்பட்டு வந்தாலும், மதங்களுக்கிடையிலான வன்முறைகள் ஏற்படுகின்ற இடத்தில் தலையிடுவதற்கான முக்கியத்துவமும் சமூக அங்கீகாரமும் அவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என இச்சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். பிரச்சினைகள் ஏற்படும் போது அது தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு தெரிவிப்பதற்கும் அதிலிருந்து விலகி செயற்படும் அளவுக்கு மாத்திரமே அச்சபைக்கு தலையீடு செய்ய முடியும்.

ஆரம்ப காலத்தில் மத்தியஸ்த குழு மற்றும் அறக்கட்டளைக் குழுக்களால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு குழுவிலுள்ள ஒவ்வொருவரும் மதிப்பளித்ததாக பதிலளிக்கும் மூத்த நபர் ஒருவர் தெரிவித்தார். தற்போது தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவில் காணப்படும் விரிசல் காரணமாக தீர்மானங்களுக்கு மதிப்பில்லை எனவும் இது ஒரு சவாலான விடயம் எனவும் விளக்கினார்.

திருச்சபை மதகுருமார்கள், இந்துக் கோவில்களின் குருமார்கள் கிராமிய மட்டத்தில் உள்வாரியாக ஏற்படும் பிரச்சினைகளைக் கருத்தியல் ரீதியாக தீர்த்து வருவதாக இன்னொருவர் குறிப்பிட்டார். திருச்சபை மன்றம் மற்றும் கோவில் நிர்வாகத்தில் உள்ள தகுதி இல்லாத உறுப்பினர்கள் மதகுருமார்களை விலக்கி வைத்து, பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அது தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளவும் அதிகளவான

ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் உருவாக்கிக் கொண்டனர். மதகுருமார்கள் பல வேலைப்பளுவுக்கு மத்தியில் இந்தப் பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்வதற்கு நேரம் கிடைக்காமை அல்லது திருச்சபை மற்றும் நிர்வாகக்குழுக்களில் முக்கியமான உறுப்பினர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கு அவர்களுக்கு ஆளுமை இல்லாமை போன்றவை இத்தகைய நிலைமைக்கு காரணமாக இருக்கலாம்.

மாவட்டத்துக்கு ஏற்ற வகையிலேயே மோதல் தீர்வு உத்திகள் பின்பற்றப்பட்டன. தீர்மானங்கள் மீது கத்தோலிக்க தேவாலயங்கள் அதிகமான அதிகாரங்கள் கொண்டு காணப்பட்டதனால் சட்ட அமுல்படுத்தல்கள் மற்றும் சட்ட அதிகாரிகள் மீது நம்பிக்கை இல்லை என ரோமன் கத்தோலிக்கர் அல்லாதோர் (Non-RC) தெரிவித்தனர். கத்தோலிக்கர்கள் அவர்களது வழிபாட்டுத் தளத்தில் கற்களை வீசிய போது பொலிஸார், வன்முறையை உருவாக்கிய கத்தோலிக்கர்களை கைது செய்யாது Non-RC ஐச் சேர்ந்த தனிநபர்களை மாத்திரம் கைது செய்ததை Non-RC தரப்பினர் உதாரணமாகக் குறிப்பிட்டனர் (மதப்போதகர், கிறிஸ்தவ ஆண் - பெண், மார்ச் 07, 2017). மன்னார் மாவட்டத்தில் மத ரீதியான சிறுபான்மையினர், குறிப்பாக தங்களது காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சட்ட ரீதியான ஆதாரங்களைத் தேடுவதில் அதிகளவு நம்பிக்கை வைத்திருந்தனர். கத்தோலிக்க வழக்கறிஞர்கள் கிறிஸ்தவ தேவாலயத்துக்கு சார்பாக செயற்படுவார்கள் என நினைத்து, நீதிமன்றத்தில் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக முஸ்லிம் வழக்கறிஞர்களைத் தாங்கள் சேர்த்துக் கொண்டதாக Non-RC தரப்பினர் குறிப்பிட்டனர். மேலே குறிப்பிட்ட காணிப் பிரச்சினைகள் (முஸ்லிம் கத்தோலிகர்களுக்கிடையிலான) முஸ்லிம்களுக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ சார்பாக வழங்கப்படாத தீர்ப்புகள் மூலம் சட்ட ரீதியாக தீர்த்து வைக்கப்பட்டது.

### 4.2. யாழ்ப்பாணம்

இங்கு நேர்காணல் செய்யப்பட்டவர்கள் மதங்களுக்கிடையிலான குழுக்களிலோ, சபைகளிலோ உறுப்பினர்களல்லர். ஆனால், ஓர் ஆண் மாத்திரம் வேறுபட்ட மதங்களை ஐக்கியப்படுத்தும் நோக்கில் கலாசார செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வந்த ஒரு குழுவின் உறுப்பினராவார். இச்சபை வேறுபட்ட மதங்களின் வழிமுறைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதச் சார்பான விழாக்கள், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றால் கவரப்பட்டது. பதிலளித்த இன்னொரு பெண்ணும் மதங்களுக்கிடையிலான மன்றத்தின் ஓர் உறுப்பினராவார். மதங்களுக்கிடையிலான

சபைக்கு குறைவான தகவல்கள் கிடைக்கப் பெறுவதனால் மதங்களுக்கிடையிலான வெளிப்படையான மோதல்கள் கிடையாது என இவ்விருவரும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகமும் தனிநபர்களும் தற்போது வரைக்கும் உண்மை, நீதி, நஷ்டஈடு போன்றவற்றை பெற்றுக் கொள்ளும் நோக்கில் நிலைமாற்றுகால நீதியைப் பெற்றுக் கொள்வதிலும் போரிலிருந்து மீள திரும்புவதிலும் தொடர்புபட்டுக் காணப்படுவதனால் மதங்களுக்கிடையிலான மோதலை ஏற்படுத்தும் ஒரு விரைவு நிலை ஏற்படாமைக்குக் காரணமாக இருக்கலாம். இந்து - பௌத்தம் மற்றும் தமிழ் - முஸ்லிம்களுக்கிடையிலான உறவானது மதத்தை விடவும் இனமேலாதிக்கம் என்ற கண்ணாடியின் ஊடாகவே பார்க்கப்படுகிறது.

### *4.3. அம்பாறை*

மோதலைத் தணிப்பது அரசியல்வாதிகளின் பொறுப்பென அம்பாறை மாவட்ட மக்கள் தெரிவித்தனர். ஒரு பிரச்சினை ஏற்படும் போது முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என இவர்கள் குறிப்பிடுகின்றனர். வெறுமனே மக்களுடைய அறிக்கைகள், கூற்றுக்கள் பிரச்சினைகளைத் தீர்க்காது. முஸ்லிம் சமூகங்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் திறன் கொண்டவர்கள் என்ற நம்பிக்கையை இழந்துள்ளதாக முஸ்லிம் தரப்புக்கள் தெரிவித்தன. "முஸ்லிம் வர்த்தக சமூகம் அவர்கள் சார்பாக இயங்குவதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்க முடியும். சிவில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சிவில் சமூகத்தை வலுவூட்டவும் உற்சாகப்படுத்தவும் முஸ்லிம்களுக்குத் தேவை காணப்படுகிறது" (குழுக் கலந்துரையாடலில் பங்குபற்றியவர், முஸ்லிம் ஆண் - பெண், மே 23, 2017).

மதங்களுக்கிடையிலான மோதலைத் தீர்க்க வேண்டுமானால் மக்களுக்கு காணப்படுகின்ற உரிமைகளுக்கிணங்க, வணங்குவதற்கான இடங்களைக் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என அம்பாறை மாவட்ட பௌத்த மக்கள் குறிப்பிட்டனர். ஒவ்வொருவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும், மற்றவர்களின் மொழியைப் படிக்க வேண்டும், மற்றவர்களுடன் இடைவினைகளை மேற்கொள்ள வேண்டும். முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அப்பிரச்சினைகள் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும் (கிராமிய அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், பௌத்த ஆண் - பெண், மே 25, 2017).

*அம்பாறை மாவட்டத்தில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல்கள் (குறிப்பாக ஒதுக்கி வைக்கப்பட்ட நிலம் தொடர்பில்) நடுநிலை தவறாத ஒரு ஊடகமாக சட்ட ரீதியான அளவீடுகள் ஊடாக கவனிக்கப்படுகிறது என கருதப்படுகிறது.*

### *4.4 மாத்தறை*

*முஸ்லிம் ஒழுங்கமைப்பில் உறுப்பினர்களான மாத்தறை மாவட்ட நகர்ப்புற முஸ்லிம் பெண்கள் ஒவ்வொரு வருடமும் சமாதான தின நிகழ்வை கொண்டாடுகின்றனர். இவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் தரப்பினர் முஸ்லிம்கள் இல்லை என சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தி வரும் செயற்பாடுகளில் இணைந்துள்ளனர். இவர்கள் சிங்கள சஞ்சிகைகளில் முஸ்லிம்களின் கலாசாரம் மற்றும் மத வழிபாடுகள் தொடர்பாக கட்டுரைகளை பிரசுரிப்பதன் மூலம் சிங்கள மக்களை முஸ்லிம்கள் தொடர்பாக தெரிந்து கொள்வதற்கான ஆவலை ஏற்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்கின்றனர்.*

*வெலிகமையில் உள்ள முஸ்லிம் ஆண் பெண்கள், பிரச்சினைகள் வரும் போது மாத்திரமே மதங்களுக்கு இடையிலான குழுக்கள் உருவாக்கப்படுவதாக, மதங்களுக்கிடையிலான குழுக்களை விமர்சித்து கருத்துக்களைத் தெரிவித்தனர். “வெளியிலிருந்து வருகின்ற மக்களே குழுக்களை உருவாக்குவதனால் அவை காலப்போக்கில் சிதறி விடுகின்றன. அவர்கள் எங்களை ஒன்றுகூடலுக்காக அழைக்கின்றனர். எமக்கு மதிய உணவும் பணமும் தருகின்றனர். நாங்கள் போகிறோம்” (மத நிறுவனங்களின் உறுப்பினர்கள், முஸ்லிம் ஆண்- பெண், ஜூன் 18, 2017). வேறுபட்ட மதத் தலைவர்களுக்கிடையில் தொடர்பை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டனர்.*

*தெனியாயவிலுள்ள மதங்களுக்கிடையிலான குழுக்கள் மதங்களுக்கிடையிலான மோதலை கவனிப்பதில் தீவிரமாகக் காணப்படுகின்றன. இக்குழுவால் பயன்படுத்தப்பட்ட உத்தி யாதனில், அரசாங்க உத்தியோகத்தர் (GA), கிராம சேவகர் மற்றும் பொலிஸ் தரப்புடன் இணைந்து இரு தரப்புக்களும் ஒரே தடவையில் சந்தித்து தங்களது பிரச்சினைகள், குறைகளைக் கேட்பதற்கான ஒரு களத்தை அமைத்துக் கொடுத்ததாகும். எவ்வாறிருப்பினும், பௌத்தர்கள் மற்றும் ஏனைய மதங்களின் உறுப்பினர்களுக்கிடையில் பிரச்சினை ஏற்படும் போது அதனைத் தீர்த்து வைப்பதற்கு அதிகாரிகள் தீர்மானங்களை மேற்கொள்ளப்படாத போது இக்குழு பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது. எனவே, பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவம், இந்துக்களின் பிரச்சினைகள் அடிப்படைவாத கூறுகளைக் கொண்ட அரசியல் ஆர்வம் உடையதாகக் காணப்படுவதனால் அவை அரசியல் மட்டத்திலேயே தீர்த்து வைக்கப்பட முடியும் என இக்குழு குறிப்பிடுகிறது. மேலும், இக்குழு மோதலைத் தணிப்பதற்கான பயிற்சியின்*

முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டதோடு ஒரு குழு என்ற அடிப்படையில் நேரடியாகவே மதங்களுக்கிடையிலான மோதலில் தலையிட முடியாமல் போகின்றபொழுது அந்தப் பயிற்சி வினைத்திறனற்றதாக மாறிவிடுகிறது எனவும் குறிப்பிட்டது. அப்பிரதேசத்தில் சட்டத்தை அமுல்படுத்துகின்ற அதிகாரிகள் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அப்பிரதேசத்தின் அனைவரது பெறுமானங்களின் இருப்பையும் ஏற்றுக்கொள்வதோ பகிர்வதோ இல்லை என இக்குழு குறிப்பிடுகின்றது. மோதலைத் தணிப்பது தொடர்பாக அவர்களது அறிவையும் திறமையும் புதுப்பிக்கவும் மேம்படுத்தவும் அவர்களுக்கு சந்தர்பங்கள் கிடைப்பதில்லை என குழு உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர்.

### 5. பெண்களும் மதங்களுக்கிடையிலான மோதலும்: பங்கேற்றல் மற்றும் வகிபாகங்கள்

*ஆணாதிக்க சமூகங்களில் மோதலைத் தணிக்கும் செயன்முறையில் சமனான பங்கேற்றலின் முக்கியத்துவம் மற்றும் பெண்களின் வகிபாகங்கள் பெரிதாக நோக்கப்படுவதில்லை. அதே நேரத்தில், அவை மத வழமைகள், நம்பிக்கைகள் மற்றும் நிறுவனங்களால் வலுப்படுத்தப்பட்டுள்ளன. UNSCR இன் 1325 ஆனது மோதல் தவிர்ப்பு, தீர்மானமெடுத்தல் செயன்முறையில் பங்கேற்றல், மனித உரிமைகள் போன்றவற்றைப் பாதுகாத்தல் மற்றும் மதிப்பளித்தல், மீட்டெழுதல் போன்றவைகள் பெண்களின் சம வகிபாகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. ஆயுதமேந்திய மோதல்களில் இவை வரையறுக்கப்பட்டாலும் மதங்களுக்கிடையிலான மோதல் மற்றும் மோதல் தீர்வுகளில் பெண்களை உள்வாங்க முடியும். ஆகவே, இப்பகுதியில் மோதல்களைத் தூண்டி விடுவதில் பெண்களின் நிலை, மோதலை தணிப்பதில் அவர்களின் பங்கேற்றல், மதங்கள் மதங்களுக்கிடையிலான குழுக்கள் அல்லது கழகங்களில் வினைத்திறனான பங்குபற்றுதலில் பெண்கள் எதிர் நோக்கும் தடைகள், பாதுகாப்பு தொடர்பாக அவர்களது கருத்துக்கள், சமகால இருப்பை விருத்தி செய்வதில் பெண்கள் பங்களிக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக பரீட்சிக்கப்படுகிறது.*

*இங்கு இவர்கள் மதங்கள் தொடர்பாக அறிந்து வைத்திருக்கும் கருத்துக்கள் விடயங்களின் மட்டத்தை அவதானிப்பது முக்கியமாகும். இல்லாவிடில் ஆண்கள் வெளிப்படுத்திய மனப்பாங்குகளுக்கும் பெண்கள் வெளிப்படுத்துபவைகளுக்கும் இடையில் எந்த விதமான வித்தியாசமும் காணப்பமாட்டாது. பெண்கள் மதங்களுக்கிடையிலான மோதலை விளங்கி வைத்துள்ள அளவிலும் ஆழத்திலும், மோதல் கட்டுப்படுத்தலில் பங்கேற்றலிலும் நான்கு மாவட்டங்களுக்குள்ளும் வெளியேயும் மாறுபட்ட நிலைமைகள் காணப்படுகின்றன. அம்பாறையில் மத வழமைகளும் சமூகக் கட்டுப்பாடுகளும் இறுக்கமானதாகக் காணப்பட்டாலும் முஸ்லிம் பெண்கள் மதங்களுக்கிடையிலான குழுக்களில் உடற்சாகத்துடன் இயங்குவதை காண முடிந்தது. ஆனால், மன்னாரில் அவ்வாறிருக்கவில்லை. இந்து மத நம்பிக்கைகளும் வழிமுறைகளும் ஆணாதிக்கத்தை ஆதரிப்பதாக அமைந்துள்ளமையினால் மதங்களுக்கிடையிலான குழுக்களிலும் கோவில் நிர்வாகக் குழுக்களிலும் இந்துப் பெண்கள் மிகக் குறைவாகவே தொடர்புபட்டிருந்தனர். பௌத்த மற்றும் கத்தோலிக்க மதப் பெண்கள் மதங்களுக்கிடையிலான குழுக்களில் அதிக ஆர்வம் கொண்டதை காணக்கூடியதாக இருந்தாலும் அவர்கள் உள்ளடங்கும் குழுக்கள் மூலமாக எந்தளவுக்கு அவர்களின் உள்ளீடுகள் எடுக்கப்படுகின்றது என்பதனை அறிந்து கொள்வது கடினமானதாகக் காணப்பட்டது. பெண்கள் முகவர்களை நிர்னயிப்பதில் இட அமைவும் முக்கியமானதாகும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்கள் பங்கேற்றல், முகவர் நிறுவனங்கள் மற்றும் பாதிப்புக்கள் என்பன அடுத்தடுத்து தனியாக நோக்கப்படுகின்றன.*

### *5.1 மன்னார்*

*மன்னார் மாவட்டத்தில் பதிலளிப்பவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொதுவான அவதானிப்பின் படி அவர்களது கிராமத்திலும் மாவட்டத்திலும் மதங்களுக்கிடையிலான மோதல்கள் தொடர்பில் அவர்கள் எச்சரிக்கையுடன் இருந்ததை அவதானிக்க முடிந்தது. ஆனால், கதோலிக்கப் பெண்கள் மோதலைத் தணிக்கும் நடவடிக்கை, மதக் குழுக்கள், மதங்களுக்கடையிலான குழுச் செயற்பாடுகள் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்தாத தன்மை காணப்பட்டது. முஸ்லிம், இந்துப் பெண்களை நேர்காணல் செய்த போது அவர்களின் சமூகத்தில் மதங்களுக்கிடையிலான மோதலை தீர்ப்பதற்கு அவர்களும் நேரடியாக பங்கேற்க வேண்டியது அவர்களின் வகிபாகமாக அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. பிரச்சினைகள் தொடர்பான முஸ்லிம் பெண்களின் விபரிப்புக்கள் வாய்மொழி மூலமாக மாத்திரமே காணப்பட்டன.*

*சமூக மட்டம் அல்லது நிறுவன மட்டத்தில் மதங்கள் தொடர்பாக தங்களுக்கும் வகிபாகம் இருப்பதாக முஸ்லிம் பெண் பதிலளிப்பவர்கள் கருதவில்லை. மதங்களுக்கடையிலான சர்ச்சைகளுக்கு தீர்வு காண்பதில் அவர்கள் ஏன் பங்கு வகிக்கவில்லை என கேட்கப்பட்டபோது, தீர்மானங்களை மேற்கொள்வதை துவங்கி வைப்பதற்கு அவர்களுக்கு முடியுமாக இருக்கும் என கருதவில்லை என பதிலளித்தனர். அவர்கள் WRDS இல் ஒரு பகுதியாக இருந்தாலும் அவர்கள் எந்த விதமான மதங்களுக்கிடையிலான மன்றங்களிலும் உறுப்புரிமை பெற்றிருக்கவில்லை.*

*இந்து பெண்கள் குழுக்கள் அவர்களது கிராம அபிவிருத்தி, பாதைகள் அமைத்தல், வாழ்வாதாரம், தங்களது பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றில் மிகக் கவனமாக இருந்தனர். கதோலிக்கர்களுக்கு அமைச்சுக்களுடன் தொடர்புகள் காணப்படுவதனால் அவர்களுக்கு அரசாங்க சேவையில் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக இவர்கள் நினைத்தனர். இதனால் இந்துக்கள் ஓரம்கட்டப்பட்டனர்.*

*கதோலிக்க மற்றும் Non-RC பெண்கள் கிறிஸ்தவ தேவாலய நிர்வாகக் குழுக்களில் உற்சாகத்துடன் பங்குபற்றியதோடு, மதங்களுக்கிடையிலான மோதல்கள் தொடர்பாக உறுதியான கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். உண்மை யாதனில், திருச்சபை மதப் போதகர்கள் மீது கிறிஸ்தவ தேவாலய நிர்வாகக் குழுக்களுக்கு அதிக ஆதிக்கம் காணப்பட்டது. இத்தகைய குழு அதிகளவிலான பெண்களை உள்ளடக்கி இருந்தமையினால் கதோலிக்கப் பெண்கள் மோதலைத் தணிப்பதிலும், தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளிலும் அதிக ஆதிக்கம் செலுத்தக் கூடியதாக இருந்தது. மன்னார் மாவட்ட மதங்களுக்கிடையிலான கூட்டமைப்பில் தற்போதைய செயலாளர் ஒரு பெண் என்பதுடன் பல பெண் உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.*

எவ்வாறிருப்பினும், இத்தகைய பெண்கள் பொறியிலாளர், வைத்தியர்கள், ஆசிரியர்களாகக் காணப்படுவதனால் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய உறுப்பினர்களாக உள்ளனர்.

### 5.2 யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில், கோவில் நிர்வாக சபைகளிலும் தீர்மானம் எடுத்தல் செயல்முறைகளிலும் பெண்கள் உள்வாங்கப்படுவதில்லை. அவர்கள் தங்களுடைய கருத்துக்களை பொது ஒன்று கூடல்களில் வெளிப்படுத்த முடியும். ஆனால், கோவில் நிர்வாகக் கூட்டங்களில் வெளிப்படுத்த முடியாது. பெண்கள் கோவில் சுற்றுப் புறத்தை சுத்தப்படுத்துதல் போன்ற சிறிய கோவில் நிர்வாக செயற்பாடுகளில் பங்கேற்க முடியும். மறுபுறத்தில் கதோலிக்க மற்றும் கிறிஸ்தவ பெண்கள், தேவாலய நிர்வாகங்களில் உற்சாகத்துடன் பங்கேற்கின்றனர். ஒரு இந்து மதப் பெண் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டார். அவர் தன்னுடைய மதத்தின் மூலமாக பாதகமாக பாதிக்கப்பட்டிருந்ததை குறிப்பிட்டார். மதங்களுக்கிடையிலான குழுக்களில் உறுப்பினர்கள்அல்லாத இந்துப் பெண்கள் நேர்காணல் செய்யப்பட்ட போது, அவர்கள் மாவட்டத்தில் நிலவுகின்ற மதங்களுக்கிடையிலான நெருக்கடிகள் தொடர்பில் அறிந்திருந்திருந்ததைக் காண முடிந்தது. அதுபோலவே, இவர்கள் WRDS உடன் இணைந்து, தமது கிராம அபிவிருத்திப் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்துப் பெண்கள் தங்கள் மதங்கள் மூலமாக பாரபட்சமாய் நடாத்தப்படுவதாக வெளிப்படுத்தினர். பெண்கள் விதவைகளாகவோ, பிள்ளைகள் அற்றவர்களாகவோ இருந்தால் அவர்களின் ஒன்று திரட்டல்கள் மதத்தின் நம்பிக்கை மற்றும் வழக்காறுகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்து மக்கள் நம்புகின்ற சோதிடங்கள், சில பெண்கள் அமங்கலமான கிரக நிபந்தனைகளுடன் பிறந்துள்ளதுடன், அவர்கள் அதே சோதிட நிபந்தனைகளைக் கொண்ட வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்ய வேண்டும் என சோதிடம் வலியுறுத்துவதாகவும் கருதுகின்றனர். இத்தகைய சூழ்நிலையால் ஆண்களின் நடத்தைகளைக் கூட கருத்திற்கொள்ளாது, குடும்பங்கள் மூலமாக பெண்கள் திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர். இவ்வாறான பெண்கள் மகிழ்ச்சி இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ்வதோடு சீதனம் மூலம் கணவன் ஏமாற்றப்பட்டால் மனைவியை விட்டுப் பிரியும் நிலையையும் ஏற்படுத்துகிறது. இந்தக் காரணிகள் இருந்த போதிலும், போர்க்காலங்களில் பல ஆண்கள் காணாமல் போதல், கொல்லப்படுதல், காயப்படுதல் போன்றன காரணமாக போருக்குப் பின்னர் பெண்கள் அதிகாரங்களை மற்றும் தலைமைத்துவப் பங்கைப் பெறவும் உந்தப்பட்டதாக

*பதிலளிக்கும் ஒரு பெண் குறிப்பிட்டார்* (WRDS *இன் தலைவர், இந்துப் பெண், மார்ச் 08,* 2013). *ஆகவே, பெண்கள் தலைமைத்துவப் வகிபாகத்தை ஏற்றுக்கொள்ள அவர்களை வலுவூட்ட வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதுமாத்திரமன்றி, பங்கேற்றலில் மதத்தால் வரையறை விதிக்கப்படும் சாதி மற்றும் பாரம்பரியமான பாரபட்சமான வழிமுறைகள் தொடர்பாக வெளிப்படுத்தவும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும்.*

### *5.3 அம்பாறை*

*கோவிலில் நிர்வாக ஒன்று கூடலிலும், பெண்கள் தங்களது கருத்தை குரல் கொடுப்பதிலும், பெண்கள் பங்குபற்றல் உயர்மட்டத்தில் காணப்பட்டாலும் அவர்களின் கருத்துக்களுக்கு குறைந்தளவு மதிப்பே கிடைக்கப்பெறுவதாக இந்துப் பெண்கள் குறிப்பிட்டனர். தீர்மானம் எடுத்தலிலும், நிதி சார்ந்த விடயங்களிலும் கலந்து கொள்ள இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பொதுக் கூட்டங்களில் மாத்திரமே பெண்களின் கருத்துக்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன. கோவிலில் பெண்களுடைய பங்கு, வரி வசூலித்தல், சுற்றுப் புறத்தை சுத்தம் செய்தல், ஏழை மக்களுக்கு உணவு பகிர்தல் போன்றவற்றுடன் வரையறுக்கப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் புனித இடங்கள் மீதான உரிமை கோரலுக்கான மோதல் தொடர்பில் தங்களுக்கு குறைந்தளவு புரிதலே உள்ளதாக இந்து மதப் பெண்கள் வெளிப்படுத்தினர். காணிகளில் இராணுவத்தின் தொடர்பானது நாட்டை பௌத்த நாடாக மாற்றும் ஒரு செய்பாடு என இவர்கள் சந்தேகிக்கின்றனர். மேலும் ஆண்களே மதங்களுக்கிடையிலான மோதலை தூண்டி விடுவதாக பெண்கள் குறிப்பிட்டனர்.*

*அம்பாறை மாவட்ட முஸ்லிம் பெண்கள் அரசாங்க அலுவலகங்களில் சேவைகளை நாடுகின்ற பொழுது மட்டுமே மற்ற சமூகங்களுடன் இடைவினை செய்கின்றனர். குறிப்பாக, ஒலுவில் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே காணப்படும் மத மாற்றம் தொடர்பான அச்சத்தின் காரணமாக முஸ்லிம் இளம் பெண்கள் மற்றவர்களுடன் இடைவினை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. முஸ்லிம் பெண்கள் சிங்கள ஆண்களுடன் காதலித்து ஓடிப்போன சம்பவங்களும் குறைவாகவே உள்ளன. பெண்கள் ஏனையவர்களுடன் இடைவினை மேற்கொள்வதற்கு தயங்குகின்றனர். மன்னார் மாவட்டத்தைப் போன்று முஸ்லிம் பெண்களில் பெரும்பான்மையினர் பொதுக்கோல மட்டத்திலாவது மதங்களுக்கிடையிலான சம இருப்பை விருத்தி செய்யும் விடயங்களில் தொடர்பு கொள்வதில்லை.*

### *5.4 மாத்தறை*

*மாத்தறை மாவட்ட நகர் புறத்தில் நேர்காணல் செய்யப்பட்ட முஸ்லிம் பெண்கள் மதக்குழுக்களில் உற்சாகத்துடன் பங்குபற்றியமையை காண முடிந்தது. இவர்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். குறிப்பாக, ஒவ்வொரு வருடமும் சமாதான தினத்தை ஒழுங்கமைப்பு செய்கின்றனர். முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகக் காணப்படும் தவறான கருத்துக்களை தெளிவுபடுத்துவதற்காக சிங்கள பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதுவதற்காகவும் இவர்கள் முயற்சிக்கின்றனர். வெலிகம, மன்னார், அம்பாறை போன்ற இடங்களில் நேர்காணல் செய்த பெண்களைப் போல் அல்லாது இங்குள்ள பெண்களில் பெரும்பான்மையினர் தொழில் புரிபவர்களாகவும் பொருளாதார ரீதியாக நல்ல ஒரு நிலையிலும் காணப்படுகின்றனர். பெண்கள் பொறுமை சாலிகளாகக் காணப்படுவதனால் மக்களின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தி சமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறைக்கு இவர்கள் சிறந்தவர்கள் என குறிப்பிடுகின்றனர்.*

*மாத்தறை மாவட்ட பௌத்த பெண்கள், குறித்த பிரதேசத்தில் பெண்கள் படிப்படியாக சுதந்திரமானவர்களாயினர் எனக் குறிப்பிடுகின்றனர். பெண்கள் மேலும் வலுவூட்டப்பட வேண்டும் என இவர்கள் வெளிப்படுத்தினர். இவர்கள் பிரதேச செயலக மட்டத்திலான பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேசிய சமாதான பேரவையின் (NPC) பல பேச்சுவார்த்தைகளுக்கு வழிகாட்டியதாகவும் குறிப்பிடுகின்றனர். மேலும் அரசாங்கம் அடிப்படைவாதத்திற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்காததனால் ஏமாற்றத்திற்குள்ளாகியுள்ளதாக தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தினர். மற்ற சமூகங்களுடன் ஒன்றாக இருப்பதன் அனுபவமானது அழகானது எனவும் அதன் பெறுமதியும் சாதகங்களும் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் இவர்கள் குறிப்பிட்டனர். இதே விடயம், கடந்த கால (பொதுபல சேனாவின் வருகைக்கு முற்பட்ட காலம்) அனுபவங்களை நினைவில் கொண்டு முஸ்லிம் பெண்களாலும் எதிரொலிக்கப்பட்டது. பெண்கள் மதங்களுக்கு இடையிலான குழுக்களின் ஒன்று கூடலில் பங்கேற்பதன் மூலம் நன்மையடைவதில்லை எனக்கருதி இக்குழுக்களில் சுறுசுறுப்பாக ஈடுபடுவதில்லை என்பது மதங்களுக்கிடையிலான குழுவின் பௌத்த ஆண் உறுப்பினர் ஒருவரின் கருத்தாக இருந்தது.*

*மதங்களுக்கிடையிலான குழுவின் உறுப்பினர்களான தெனியாயவைச் சேர்ந்த இந்து மற்றும் கிறிஸ்தவப் பெண்கள் தாங்கள் ஆண்களுக்கு சமமாகவே தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் பங்கேற்க முடியுமாக உள்ளதாக குறிப்பிடுகின்றனர். இருப்பினும் பல சந்தர்ப்பங்களில் மூத்த, சிரேஷ்ட ஆண் உறுப்பினர்களின் கருத்துக்கு அதிக மதிப்பு காணப்படுகின்றது. இளைஞர்களுக்கு தங்களது தாய் மொழியிலேயே தலைமைத்துவம் மற்றும் மோதல் தணித்தல் தொடர்பான பயிற்சி தேவைப்படுவதனை நினைத்து தமது*

கவலையை வெளிப்படுத்தினர். சிங்களம், தமிழ் பேசுபவர்கள் மூலமாகவே அநேகமான பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டாலும் அதன் மூலம் அவர்கள் பயனடைவதில்லை. பிரச்சினைகளுக்கான தீர்மானங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரச அதிகாரிகளை அணுகுவதற்கு தயங்குவதனால் இனத்துவத்தின் அடிப்படையில் அரச அதிகாரிகள் மூலம் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படுகின்றமை இளம் பெண்கள் எதிர்நோக்குகின்ற இன்னுமொரு தடையாகும். பண உதவிகளின் மாற்றங்களில் இலகுவாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாக இருப்பதனால் பெண்களே மதங்களுக்கிடையிலான மோதல்களுக்கு காரணம் என இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மதங்களுக்கிடையிலான மோதலை தவிர்ப்பதற்காக தலையிடுவதற்கு பெண்களுக்கு மத்தியில் விழிப்புணர்வூட்டலை அதிகரிப்பது முக்கியத்துவம் என தெளிவுபடுத்தப்பட்டது. பெண்கள் மோதல் தணித்தல், கிராமிய, பிராந்திய இயக்க நிலைகள், இனத்துவம், சாதி, வகுப்பு, வயது, ஆர்வம் மற்றும் மதம் போன்ற பல்வேறுபட்ட விடயங்களில் பங்கேற்பதன் மூலமாக வலுவூட்டப்படுவதோடு அனுபவங்களையும் பெறுகின்றனர். இத்தகைய காரணிகள் பெண்கள் மதங்களுக்கிடையிலான குழுக்களில் உற்சாகத்துடன் பங்கேற்கவும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் ஊக்கமாகவோ அல்லது தடையாகவோ இருக்கின்றன. மாத்தறை, மன்னார் மற்றும் அம்பாறை போன்ற இடங்களில் காணப்பட்டதைப் போல் அல்லாது மாத்தறை நகர்ப்புறத்தில் காணப்பட்ட பெண்கள் தொழில் புரிபவர்களாகவும் அவர்களுடைய பங்கேற்றல் அர்த்தமானதாகவும் காணப்பட்டதனால் பொது வெளியில் மக்களை ஒன்று திரட்டுவதற்கான வழிவகைகளைக் கொண்டிருந்தனர். நான்கு மாவட்டங்களிலும் உள்ள இந்து தரப்பினர் தங்களது மத நிறுவனங்களின் மூலம் பாரபட்சத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். ஒரு விடயத்திற்கு அவர்கள் கொடுக்கும் ஆர்வம் மற்றும் முன்னுரிமையின் அடிப்படையிலேயே பெண்கள் பங்கேற்றலின் அளவு தங்கியுள்ளதாக அவர்கள் வெளிப்படுத்தினர். மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்துப் பெண்கள் மதங்களுக்கிடையிலான மோதலை விடவும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, தங்களது பிள்ளைகளுக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களில் ஆர்வமாக இருந்ததை உதாரணமாகக் கூறலாம். சிரேஷ்டவர்களின் அல்லது மூத்தவர்களின் வயதும் மரியாதை செலுத்த வேண்டிய கலாசாரமும் இளைஞர் பங்கேற்றலின் அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, பெண்கள் குழுவிலுள்ள மூத்த உறுப்பினர்களுக்கு மதிப்பளிக்கும் முகமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்தாது ஒதுக்கி வைக்கின்றனர். இறுதியாக, பெண்கள் ஒரு குழுவில் பங்கேற்றலை நிர்ணயிக்கின்ற காரணியாக பொருளாதார நிலையும் காணப்படுகின்றது. அதாவது, குழுவில் இணைவதன் மூலம் பிரதிபலனாக பொருளாதார ரீதியாக அவர்களுக்குக் கிடைக்கும் நன்மையின் அடிப்படையிலேயே அது தங்கியுள்ளது.

ஒரு குழு, பெண்களை மட்டும் உள்ளடக்கியுள்ளதாகக் காணப்பட்டால் அங்கு பெண்கள் உற்சாகமாகவும் அர்த்தமுள்ளதாகவும் கூட்டாக இணைவதை ஆய்வாளர்கள் அவதானித்தனர். இது பெண்கள் பங்கேற்றலில் தாக்கம் செலுத்தும் மேலே கூறப்படாத ஒரு காரணியாகும். மாத்தறை நகர்ப் புறத்தில் உள்ள முஸ்லிம் மதக் குழுக்களில் உள்ள பெண்கள், மன்னார், யாழ்ப்பாணம், அம்பாறை போன்ற இடங்களில் WRDS இல் உள்ள பெண்கள், அதிலுள்ள பங்குதாரர்களின் கொள்திறனை அதிகரித்தல், வாழ்வாதாரப் பயிற்சிகள், உட்கட்டுமான அபிவிருத்தி, கடன் திட்டங்கள் போன்ற அவர்கள் முக்கியத்துவம் எனக் கருதும் பல விடயங்களில் ஈடுபடுகின்றனர். மதங்களுக்கிடையிலான குழுக்களில் இவர்கள் ஈடுபடுகின்ற இவ்விடயங்கள் இயற்கையாகவே ஆணாதிக்க மனப்பாங்கில் அமைந்துள்ளன என வாதிடப்பட முடியும். அதாவது, மோதலைத் தணித்தலுடனான பிரச்சினைகளுக்கு பெண்கள் அர்த்தமான பங்களிப்பை வழங்க அவர்களுக்கு எதுவும் கிடையாது என மன்னாரில் வேறுபட்ட மதங்களுக்கிடையிலான குழுக்களில் இரு ஆண் அங்கத்தவர்களும் அதே போன்று மாத்தறை மற்றும் மன்னாரில் WRDS இல் உள்ள முஸ்லிம் பெண் உறுப்பினர்களும் கருத்துக்களை வெளிப்படுத்தினர் (அறிக்கையில் மேலே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது). மதங்களுக்கிடையிலான குழுக்கள், மோதல் தணிப்பு போன்றவற்றில் பெண்களின் பங்கேற்றலானது பலதரப்பட்ட சூழல் பின்னனிகள், பால் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. இவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் வேற்றுமைகளை உருவாக்குவது மாத்திரமன்றி பெண்களுக்கிடையிலும் வேற்றுமைகளை உருவாக்குகின்றது.

## 6. முடிவுரை

நான்கு மாவட்டங்களிலும் மதங்களுக்கிடையிலான மோதல் வித்தியாசமான முறைமைகளில் வெளிப்படுத்தப்படுகின்ற போதிலும், மோதலுக்கான நெருக்கடி நிலைமைகளை ஏற்படுத்துகின்ற நிபந்தனைகள் ஒன்றாகவே காணப்படுகின்றது என்பதனை ஒன்று தொடக்கம் ஐந்து வரையான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்தலாம். நான்கு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது பௌத்த தேசிய வாதத்தை மேம்படுத்தும் அரச நிகழ்ச்சி நிரல்களும், நாட்டில் மதங்களுக்கிடையிலான மோதல்களுக்கு வன்முறைகளில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுக்கப்பட்டதும் மாத்திரமே மோதலுக்கான காரணம் என்பதை மறுதலிக்கின்றது. உள்வாரியான அல்லது பிராந்திய தேசியவாதங்கள் மன்னார் மற்றும் வட மாகாணத்தில் கத்தோலிக்கர், இந்துக்களில், மத அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டும், அம்பாறையில் முஸ்லிம்களிடையே இனத்துவ மத அடையாளத்தைக் கொண்டும் காணப்படுகிறது. இது வெளிப்படையாகவே புனித இடங்கள் மற்றும் மத அடையாளங்கள் மீதான வாக்குவாதங்களை அடிப்படையாகக் கொண்டே வெளிப்படுத்தப்படுகின்றது. இது ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசியல் சூழ்நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி சமூகத்திலுள்ள ஒவ்வொரு ஆண்மாவின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்கரின் அடையாளம் முறிவடைவதாக அவர்கள் நினைத்ததன் விளைவாகவே கத்தோலிக்கர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. பௌத்த தேசியவாதம் அரசினாலேயே உருவாக்கப்படுகின்றது என பௌத்த சமூகத்தின் பெரும்பான்மையினர் கற்பனை செய்யும் அளவுக்கு முஸ்லிம்கள் சவாலை ஏற்படுத்தியதனாலேயே நான்கு மாவட்டங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான மனோபாவங்கள் (ஓரளவுக்கு கதோலிக்கர் மீதான எதிர் மறையான மனோபாவங்கள்) தோற்றம் பெற்றன. தற்கால சமூகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறிய சிறுபான்மையினரின் இனத்துவ மத முழுமைத் தன்மையில் ஏற்படுகின்ற முறிவுகள் அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன. வேறுபட்ட இனத்துவ மதக் குழுக்களுக்கிடையில் காணப்படுகின்ற கலாசார மற்றும் சமூகக் காரணிகளான சாதி, வறுமை மூலம் ஏற்படுகின்ற பொருளாதார, சமூக ரீதியான சமமின்மைகள் மூலமாக அவ்வச்சம் மேலும் உக்கிரப்படுத்தப்படுகிறது. ஒரு மதத்தின் பூரணத்தன்மை ஏனையவைகளால் ஆதிக்கம் அல்லது சவாலுக்குட்படுத்தப்படுகிறது என உளரீதியாக கற்பனை செய்வதன் மூலமாகவும் மதங்களுக்கு இடையிலான நெருக்கடிகள் மற்றும் மோதல்கள் துரிதப்படுத்தப்படுகின்றன. காணிகள் ஒதுக்கி வைக்கப்பட்டமையே இத்தகைய சவால்கள் ஏற்படுவதற்கு அடிப்படையாகும். நான்கு மாவட்டங்களிலுள்ள கத்தோலிக்கர், இந்துக்கள், பௌத்தர்கள் மறுபெயரமைக்கும் செயற்பாடுகள், மத

சார்பான சிலைகளை நிர்மாணித்தல், வழிபடுவதற்கான கட்டடங்களை கட்டுதல் போன்ற செயற்பாட்டின் மூலமாக மதச் சார்பின்மையை இல்லாமல் செய்தல், இடங்களை இனத்துவமயமாக்கல் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இனத்துவ விடயங்களில் தங்களை உட்படுத்திக் கொள்கின்றனர். மறுபுறத்தில், அம்பாறை மற்றும் மன்னார் மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் நிலங்களை வாங்கி எல்லைகளை விரிவுபடுத்துவதன் ஊடாக தங்களது அடையாளத்தையும் ஆதிக்கத்தையும் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர்.

நாட்டின் போருக்குப் பிந்திய சூழ்நிலைகளும் மதங்களுக்கிடையிலான மோதலை சாத்தியமாக்கிய இன்னுமொரு முக்கிய நிலைமை அல்லது நிபந்தனையாகும். குறிப்பாக மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் பௌத்தர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மோதல்கள், மன்னார் மற்றும் அம்பாறையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல்கள் குறிப்பிடத்தக்கன. வடமாகாணத்தில், இராணுவம், புத்தர் சிலைகளை நிறுவுதல், இந்துக்களின் ஒதுக்கி வைக்கப்பட்ட வழிபாட்டுக்குரிய இடங்களை நாசம் செய்தல், மறு பெயர்கள் சூட்டுதல் போன்ற செயற்பாடுகள் மதத்திற்குப் பாதுகாப்பின்மை அல்லது போட்டியென்ற அடிப்டையிலன்றி இனத்துவ தேசிய வாதத்தின் அடிப்படையிலேயே சமூகத்தால் பார்க்கப்பட்டது. 1983 இல் ஏற்பட்ட இனத்துவ வன்முறைகளின் நினைவுகளை கருத்திற்கொண்டு தெனியாயவியவிலுள்ள தமிழ் பதிலளிப்பவர்கள் சிங்கள சமூகத்துடனான தங்களது உறவுகளை வரையறுத்துள்ளனர். 1990 களில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமையினால் முஸ்லிம், தமிழ் உறவுகள் மதத்தை விடவும் இனத்துவ வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளதோடு, அவர்களின் உறவுகளில் பிளவுகளும் ஏற்பட்டுள்ளன. மோதலும் வன்முறைகளும் மதத் தளங்களைக் கொண்ட மேற்பரப்பில் தோற்றம் பெறுகிறது. அதாவது, இனத்துவத்திற்கிடையிலான நெருக்கடியாகத் தோற்றம் பெற்று, மத மோதலாக வெளிப்படுத்தப்படுகிறது. எவ்வாறிருப்பினும், மதங்களுக்கிடையிலான உறவுகளில், இனத்துவ தேசிய வாதம் முக்கியமான பங்கை வகிக்கின்றது. இது மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மை சமூகத்தினரை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, மன்னாரில் பௌத்தர்கள் இந்துக்களை கத்தோலிக்க பெரும்பான்மை சமூகத்தினரின் சார்பாகவும் புரிந்து கொள்வதோடு, அம்பாறையில் பௌத்தர்கள், தமிழர் சமூகத்தோடு சேர்த்து முஸ்லிம்களையும் அடையாளப்படுத்துவதனால் முஸ்லிம்கள் மீது பகைமை உணர்வை வெளிப்படுத்துகின்றனர். முக்கியமான பெரும்பான்மையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் போது பாதிக்கப்பட்ட வேறுபட்ட சிறுபான்மை சமூகங்கள் அவர்களுக்கு நெருக்கமானதாக கொண்டுவரப்படுகின்றன.

*நான்கு மாவட்டங்களிலும் பொதுவான நிலைமைகள், நிபந்தனைகள் வித்தியாசமான வடிவங்களில் நெருக்கடியையும், மோதலையும் ஏற்படுத்தி இருந்தாலும், பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர்கள், ரோமர் கத்தோலிக்கர் அல்லாதோர் (Non-RC) போன்ற பதிலளித்தவர்களின் உறுதியான ஒரு ஆய்வுப் பொருள் தோற்றம் பெறுகிறது. அது அவர்கள் கருதாத முஸ்லிம் சமூகத்தின் மீதான சந்தேகம், நம்பிக்கையின்மை, பகைமையுணர்வு போன்றவைகளாகும். 1990 களில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் முஸ்லிம் சமூகம் வெளியேற்றப்பட்டதன் தாக்கத்தினால் மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறையில் தமிழ் - முஸ்லிம் உறவுகள் கலங்கப்படுத்தப்பட்டன. முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதனால் இம்மாவட்ட மக்களுக்கு முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சியை அனுபவப்பட முடியாமல் போனது. எனவே அவர்கள் மீள வந்த பொழுது நிலங்களையும் சொத்துக்களையும் திரும்பப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் மேலெழத் தொடங்கின. தங்களது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இயங்கிய அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் இந்த நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தின. எவ்வாறிருப்பினும், நேர்காணல்கள் (குறிப்பாக மன்னார், அம்பாறை) முஸ்லிம் சனத்தொகையின் அதிகரிப்பு, அவர்களின் பொருளாதார விருத்தி, பள்ளிவாசல்களின் பெருக்கம், நெறிமுறையற்ற மதமாற்றம் மற்றும் எல்லைகளின் விரிவாக்கம் போன்றவற்றிற்கு எதிராக பௌத்தர்களுக்கு (ஓரளவுக்கு தமிழர்கள் மத்தியில்) மத்தியில் பயம் மற்றும் சந்தேகம் போன்ற பொதுவான கருத்தாடல் காணப்படுவதை தெளிவுபடுத்தின.*

*தமிழ் - முஸ்லிம்களுக்கிடையிலான மோதலானது வெளிப்படையாகத் தெரியக் கூடிய பொருளாதார காரணிகளான வறுமை (அம்பாறை), பொருளாதார தங்கியிருத்தல் (அம்பாறை), நிலம் (மன்னார், யாழ்ப்பாணம், அம்பாறை) மற்றும் வளங்களைப் பெற்றுக் கொள்ளல் (மன்னார், அம்பாறை) போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டாலும், மறுபுறத்தில், பௌத்த - முஸ்லிம் உறவானது அதிகளவில் கருத்தியல் சார் மோதலை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகின்றது. மாத்தறை மற்றும் அம்பாறை மாவட்ட பௌத்த பதிலளிப்பவர்களில் முஸ்லிம் சமூகம் மீதான மனநிலை யாதெனில், அவர்கள் இலங்கைக்கு உரித்துடையவர்கள் அல்லர், அவர்கள் சிங்கள பௌத்த அடிப்படைவாதத்திற்கு அச்சுறுத்தல் என்பதாகும். இது அம்பாறையில் நிலங்களை மத இடங்களாக உரிமை கோருதல், மாத்தறையில் முஸ்லிம் உடைகளுக்கும் வியாபாரத்திற்கும் சவால் விடுத்தல் போன்றவற்றின் அடிப்படையில் பௌத்த அடியாளத்தை சின்னங்கள், அடையாளங்கள் மூலமாக வலுப்படுத்த வேண்டியதன் தேவையை வெளிப்படுத்துகிறது. பௌத்த சமூகத்திற்குள்ளேயே கருத்தியல் ரீதியான, ஒழுக்க நடத்தை ரீதியான மோதல்கள் காணப்படுகின்றமை இங்கு அழுத்தமாக குறிப்பிட வேண்டிய ஒரு விடயமாகும். ஒழுக்க ரீதியான பாதுகாப்பின்மைகள், குழப்பங்கள்*

சமூகங்களை பாதிக்கின்ற பொழுது பௌத்த அடிப்டைவாத தேசிய குழுக்கள், அடிப்படைவாத மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் வாதிகள் போன்றவர்கள் அவர்களை இலகுவாக சுரண்டக் கூடியவர்களாக இருக்கும் என வாதிடப்பட முடியும்.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் வித்தியாசமான இனத்துவ மதச் சமூகங்களின் புவியியல் சார்ந்த இட அமைவும் குடித்தொகைப் பெருக்கமும் மதங்களுக்கிடையிலான உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முக்கியமான நிபந்தனைகளாகும். இது குறிப்பாக முஸ்லிம் பதிலளிப்பவர்கள் வெளிப்படுத்திய மனநிலைகளிலிருந்து பிரதிபலித்தது. நான்கு மாவட்டங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள தமிழ் சமூகத்தின் செயற்பாடுகள், உணர்வுகள், இனத்துவ - மத அவநம்பிக்கை மற்றும் பாதுகாப்பின்மையை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்ட போதிலும், குறிப்பாக மன்னார் யாழ்ப்பாண முஸ்லிம்கள் தங்களது மாவட்டங்களில் அவர்கள் துன்பப்படுகின்ற சிறுபான்மையினர் என்ற நிலையில் காணப்படுவதாகவும் அவர்களது உரிமைகள் மீளப் பெற்றுக்கொள்ளப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும் என அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையிலிருந்து தெரிவிக்கின்றனர். மாறாக, மாத்தறை நகரப்றபுர முஸ்லிம் பதிலளிப்பவர்கள் சிங்கள சமூகத்திற்கு இருக்கின்ற தவறான புரிதல்களை நீக்கி, முஸ்லிம்கள் தொடர்பான சாதகமான தோற்றத்தை நிர்மாணிப்பதற்கு, தங்களது செயற்பாடுகள் மூலமாக முஸ்லிம்கள் இரக்கமுள்ளவர்கள் என்பதனை நிரூபிப்பதற்கு உணர்வு பூர்வமான முயற்சிகள் எடுக்கப்படுவதாக குறிப்பிடுகின்றனர். எவ்வாறிருப்பினும், மாத்தறை நகர்ப்புறத்தை போல் அல்லாது முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற வெலிகமையில் இவ்வாறான விடயங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை.

நான்கு மாவட்டங்களிலும் கத்தோலிக்க - கிறிஸ்தவ (Non-RC), அதே போன்று இந்து - கிறிஸ்தவ உறவுகள் மற்றும் மாத்தறையில் பௌத்த - கிறிஸ்தவ உறவுகள், புரட்டஸ்தாந்து தேவாலயங்களின் நெறிமுறையற்ற மத மாற்றத்துடன் தொடர்புபட்டு காணப்படுகின்றது. இந்நான்கு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மூலம் மதத்திற்குள்ளேயான மோதலும் (இவ்வறிக்கையில் கவனம் செலுத்தப்படாத) ஒரு தனி சிறப்பம்சமாக எழுச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவர்களுக்குள்ளே காணப்பட்ட மோதல் தொடர்பாக மன்னார் மாவட்டத்திலேயே அதிகமாக கூறப்பட்டது. குறிப்பாக கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து தேவாலயங்களுக்கும் இடையில் உடலியல் வன்முறைகளுடன் மோதல் தோற்றம் பெற்றுள்ளதுடன் புரட்டஸ்தாந்து தேவாலயங்களுக்கு இடையிலும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும், இத்தகைய மோதல்கள் கிராமிய மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிராந்தி அல்லது பிரதேச மத தேசியவாதத்திற்கு மன்னார் மாவட்டம் ஓர் உதாரணமாகும். ஏனெனில், இம்மாவட்டம் ஒரு கத்தோலிக்க மாவட்டமாகவே அடையாளப்படுத்தப்படுகிறது. மன்னாரில் உள்ள பெருமதிப்பு வாய்ந்த

மடு தேவாலய சந்நிதானம் இதனை அடையாளத்தின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மன்னாரில் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக காணப்படுவதோடு, நிர்வாகம், அரசியல் அதிகாரம் யாவும் இங்குள்ள பிஷொப் மற்றும் கத்தோலிக்க போதகர்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகக் காணப்படுவதனால் இது கத்தோலிக்க வாதத்தோடு தொடர்பு பட்டதாகவே நோக்கப்படுகின்றது. போருக்குப் பிந்திய சூழ்நிலையில் கிறிஸ்தவ சிலைகளுக்கு அருகாமையில் கடவுள் கணேஷரின் சிலையும் வைக்கப்பட்டு, (பிற்போக்கு வாதிகள்) இந்து தேசிய வாதம் எழுச்சி பெற்றமையானது பொது இடங்களை கிறிஸ்தவ மயமாக்குவதற்கு சவாலாகக் காணப்பட்டது. மன்னாரில் இவ்வகையான வெளிப்படுத்தல்கள் இருந்த போதிலும் அம்பாறை, மாத்தறை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் கிறிஸ்தவ மதத்திற்கு நெறிமுறையற்ற முறையில் மத மாற்றம் செய்யப்படும் பிரச்சினையைத் தவிர ஏனைய விடயங்களில் இந்து கிறிஸ்தவ உறவானது சகிப்புத் தன்மையுடனும் மனப்பூர்வமானதாகவும் காணப்பட்டது.

பௌத்த மதத்திற்குள்ளேயான மோதலானது அடிப்படைவாதிகளுக்கிடையில் மட்டுமன்றி, சாதாரண பௌத்தர்களுக்கும் பௌத்த குருமார்களுக்கிடையிலும் வெளிப்படுவது முக்கியமான ஒரு காரணியாகும். அதே போல் இது ஒவ்வொரு தனிநபர்களுக்குள்ளேயும் பாரம்பரிய பௌத்த பெறுமானங்களோடும் அடிப்படைவாத செல்வாக்கோடும் போரிடுவதற்கான நிலையை ஏற்படுத்தியுள்ளது. மாத்தறை மற்றும் அம்பாறையிலுள்ள சுதந்திரமான பௌத்த பதிலளிப்பவர்கள், அடிப்படைவாத குழுக்களின் எதிர்ப்பின் காரணமாக, அவர்களின் மதங்களுக்கிடையிலான செயற்பாடுகளுக்கு சவால் ஏற்பட்டுள்ளதாகவும், அடிப்படைவாதத்தை எதிர்ப்பதற்கு அவர்கள் உதவியற்றவர்களாகவும் உள்ளதாகவும் வெளிப்படுத்தினர்.

மதங்களுக்கிடையிலான நெருக்கடிகள் மற்றும் மோதலுக்கான காரணங்களை (மேயரின் மோதலுக்கான களங்கள்) பேரின பிராந்திய கண்ணோட்டத்தில் அணுகுகின்ற பொழுது, மன்னார், அம்பாறை போன்ற இரு மாவட்டங்களிலும், வேறுபட்ட மத சமூகங்களுக்கிடையில் அதிகாரம், குழு அடையாளம், நிலம் மீதான வாக்குவாதங்கள் அரசியல், பொருளாதார, உளவியல் (உதாரணம், முஸ்லிம்களின் பரவுகை தொடர்பான பயம், ஏனைய மதங்களின் ஐதீகம் தொடர்பான தவறான புரிதல்கள், ஆதிக்க குழுவாக இருந்தும் அடையாளத்தை இழப்பதான பயம்) சார்ந்த நிலைமைகளினாலேயே சாத்தியமாக்கப்பட்டன. அது போலவே, மாத்தறை மாவட்டத்தில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம் சமூகத்தினருக்கும் இடையே வர்த்தகப் போட்டி, குழு அடையாள அடிப்படையிலான மனத்தாங்கல்கள் போன்றவற்றிற்கு பொருளாதார மற்றும் உளவியல் சார்ந்த நிபந்தனைகளே காரணமாகும். யாழ்ப்பாணத்தில், முஸ்லிம்களுக்கும் தமிழ் அரசியல் நிர்வாகத்திற்குமிடையே காணி தொடர்பான வாக்குவாதம் தோன்றுவதற்கு அரசியல் நிலைமைகளே காரணமாகும். மேலும், இந்துக்குள்ளேயான உறவானது

மாவட்டத்திற்குள்ளே, கலாசசார, பொருளாதார, அரசியல் நிலைமையினால் உருவாக்கப்பட்டுள்ள சாதி என்பதை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட பாரபட்சத்தின் மூலம் பாதிக்கப்பட்டது. மேலும், யாழ்ப்பாணத்தில் இந்து - பௌத்த உறவானது தமிழ் சமூகத்தின் தனித்தன்மை, காணி, அடையாளம் என்பவற்றிற்கான வாக்குவாதத்தினை அடிப்படையாக வைத்து வடிவமைக்கப்படுவதற்கு அரசியல் நிலைமையான இராணுவமே மீண்டும் ஒரு முறை காரணமாகின்றது.

பின்பற்றப்படுகின்ற மோதல் தீர்வு பொறிமுறைகள் மற்றும் உத்திகளில் ஒவ்வொரு மாவட்டத்தின் நிலைமைகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் பின்பற்றப்படுகின்ற மோதல் தணிப்பு உத்திகளும் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மோதல் தீர்வு பொறிமுறைகள் வேறுபட்டுள்ளதாகவும் அவை சட்ட அமுலாக்கல் மற்றும் அரச பொறிமுறைகளில் சமூகங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையிலுமே தங்கியுள்ளது என நேர்காணல் தெளிவுபடுத்துகின்றது. ஒரு வகையில் இது சுவாரஷ்யமானதாக இருந்தாலும் முக்கியமானதுமாகும். அதாவது, மன்னாரில் மதங்களுக்கிடையிலான சர்ச்சைகள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் அங்குள்ள உள்ளூர் கத்தோலிக்க அரச நிருவாகிகளின் நடுநிலைமையில் காணப்படும் நம்பிக்கை குறைபாட்டின் காரணமாக வாய் மொழி மூலமான தீர்வுப் பொறிமுறைகளை விடவும் சட்ட ரீதியான தீர்வுகளைப் பெறவே முற்படுகின்றனர். மாறாக மதங்களுக்கடையிலான சர்ச்சைகள் தேசத்தின் பௌத்த அடையாளத்திற்கு சவாலாகக் காணப்படுகின்ற காரணத்தால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள், சட்ட முறைமைகள் தொடர்பாக குறைந்தளவு நம்பிக்கையே அம்பாறை, மாத்தறை மாவட்டங்களில் நிலவுகின்றது. மேலும், மதப்போட்டிகள் மற்றும் தொல்பொருளுடன் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய கருத்தாடல்கள், அரசியல்வாதிகள், பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களின் பங்குபற்றுதலுடன் பேரின மட்டத்தில் நோக்கப்படுகின்றன. இது குறித்த நிலைமை தொடர்பாக பல்வேறுபட்ட புரிதல்களை உருவாக்குவதோடு, மோதலையும் உக்கிரப்படுத்துகிறது. மன்னார் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான சம இருப்பை விருத்தி செய்யும் நுட்பமான உத்திகள் மதங்களுக்கிடையிலான குழுக்கள் மற்றும் கல்வி முயற்சிகள் ஊடாக பின்பற்றப்படுகின்றன. ஆனால், இந்த அணுகுமுறைகள் மோதலைத் தீர்ப்பதற்கான போதாத அல்லது வரையறுக்கப்பட்ட கொள்திறனையே கொண்டுள்ளதாக கருதப்படுகிறது. இந்தக் குழுக்களுக்கும் முயற்சிகளுக்கும் வரவேற்பு உள்ளதால் அவை வலுப்படுத்தப்பட வேண்டும் என நேர்காணல்கள் பரிந்துரைக்கின்றன.

மதங்களுக்கிடையிலான மோதலைத் தணித்தல் அல்லது மோதலை விருத்தி செய்வதில் பெண்களின் வகிபாகமும் ஒவ்வொரு மாவட்டத்தின் நிலைமைகளுக்கு ஏற்பவே

தீர்மானிக்கப்படுகின்றது என்பது மீண்டும் நிரூபனமாகின்றது. மற்ற மதச் சமூகங்களின் உறுப்பினர்கள் தொடர்பாக (நேர் மறையான, எதிர் மறையான) உறுதியான அபிப்பிராயங்களை பெண்கள் வைத்துள்ளதாக தேடல்கள் காட்டுகின்றன. அது போலவே, இவர்கள் தங்களது சுற்று வட்டாரங்களில் மதங்களுக்கடையிலான மோதல்களில் ஏற்படும் சிறு சிறு வித்தியாசங்கள் தொடர்பாகவும் விழிப்புணர்வோடு உள்ளதோடு, சில வேளைகளில் மதங்களுக்குள்ளேயான வன்முறை செயற்பாடுகளிலும் சுறுசுறுப்பாகப் பங்கேற்கின்றனர். மதங்களுக்கியிலான மன்றங்கள், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் போன்றவற்றில் அவர்களது முகவர் நிலையங்களை ஏற்றுக் கொள்ளும் தன்மையிலும், பங்கேற்றலிலும் ஏற்றத்தாழ்வு காணப்படவே செய்கிறது. இவ்வேற்றத்தாழ்வானது வெறுமனே அவர்களது இனத்துவ மதப் பின்னணிகளை வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை. அவர்களது சாதி, கலாசாரம், சமூகத்தில் அவர்களது நிலைமை மற்றும் புவியியல் இட அமைவும் அதில் செல்வாக்கு செலுத்துகிறது. அம்பாறை மற்றும் மன்னார் மாவட்டத்தில் கிராமப் புறங்களில் உள்ள முஸ்லிம் பெண்கள் மதங்களுக்கிடையிலான பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல்களை ஆரம்பித்து வைப்பதற்கும் அதற்கான தீர்வுகளைத் திட்டமிடுவதற்கும் குறைந்த முகவர் நிறுவனங்களையே கொண்டு காணப்படுகின்ற பொழுதிலும், மாத்தறை நகர்ப்புறத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் அதிக உற்சாகத்துடன் செயற்பட்டு வருகின்றனர். இதேபோல் யாழ்ப்பாணம், அம்பாறையில் உள்ள இந்துப் பெண்கள் மன்னாரில் இருப்பவர்களை விடவும் உள்ளூர்ப் பெண்கள் குழுக்களில் அதிகமாக தொடர்புபடுகின்றனர். கிறிஸ்தவ மற்றும் பௌத்த பெண்கள், தரவுகளால் குறிப்பிட முடியாத கடினமான அளவுக்கு மதங்களுக்கிடையிலான விவகாரங்களில் தொடர்புபடுவதற்கு சீரான திறனைக் கொண்டிருந்தனர் என்பதனை வெளிப்படுத்தி நிற்கின்றன. இருந்த போதிலும், அவர்களது முகவர் நிறுவனங்களால் கருதப்படாத தேடல்கள் மூலம் வெளிக்காட்டப்படும் இன்னுமொரு முக்கியமான விடயம் யாதெனில், பெண்கள், மோதல் மற்றும் சமாதானத்தில் ஒரு முகவராக காணப்படுவதனால் அவர்கள் மதங்களுக்கிடையிலான குழுக்கள் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறைகளில் அதிகமாக பங்கேற்க முடியும் என்பதாகும்.

ஓர் இனத்துவ சமூகத்தின் காணிகள், அடையாளம், அதிகாரங்கள் இன்னொரு சமூகத்தினால் பல்வேறு மட்டங்களில் ஆக்கிரமிக்கப்படும் போது பல்வேறுபட்ட வடிவங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள் தோற்றம் பெறுகின்றன என முடிவாக விபரிக்க முடியும். இது உள்ளூர் அரசாங்க கட்டமைப்புக்களின் செயல்கள், செயலின்மைகள் போன்றவற்றை வடிவமைக்கும் ஆட்சி செய்கின்ற இன உணர்ச்சி கொண்ட பெரும்பான்மைத்துவங்களால் தேசிய மற்றும் உள்ளூர் நிலைமைகளை

சாத்தியமாக்குவதற்கு வசதியளிக்கப்படுவதோடு, தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இயங்கும் அரசியல் தலைமைகளாலும் சுரண்டப்படுகின்றது. ஒரு மதத்திற்கு மற்றைய மதத்தின் மீது தவறான கண்ணோட்டம் காணப்பட்டாலும் ஒரு மாவட்டத்தில் இருக்கின்ற இனத்துவ மதப் பெரும்பான்மையே அவை வன்முறைகளாக வெளிப்படுவதற்கு காரணம் என இவ் ஆய்வின் தேடல்கள் காட்டுகின்றன. ஒரு மதம் இன்னொரு மதம் தொடர்பாக தவறான கருத்தை உருவாக்கிக் கொள்வதற்கும் அது மோதலாக பரிணமிப்பதற்கும், அரசாங்க உத்தியோகத்தர்கள், மதத் தலைவர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள், வர்த்தகப் போட்டி, வகுப்பு, சாதியில் உள்ள சமூக ஏற்றத் தாழ்வுகள், வறுமை, காணி மற்றும் சமூக ஊடகங்கள் தவறான வழியில் பயன்படுத்தப்படுதல் போன்ற மையக் காரணிகளே வசதியளித்தன. ஆகவே, மதங்களுக்கிடையிலான மோதல்கள் மற்றும் வன்முறைகளை எதிர்ப்பதற்கு அரசாட்சி கட்டமைப்பு சீர்திருத்தங்கள், நீதியின் நியாயமான மேலாண்மை போன்றவையே முழு நிறைவான சிறந்த கொள்கையாக காணப்படும். எவ்வாறிருப்பினும், நான்கு மாவட்டங்களிலும் மதங்களுக்கிடையிலான நெருக்கடிகள் மற்றும் மோதலுக்கான தீர்வைக் காண்பதற்காக நிறுவன ரீதியான சீர்திருத்தத்தில் அரசியல் ஆர்வங்களின் குறைபாடு, மதங்களுக்கிடையிலான குழுக்கள், சிவில் சமூக ஒழுங்கமைப்புக்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கிடையிலான திறன்களை அதிகரித்தல் மற்றும் உள்வாங்குதல் போன்றன குறைந்த இயலுமைக் கொண்டதாகக் காணப்படுவதனால், மோதலுக்கான உரிய தீர்மானங்களாகவன்றி, மாற்றீட்டு தீர்மானங்களாகவே நோக்கப்படுகின்றன.

**References**

Appadurai, A. 1998. "Dead Certainty: Ethnic Violence and the Era of Globalization." *Nethra*, Vol. 2(2). Colombo: ICES.

---. (2006). *Fear of Small Numbers: An Essay on the Geography of Anger*. London: Duke University Press.

Centre for Policy Alternatives. 2013. "Report: Attacks on Places of Religious Worship in Post-War Sri Lanka." Colombo: CPA.

Chatterjee, P. 1991. *Whose Imagined Commmunity? The Nation and Its Fragments: Colonial and Postcolonial Histories*. New Jersey: Princeton University Press.

Czada et al. 2012. *Religions and World Peace: Religious Capacities for Conflict Resolution and Peacebuilding.* Baden-Baden: Nomos.

De Votta, N. 2004. *Blowback: Linguistic Nationalism, Institutional Decay and Ethnic Conflict in Sri Lanka*. California: Stanford University Press.

---. 2018. "Religious Intolerance in Post-Civil War Sri Lanka." *Asian Affairs.* DOI: 10.1080/03068374.2018.1467660. p. 1-22.

Dewasiri, N. R. 2016. *New Buddhist Extremism and the Challenges to Ethno-Religious Coexistence in Sri Lanka*. Colombo: ICES.

Dikeç, M. 2012. "Space as a mode of political thinking." *Geoforum*, 43. 669-676.

Gunatilleke, G. 2018. *The Chronic and the Entrenched: Ethno-Religious Violence in Sri Lanka*. Colombo: ICES.

---. 2015. *The Chronic and the Acute: Post-War Religious Violence in Sri Lanka*. Colombo: ICES.

Hasbullah, S. 2001. *Muslim Refugees: Forgotten People in Sri Lanka's Ethnic Conflict.* Nuraicholai: Research and Action Forum for Social Development.

Hasbullah, S. and Benedikt Korf. 2012. "Muslim geographies, violence and the antimonies of community in eastern Sri Lanka." *The Geographical Journal*, doi: 10.1111/j.1475-4959.2012.00470.x. 1-12

Herath, D. and Harshana Rambukwella. 2015. *Self, Religion, Identity and Politics: Buddhist and Muslim Encounters in Contemporary Sri Lanka*. Colombo: ICES.

Holt, J.C. 2015. "Militant Buddhists and Minority Others: Ethnic Conflict in Theravada Buddhist South and Southeast Asia." In *Ethnic Conflict in Buddhist Societies in South and Southeast Asia: The Politics Behind Religious Rivalries*, Ed. K.M. de Silva. 1-24. Kandy: ICES.

Johnson, D. 2012. "Sri Lanka – a divided Church in a divided polity: the brokerage of a struggling institution." *Contemporary South Asia*, Vol. 20(1). 77-90.

Knott, K. 2010. "Religion, Space and Place: The Spatial Turn in Research on Religion." *Religion in Society: Advances in Research,* Vol. 1. 29-43.

Mayer, W. 2013. "Religious conflict: definitions, problems and theoretical approaches." In *Religious Conflict from Early Christianity to the Rise of Islam*. 1–19. Berlin: De Gruyter.

McGilvray, D. 2003. "Tamil and Muslim Identities in the East." *Marga* Vol. 1(1). 79-116.

Nagaraj, V and Farzana Haniffa. 2017. *Towards Recovering Histories of Anti-Muslim Violence in the Context of Sinhala – Muslim Tensions in Sri Lanka*. Colombo: ICES.

Nesiah, D. 2011. "The Quest for Redemption: The Story of the Northern Muslims: Final Report of the Citizens Commission on the Expulsion of Muslims from the Northern Province by the LTTE in October 1990." Colombo: Law and Society Trust.

Obeysekera, G. 2004. *Buddhism, Nationhood and Cultural Identity: The Premodern and Pre-colonial Formations*. Colombo: ICES.

Pinto, L. 2015. *Being a Christian in Sri Lanka: Historical, Political, Social and Religious Considerations*. Bloomington: Balboa Press.

Shepardson, C. 2014. *Controlling Contested Places: Late Antique Antioch and the Spatial Politics of Religious Controversy*. University of California Press; London.

Silva, K.T. et al. 2016. *Religious Interface and Contestations between Buddhists and Muslims in Sri Lanka*. ICES; Colombo

Spencer et.al. 2015. *Checkpoint, Temple, Church and Mosque: A Collaborative Ethnography of War and Peace*. Colombo: SSA.

Spencer, J. (2012). "Performing democracy and violence, agonism and community, politics and not politics in Sri Lanka." *Geoforum*, 43. 725-731.

Stark, R and Roger Finke. 2000. *Acts of Faith: Explaining the Human Side of Relgion*. Berkeley: University of California Press.

The Hindu. 6th December, 2002. "Temple for Kethu dedicated to Siva at Mannar." Online edition. https://www.thehindu.com/thehindu/fr/2002/12/06/stories/2002120601140600.htm

Tilakaratne, A, 2015. "Buddhism and Ethnicity-related Tensions in Sri Lanka: Doctrinal Position and Role of Buddhism." In *Ethnic Conflict in Buddhist Societies in South and Southeast Asia: The Politics Behind Religious Rivalries*, Ed. K.M. de Silva. 109-121. Kandy: ICES.

Wickramasinghe, R. 2016. *Confronting Intolerance: Continued violence against religious minorities in Sri Lanka*. Sweden: Minority Rights Group International.

**பின்னிணைப்பு: ஆய்வு மாதரி எடுத்தல்**

| முறை | மன்னார் | யாழ்ப்பாணம் | அம்பாறை | மாத்தறை |
|---|---|---|---|---|
| முக்கியமான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நேர்காணல்கள் | 1. மன்னார் மதங்களுக்கு இடையிலான மன்றத்தினை பிரதிநிதிப்படுத்துபவர் (இந்து ஆண்)<br><br>2. CBO வின் கள உத்தியோகத்தர்<br><br>3. மூன்று CSO களின் மூன்று பிரதிநிதிகள் (ஒரு பெண், இரண்டு ஆண்கள்)<br><br>4. இந்துக் கோவிலின் கூட்டுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் (இந்து, ஆண்)<br><br>5. கிறிஸ்தவ மதப் போதகர் (ஆண்)<br><br>6. கிராம சேவக அலுவலகர் (அரசாங்க கத்தோலிக்க ஆண்)<br><br>7. மன்னார் மதங்களுக்கிடையிலான மன்றத்தின் பிரதிநிதி (கத்தோலிக்கர், ஆண்)<br><br>8. இரண்டு விகாரைகளின் இரு தலைமைப் பிக்குகள் (ஆண்)<br><br>9. பௌத்த விகாரையில் முகாம் இட்டிருந்த ஒரு சிவில் பாதுகாப்பு படை அதிகாரி (ஆண்) | 1. பௌத்த பிக்கு (ஆண்)<br><br>2. மௌலவி (ஆண்)<br><br>3. சுயேட்சை ஊடகவியலாளர் மற்றும் கத்தோலிக்க சங்கத்தின் உறுப்பினர் (ஆண்)<br><br>4. WRDS இன் முன்னாள் தலைவர் (இந்து, பெண்)<br><br>5. அரசியல்வாதி (இந்து)<br><br>6. தேசிய ஒருமைப்பாடு மற்றும் மீள் நல்லிணக்க அமைச்சின் பிரதிநிதி, கிளிநொச்சி (பௌத்தர்) | 1. மத போதகர்கள் (ஒரு ஆண், ஒரு பெண்)<br><br>2. கத்தோலிக்க கன்னியாஸ்திரி<br><br>3. வழக்கறிஞர் (முஸ்லிம்,ஆண்)<br><br>4. பௌத்த பிக்கு | 1. பௌத்த பிக்கு<br><br>2. Non-RC மதப்போதகர்<br><br>3. மௌலவி |

| | | | | |
|---|---|---|---|---|
| குழுக் கலந்துரையாடல் | 1. WRDS (மூன்று இந்து பெண்கள்)<br><br>2. WRDS (ஐந்து முஸ்லிம் பெண்கள்)<br><br>3. WRDS (எட்டு கத்தோலிக்க பெண்கள்)<br><br>4. முஸ்லிம் வழக்கறிஞர் மற்றும் குறித்த விடயத்துடன் தொடர்பு இல்லாத நபர்கள் (மூன்று ஆண்கள்) | 1. WRDS (ஐந்து இந்து பெண்கள்)<br><br>1. WRDS (நான்கு இந்து பெண்கள்) | 1. பெண்கள் சங்கங்கள் (CBO, 17 இந்து பெண்கள்)<br><br>2. ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்கள், இந்து சங்கங்களின் முன்னாள் அங்கத்தவர்கள், கிராம சேவக அலுவலக அதிகாரிகள் (9 ஆண்கள், ஒரு கத்தோலிக்கப் பெண்)<br><br>3. WRDS மற்றும் அரசாங்க தரப்பு (12 முஸ்லிம் பெண்கள்)<br><br>4. அரச ஊழியர்கள், சிவில் சங்க உறுப்பினர்கள், மதத் தலைவர்கள் (16 முஸ்லிம் ஆண்கள்)<br><br>5. கிராம அபிவிருத்தி மன்றத்தின் (தீகவாபி) பௌத்த ஆண்கள் (8), பெண்கள் (12) | 1. இஸ்லாமிய சங்கத்தின் உறுப்பினர்கள் (7 பெண்கள், மாத்தறை)<br><br>2. CBO மற்றும் சமூக மன்றங்களின் பௌத்த பெண் உறுப்பினர்கள், ஆசிரியர்கள், வர்த்தகம் புரியும் பெண்கள் (மாத்தறை நகர்ப்புறத்திலுள்ள 8 பெண்கள்)<br><br>3. இஸ்லாமிய நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் (வெலிகமையிலிருந்து 3 பெண்கள், 5 ஆண்கள்)<br><br>4.பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், CBO வின் உறுப்பினர்கள், மதங்களுக் கிடையிலான குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி, (வெலிகமை) போன்ற தரப்புக்களை உள்ளடக்கிய பௌத்த ஆண்கள் (11), பெண்கள் (9) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | *5.* தெனியாய DIRC உறுப்பினர்களான இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ ஆண்கள் *(7)* மற்றும் பெண்கள் *(4)*<br><br>*6.* தெனியாய DIRC உறுப்பினர்களான பௌத்த ஆண்கள் *(8)*, பெண்கள் *(2)* |

# இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள்

இலங்கையின் மன்னார், யாழ்ப்பாணம், அம்பாறை மற்றும் மாத்தறை போன்ற மாவட்டங்களில் ஆண்கள், பெண்களுடன் மேற்கொள்ளளப்பட்ட பண்பு சார் நேர்காணல்கள், குழுக்கலந்துரையாடல் மூலம் இவ்வாய்வறிக்கை வரையப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் மற்றும் பௌத்தர்களிடையே மோதலை உருவாக்குவதில் வாக்குவாதத்தை ஊடறுக்கின்ற களங்கள், முகவர்கள் மற்றும் அதனை சாத்தியப்படுத்தும் நிலைமைகள் தொடர்பாகவும் விளக்குகிறது. இது மதங்களுக்கிடையிலான மோதல் தொடர்பான பகுப்பாய்வு, அதே போன்று மோதல் தீர்வுப் பொறிமுறைகளில் பெண்கள் பங்கேற்றலின் வகிபாகம் போன்றவற்றை சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றது.

இவ்வாய்வில், நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல் எவ்வாறு வேறுபட்ட முறையில் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பாகவும் மோதலுக்கான காரணங்கள் பொதுவானவையே என அடிக்கோடிட்டுக் காட்டியும் கலந்துரையாடப்படுகின்றது. ஓர் இனத்துவ சமூகத்தின் நிலங்கள், அடையாளம், அதிகாரம் என்பன இன்னொரு இனத்துவ சமூகத்தால் வேறுபட்ட முறைகளில் ஆக்கிரமிக்கப்படும் போது மதங்களுக்கிடையிலான மோதல்கள் ஏற்படுகின்றது என இவ்வாய்வு வாதிடுகின்றது. அதாவது, நிறுவனமயப்படுத்தப்பட்ட இனத்துவ - மத பெரும்பான்மை, மத அடிப்படைவாதம், பிராந்திய இனத்துவ - மத தேசியவாதம், வர்த்தகப் போட்டி, சாதி, வறுமை போன்ற கலாசார அம்சங்கள் போன்றவை தேசிய, பிராந்திய நிபந்தனைகளால் வசதியளிக்கப்பட்டு, மோதலை சாத்தியமாக்குகின்றன. இத்தகைய இயங்கு நிலைகள் மோதலைத் தணிப்பதற்கான சமூகத்தின் அணுகுமுறைகளையும் வித்தியாசமான முறையில் வடிவமைக்கின்றது. ஒரு மதத்திற்கு எதிராக முன்கூட்டிய தீர்மானங்களும் தவறான கருத்துக் கண்ணோட்டங்களும் இருந்தாலும், இவை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இனத்துவ மத பெரும்பான்மையினராலேயே வன்முறையாக வெளிப்படுவதற்கு ஏற்ப தளங்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன என்பதுடன் இந்த ஆய்வு முடிவுக்கு வருகின்றது.

INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES

equitas
educate. empower. change.

ISBN 978-955-580-230-7

Horizon Printing (Pvt) Ltd.